# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 018 வள்ளுவர் ஆண்டு: 2044 கார்த்திகை 28, சனி 14.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C



பக்கம் 05

சேவையை முடித்து யாழிலிருந்து வெளியேறுகிறது 'அக்றிக்கோ'



பக்கம் 07

தூக்கிலிடப்பட்டார் போர்க்குற்றவாளி



பக்கம் 22

மைலோ கிண்ணத்துக்கான இறுதி ஆட்டம் இன்று



பக்கம் 23

தொடரை இழந்தாலும் இந்தியா முன்னிலையில்

## போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து நம்பகமான விசாரணை தேவை

*இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றில் தீர்மானம்*

ஸ்ராஸ்பேர்க், டிசெ. 14
போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நம்பகரமான விசாரணை வேண்டும். அத்துடன் வடக்கு - கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியத்தினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தது. அதனை இலங்கை அரசு செயற்படுத்தாத நிலையில், ஸ்ராஸ்போர்க்கில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு உடனடியாகவே நிராகரித்துள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எப்போது நடை

2ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை மூலமே 'அக்ஷன் பாம்' கொலைக்கு நீதி

*உறவுகள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 14
சர்வதேச விசாரணைகள் மூலமே தங்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்கும் என்று நம்புவதாக படுகொலை செய்யப்பட்ட 'அக்ஷன் பாம்' தொண்டு நிறுவனப் பணியாளர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

2ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண ஆளுநரை நீக்கச் சட்ட நடவடிக்கை

*மத்திய அரசும் அவரும் அரசமைப்பை மீறி செயற்படுவதாக நாடாளுமன்றில் குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெம்பர் 14
வட மாகாணசபையின் ஆளுநர் திட்டமிட்ட அடிப்படையில் அரசமைப்பை மீறிச் செயற்படுகின்றார் என அரச மைப்பிலுள்ள விடயங்களை ஆதாரங்காட்டி நேற்று சபையில் பேசினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன். சட்ட நுணுக்கங்கள் தெரியாத - அரசமைப்பை மீறிச் செயற்படும் ஆளுநரை நீக்குவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை எடுக்கவேண்டிய தேவை இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற போக்குவரத்து அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பிரதம செயலாளர் நியமனம், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம் போன்ற வற்றை மேற்கொள்ளும்போது முதலமைச்சரின் இணக்கம் அவசியம் என அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த விதிமுறை வடக்கில் பின்பற்றப்பட வில்லை. அப்படியானால் யார் அரசமைப்பை

2ஆம் பக்கம் பார்க்க

## 24 மணி நேரமும் தமிழ் பொலிஸார் கடமையில்


யாழ்ப்பாணம், டிசெ.14
யாழ்ப்பாணத்தில் 24 மணி நேரமும் சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் பொலிஸார் கடமையில் அமர்த்தப்படவுள்ளனர். எந்த நேரமும் பொலிஸாரோடு தமிழில் மக்கள் தொடர்பு கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பொறுப்பேற்றுள்ள றொஹான் டயஸ் தெரிவித்தார்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இங்கு இடம்பெறும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் சிக்கலுக்குரிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள்

2ஆம் பக்கம் பார்க்க

## கடும் மழைக்கு மத்தியிலும் தொண்டர்கள் போராட்டம்

*வைத்தியசாலைப் பணிகள் நேற்று பாதிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ். போதனா வைத்தியசாலையில் தொழில்புரியும் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்றுக்காலை முதல் கடும் மழைக்கு மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அவர்கள் கூறியுள்ளனர்.
இந்தப் போராட்டத்தால் சத்திர சிகிச்சைப் பிரிவில் அவசர தேவை கருதிய சிகிச்சையைத் தவிர வேறு எந்தச் சத்திரசிகிச்சைகளும் இடம்பெறவில்லை.
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் பல வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாளுக்கு 175 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது அது போதாத நிலையிலும் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்று கூறியே தொண்டர்கள் இந்தப் பணியில் முன்னர் இணைத் துக் கொள்ளப்பட்டனர்.
எனினும் தற்போது ஜீ.சீ.ஈ.



2ஆம் பக்கம் பார்க்க

## 'சில்மிஷச்' சிப்பாய் சிக்கினார் மக்களிடம்

*மன்னிப்புக்கோரினார் முகாம் பொறுப்பதிகாரி*



யாழ்ப்பாணம், டிசெ. 14
பெண்களுடன் தவறாக நடக்க முற்பட்ட இராணுவச் சிப்பாயை பொதுமக்கள் மடக்கினர். இதன்பின் குறித்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மக்களிடம் மன்னிப்புக் கோரி சிப்பாய் விடுவித்ததுடன், உடனடியாக வேறிடத்துக்கும் மாற்றம் செய்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுக்காலை வட்டுக்கோட்டை வடக்கு, பிளவத்தை பகுதியில் இடம்பெற்றது.
பிளவத்தைக் கேணிக்கு அருகில் இராணுவத்தினரின் சிறிய முகாம் ஒன்று அமைந்துள்ளது. அந்த முகாமுக்கு அருகிலுள்ள வீட்டில் பெண்கள் குளிப்பதை இராணுவச் சிப்பாய் ஒருவர் மறைவாக பார்த்துக் கொண்டிருந்துள்ளார். இதனை அவதானித்த ஊர் மக்கள் குறித்த சிப்பாயை பிடித்து முறையாகக் 'கவனித்தனர்.


2ஆம் பக்கம் பார்க்க

## தனக்கு உள்ள அதிகாரங்களை விளக்கினார் வடக்கு ஆளுநர்

*பதவியேற்று 4 வருடங்களின் பின்னர்*

யாழ்ப்பாணம், டிசெ. 14
ஆளுநராகப் பதவியேற்று 4 வருடங்களின் பின்னர் தனக்குள்ள அதிகாரங்கள் தொடர்பில், வடக்கு மாகாண அரச அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான ஜி.ஏ.சந்திரசிறி.
வடக்கு மாகாண சபை மக்க

2ஆம் பக்கம் பார்க்க



*தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் விடுதலைப் போராட்ட வீரருமான நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. மண்டேலாவின் உருவப் படத்துக்கு முன்னால் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.* (கு-4)

# மாகாண முதலமைச்சர், உறுப்பினர்களுக்கு நேற்று வடமராட்சியில் அமோக வரவேற்பு

## *பருத்தித்துறை நவீன சந்தையும் திறந்து வைப்பு*

வடமராட்சி, டிசெ.14

வடக்கு மாகாண முதலமைச்சர் கவிவிக்னேஸ்வரன் மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ்.சிறிதரன் ஆகியோருக்கு வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றங்களினால் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரவிழாவும், பரிசளிப்பு விழாவும் நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்ற போது மாலிசந்தி மடத்துப் பிள்ளையார் கோயிலில் இருந்து பருத்தித்துறை வீதியில் உள்ள பிரதேச சபை வரை 'பாண்ட்' வாத்தியம், மேளம் நாதஸ்வர மங்கல ஓசையுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா உட்பட மாகாண சபை உறுப்பினர்களான எஸ். பசுபதிப்பிள்ளை, இ.ஆர்னோல்ட், கே.பரஞ்சோதி, வே.சிவயோகன், எஸ்.சுகிர்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், என்.சர்வேஸ்வரன் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.ஆனந்தராஜ், வடமராட்சிக்கு வெளியே உள்ள பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் முதலமைச்சர் விக்கினேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் அடுத்தடுத்து வந்து சேர்ந்தனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துக்கள் மாவீரர் மற்றும் போரில் மரணமடைந்த பொது மக்களுக்கான அக வணக்கத்தைத் தொடர்ந்து கரவெட்டி பிரதேச சபைச் செயலாளர் திருமதி எஸ். அன்னலிங்கம் வரவேற்புரையையும், சபைத்தலைவர் பொ.வியாகேசுவின் தலைமையுரையும் இடம்பெற்றது. தொடர்ந்து சபையினால் நடத்தப்பட்டு வரும் முன்பள்ளி மாணவ மாணவிகளின் வரவேற்பு நடனங்கள், மகிழ்வூட்டும் நடனங்கள், ஆங்கில தமிழ்மொழியிலான பேச்சுக்களும் இடம்பெற்றன.

அடுத்து மாகாண சபை உறுப்பினர்களான ஆர்னோல்ட், எம்.கே.சிவாஜிலிங்கம், க.பரஞ்சோதி, கே. பசுபதிப்பிள்ளை, என்.சுகிர்தன், வே.சிவயோகன், என்.சர்வேஸ்வரன் ஆகியோர் சபை உறுப்பினர்களாலும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு உப தலைவர் இ.சாந்தசொருபன், தலைவர் பொ.வியாகேசு ஆகியோரினாலும் மலர்மாலை சூடி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் மாகாண உறுப்பினர்களான கே.பசுபதிப்பிள்ளை, சிவயோகன், கல்வியமைச்சர் த.குருகுலராசா, சிறிதரன், மாவை சேனாதிராசா, முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினார்கள். பின்னர் கலைநிகழ்வுகளும், பரிசளிப்பும் நடைபெற்றன.

பிற்பகல் 1.30 மணியளவில் பருத்தித்துறையில் புதிதாக 5 கோடி 45 இலட்சத்து 43 ஆயிரத்து 677 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா எஸ். சிறிதரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் வடமராட்சிப் பிரதேச உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் பருத்தித்துறை சிவன் கோயில் முன்றலில் இருந்து மேள நாதஸ்வர வாத்தியங்கள் பட்டாசுகள் வெடிக்க பொய்க்கால் குதிரை நடனத்துடன் தும்பளை வீதி, மெத்தைக் கடைச் சந்தி, பருத்தித்துறை வீதி வழியாக நவீன சந்தையை அமைந்துள்ள பஸ் நிலைய சதுக்கம் வரை அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர்தேசியக் கொடியையும், நகர சபைத் தலைவர் நகர சபைக் கொடியையும், முதலமைச்சர் மாகாணக் கொடியையும் ஏற்றி வைத்தனர். முதலமைச்சர் நினைவுப் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து சந்தையை திறந்து வைத்தார். சபைத்தலைவர்கள் சபை உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியலைத் திரை நீக்கம் செய்து வைத்தார். பின்னர் முதலமைச்சர் சந்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து சந்தை மேல் மாடியில் சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உப தலைவரும் பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவருமான சி.பத்மநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, யாழ். பல்கலைக் கழக பொறியியல் பீடத் தலைவர் எஸ்.சிவகுமார், மாகாண செயலாளர்களில் ஒருவரான குரூஸ் ஆகியோரும் முதலமைச்சரும் உரையாற்றினார்கள்.

பிற்பகல் 3.30 மணியளவில் பருத்தித்துறை பிரதேச சபை உள்ளூராட்சி வார நிகழ்விலும் பரிசளிப்பு விழாவிலும், மந்திகை கண்ணகை அம்மன் கோயிலில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளிலும் முதலமைச்சர் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர். பின்னர் அங்கிருந்து சிலையடிச் சந்தைவரை பாண்ட் வாத்தியம், மேளம், நாதஸ்வரம் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். அங்கு பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சிவன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் அஸ்வின், முதலமைச்சர் உட்பட பலரும் உரையாற்றினார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(த-8-422)



*பருத்தித்துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைக் கட்டடத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நேற்றுத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.* (த-8)

# மண்டேலாவின் வழியினில் விடுதலைக்கு போராடுவோம்

## *அஞ்சலி நிகழ்வில் அழைப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.14

கல்விதான் எமது மிகப் பெரிய ஆயுதம். எமது இனத்தின் விடுதலைக்காகக் கல்வி வழியில் செல்வோம் எமது பலத்தைப் பயன்படுத்தி விடுதலைக்காக நெல்சன் மண்டேலாவின் வழியில் போராடுவோம் என்று தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன்.

மறைந்த தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அஞ்சலிக் கூட்டம் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்றது.

இதில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனது இனத்தை அடக்கி ஒடுக்கிய வெள்ளையர்களுக்கு எதிராக தென்னாபிரிக்கத் தலைவரான நெல்சன் மண்டேலா கடுமையாகப் போராடினார். ஆனால் இங்கு பலர் வெற்றி கண்டு விட்டோம் என்று கூறி ஏனையவர்களை அடக்கி ஒடுக்கும் நிலைதான் காணப்படுகிறது. இந்த நிலையை மாற்றி மண்டேலாவின் வழியைப் பின்பற்றினால் உலகின் பிரச்சினைகள் நீங்கிவிடும். கல்விதான் தமது மிகப் பலமான ஆயுதம் என்று மண்டேலா கூறியிருந்தார். அவ்வாறே எமது மிகப்பெரிய ஆயுதம் கல்வி, கல்வி அறிவு மூலமாக நாம் எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் பல்கலைக் கழக ஊழியர் சங்க இணைச் செயலாளர் ந.ஜெயக்குமார் உரையாற்றுகையில்,

27 வருடங்கள் நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து கடும் துன்பங்களை அனுபவித்தார். ஆனால் அவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படும் போது, கறுப்பினச் சூரியனாகவே உதித்தார்.

இளைஞர்களையும் சேர்த்து போராடினார். பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் பங்களிப்பை செய்தனர். சமூகத்தின் பொறுப்புக்களை அவர்கள் உணர்ந்து செயற்பட்டனர்.

தமது இன உரிமையைப் பாதுகாக்க மண்டேலா ஒரு தடவை தான் ஜனாதிபதியாக இருந்தார்.

இங்கு நாம் பல வேதனைகளைச் சுமக்கிறோம். எத்தனையோ வீரர்களின் உயிர்கள் புதைக்கப்பட்டுள்ளன. அவர்களை மேன்மைப்படுத்த வேண்டிய நாள் விரைவில் வந்து சேரும்.


ஒவ்வொருவருக்கும் நாற்காலிகள் கொடுக்கப்படும் போது அதனை அவர்கள் விசுவாசமாகப் பயன்படுத்த வேண்டும். ஜனநாயகப் போராட்டம் என்பது மன வலிமை பெற்றது. அதனை நன்றாகப் பயன்படுத்த வேண்டும். தலைவர்கள் முன்மாதிரியாக இருந்து மக்களை வழி நடத்த வேண்டும் - என்றார்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாச்சியார் செல்வநாயகம் உரையாற்றுகையில்,

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களினது சகல உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் அனைத்து உரிமைகளும் தமக்கு வேண்டும் என்று போராடியவர் தான் நெல்சன் மண்டேலா மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் சமாதானமாக வாழவும் அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும். மற்றவர்களை மதித்து வாழ்வதனாலேயே ஒருவன் சமூகத்தில் நல்ல மனிதனாக விளங்குகிறான் - என்றார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தனது உரையில்,

இந்த உலகமானது பல அடக்குமுறைகளையும், அநீதிகளையும் கொண்டுள்ளது. அதற்கு எதிராக போராட விடுதலை வேட்கைகள் உருவாகிக் கொண்டு இருப்பதும். வழமையானதாக உள்ளது. எமது போராட்டமும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக பல்வேறு காலத்தில் பல்வேறு வடிவில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகம் அதில் தொடர்புபட்டிருக்கிறத. எமது பல இளைஞர்களது உயிர்களாலும் இரத்தத்தாலும் எமது போராட்டம் பின்னிப் பிணைக் கப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரியும் என்றார். (த-4)



*தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அஞ்சலி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நேற்று மதியம் இடம்பெற்ற போது கலை அரங்குக்கு வெளியேயும் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டிருந்தது.*

# 30 இந்திய மீனவருக்கும் 20ஆம் திகதி வரை மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.14

கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி காங்கேசன்துறைக் கடற்பகுதியில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 30 இந்திய மீனவர்களின் விளக்க மறியல் இந்த மாதம் 20ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றபதில் நீதிவான் முன்னிலையில் இந்த மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன் போது அவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மீனவர்களின் விடுதலை தொடர்பான அறிவுறுத்தல் நீதிமன்றத்துக்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த வழக்கு 20ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-17)

# பிறருக்கு காயம் விளைவித்த 18 பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.மாவட்டத்தில் பிறரை அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

மோசடி செய்த குற்றச்சாட்டில் 2 பேரும், களவு எடுத்த குற்றச்சாட்டில் 6 பேரும், மது அருந்தி விட்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 9 பேரும், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 14 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 2 பேரும், பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவரும், சந்தேகத்தின் பேரில் 17 பேரும், போலி நகைகளை வங்கியில் அடகு வைத்த குற்றச்சாட்டில் 11 பேரும், உள்நாட்டுத்துவக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும் கைது செய்யப்பட்டனர். அவரவர் குற்றச்சாட்டுகளின் படி அபராதம் செலுத்தியும், பிணையில் விடுவித்தும், சிலர் விளக்க மறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்றார். (த-4)

# கடந்தவாரம் குடாநாட்டில் திருட்டுகள் அதிகரிப்பு

### 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிப்பு

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றெஹான் டயஸ் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உரும்பிராய் கிழக்கில் பெண் ஒருவர் அணிந்து சென்ற இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை இனந்தெரியாதோர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ்.பிறவுண் வீதியில் கடையொன்றை உடைத்து பெறுமதியான பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன. உடுவிலில் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக தாவடியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மானிப்பாயில் வீடு உடைத்து 51 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கோண்டாவில் மேற்கு பகுதியில் 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான ஓட்டோ திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது.

வேலணையில் கோயில் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான றேடியோவை திருடியுள்ளனர். இது தொடர்பில் மண்கும்பானைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். இளவாலையில் கடையொன்றை உடைத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இளவாலையில் வீடு புகுந்து 11 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் சிறுவன் ஒருவன் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியைத் திருடிச் சென்றுள்ளான். குறித்த சிறுவன் கைது செய்யப்பட்டதோடு அவனை கைதடியிலுள்ள சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரிடம் ஒப்படைக்க நீதிமன்று உத்தரவிட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)



அடாது மழை பெய்தால் என்ன, எந்தத்தடை வந்தால் என்ன விடாது கல்வியைத் தொடருவோம் என்று மழை வெள்ளத்தைப் பாராது எட்டிக் கடந்து கல்வி கற்கச் செல்லும் மாணவிகள். (வ-21)

### அனுமதியின்றி மாட்டிறைச்சி விற்றவர் மாட்டினார்

அனுமதி வழங்கப்படாத மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருந்த மாட்டிறைச்சிக் கடை வியாபாரி ஒருவர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் வசமாக மாட்டிக்கொண்டார். குறித்த வியாபாரியை எச்சரித்து மன்னிப்பு வழங்கிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் 22 கிலோ இறைச்சியைக் கைப்பற்றி அழித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் முத்திரையிடப்படாத மாட்டிறைச்சி கடைகளில் வைத்து விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து மானிப்பாய் சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது நவாலியிலுள்ள மாட்டிறைச்சிக் கடையில் முத்திரையிடப்படாத மாட்டிறைச்சி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டது. (வ-115)

# போரால் பாதித்த மக்களின் அபிவிருத்திக்கு இடமில்லை

### மாகாண சபை பட்ஜெட் குறித்து அஸ்மின் அய்யூப் கருத்து

யாழ்ப்பாணம், டிசெ.14

கொடிய போர், அழிவு என்பவற்றைச் சந்தித்த சமூகம் ஒன்றின் அபிவிருத்திப் பாதை முழுமைத் தன்மை வாய்ந்ததாக அமைய வேண்டும். சமூகத்தின் அனைத்துத் தளங்களையும் சென்றடையக் கூடியவாறு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். ஆனால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டமானது அவற்றை உள்ளடக்கவில்லை என்று வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வபையின் வரவு செலவுத்திட்ட ஆரம்ப விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

"வாக்களித்த மக்கள் தேர்தல் கால செயற்பாடுகளையும் கூட்டமைப்பினரின் கருத்துக்களையும் அவதானித்தே வாக்களித்தனர். தேர்தல் அறிக்கையில் போருக்குப் பின்னரான சூழலில் எமது சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்று வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம்.

உலகம் தன்னிறைவான அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்துகின்றது. மீளக்குடியேறுகின்ற ஒரு சமூக அமைப்பில் அதிகமான விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஆனால் எமது ஒதுக்கீட்டில் மீளக்குடியேற்றத்துக்கு எந்த வித இடமும் வழங்கப்படவில்லை. மாகாண வீடமைப்புக்கு 2 மில்லியன், ஆளுநரின் செலவினத்துக்கு 107 மில்லியன் ஒதுக்கப்பட்ட நிலையில் புனர்வாழ்வு, உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட மாற்று வலுவுடையோர், கணவனை இழந்தோர், அநாதைகள் குறித்து வரவு செலவுத் திட்டம் பேசுவதாகத் தெரியவில்லை.

இந்த வரவு செலவுத் திட்டம் மாகாண சபையைக் கொண்டு நடத்துவதற்காகவே அன்றி மக்களின் தேவைகளை நிறைவேற்ற அல்ல"- என்றார். (வ-10)

# வர்த்தகர்கள் 11 பேர் செலுத்தினர் அபராதம்

தென்மராட்சி, டிசெ.14

வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 11 வர்த்தகர்கள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் செலுத்தினர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினர் தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பொருள் களை விற்பனைக்கு வைத்திருந்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்து 5 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் 5 பேருக்கு தலா ஆயிரம் ரூபாவும் ஒருவருக்கு 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (வ-9)

# கொழும்பு - யாழ். பஸ் வவுனியாவில் விபத்து

### மயிரிழையில் தப்பினர் பயணிகள்



கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பஸ் நேற்று அதிகாலை 3 மணியளவில் விபத்துக்குள்ளானது. இது தொடர்பாகத் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு வவுனியாவை நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ் வவுனியா நகரை அண்மித்தபோது பஸ்ஸின் சாரதி தூங்கியதால் வீதியைவிட்டு விலகி அருகில் இருந்த கால்வாய்க்குள் இறங்கியது. திடீரென விழித்துக் கொண்ட சாரதி பஸ்ஸை ஒருவாறு கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தார். இதனால் பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இந்த விபத்து இடம்பெற்ற இடத்திலிருந்து சிறிது தூரத்திலேயே 'வவுனியா நகர் அன்புடன் வரவேற்கின்றது' என்று எழுதப்பட்ட வளைவு காணப்படுகின்றது. இந்த வளைவில் பஸ் மோதியிருந்தால் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கு மெனத் தெரிவிக்கப்படுகின்றது. (421)

# நியதிச் சட்டங்களை உருவாக்கினால் எமக்குரிய வருமானத்தைப் பெறலாம்

### மீன்பிடி, போக்குவரத்து அமைச்சுக்களுக்கான பட்ஜெட்டை சமர்ப்பித்து உரையாற்றுகையில் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணசபைக்குரிய நியதிச் சட்டங்களை நாம் உருவாக்குவதன் ஊடாகவே, எதிர்காலத்தில் எமக்குரிய வருமானங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தற்போது எமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் விவாதம் நடத்துவதற்கே வெட்கமாக இருக்கின்றது என்று தெரிவித்தார் அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

வடக்கு மாகாணசபையில், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சுக்கான மீண்டுவரும் செலவாக 122 மில்லியனும், மூலதனச் செலவாக 75 மில்லியனும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் மாகாண நிர்வாகத்துக்கு மீண்டுவரும் செலவாக 53 மில்லியனும், வர்த்தக வாணிபம் சார்ந்த சேவைகளுக்கு 2 மில்லியனும், அவற்றுக்கான மூலதனச் செலவாக 35 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து சேவைகள் திணைக்களத்தின் போக்குவரத்து சேவைகளுக்கு 2 மில்லியனும் இதற்கான மூலதனச் செலவாக 0.1 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் சனசமூக அபிவிருத்திக்கு மீண்டுவரும் செலவாக 65 மில்லியனும், மூலதனச் செலவாக 40 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் நன்னீர் மீன்பிடிக்கு 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர், வடக்கில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குளங்கள் உள்ள நிலையில் இந்த நிதியை வைத்துக்கொண்டு எந்தக் குளத்தில் மீன்பிடியை தொடங்குவது, எப்படி மீன்குஞ்சுகளை விட முடியும்? அவற்றைப் பராமரிப் பதற்குரிய நிதி போதாது. போக்குவரத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு ஒரு ரயர் மட்டும்தான் வாங்கலாம் இவ்வாறான விதத்தில் மிகமோசமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நாம் எமது சபைக்கான வருமானத்தை வீணாக மத்திய அரசிடம் இழந்து கொண்டிருக்கின்றோம்.

முத்திரைத் தீர்வை மூலமான வருமானம் மத்திய அரசுக்கே சென்று கொண்டிருக்கின்றது. எமது மாகாணசபைக்கான நியதிச் சட்டங்களை இயற்றி அவற்றை நாம் பெற வேண்டும்.

எங்களிடம் ஆலோசிக்காமல் வேறு இடத்தில் தயாரிக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளது இந்த வரவு - செலவுத் திட்டம். அடுத்த முறையாவது எங்கள் உறுப்பினர்கள் எல்லோரது ஆலோசனையுடனும் இது தயாரிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் போக்குவரத்து நடத்துநர்களுக்கு தனியான சீருடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான இலவச போக்குவரத்துச் சேவை தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது - என்றார். (வ-5)

> "-"
>
> போக்குவரத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு ஒரு ரயர் மட்டும்தான் வாங்கலாம் இவ்வாறான விதத்தில் மிகமோசமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மாகாணசபை கேட்பதை தர மறுக்கிறது மத்திய அரசு

## வடக்கு முதல்வர் குற்றச்சாட்டு

பருத்தித்துறை, டிசெ.14

மத்திய அரசிடமிருந்து தேசியம் தனித்துவம், சுயநிர்ணயம் மற்றும் சுதந்திரம் என்பவற்றைக் கொண்டு எம்மைத் தாமே ஆள வேண்டும் என்று நாம் கோட்கிறோம். அதனை அவர்கள் தர மறுக்கின்றனர். இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா நிகழ்வுகள் நேற்று பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் பொ. வியாகேசு தலைமையில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாம் அரசிடம் எமது மக்கள் நலன்சார் விடயங்கள் தொடர்பாக பலவற்றைக் கேட்கின்றோம். ஆனால் நாம் கேட்பவற்றைக் கொடுக்கக் கூடாது என பெரும்பான்மை இனத்தவர்கள் எண்ணுகின்றார்கள் - இந்த எண்ணம் மாற வேண்டும்.

போர் அனர்த்தங்களின் பின்னர் நாங்கள் எங்களை ஒழுங்கு படுத்தியுள்ளோமா. என்பது கேள்விக் குரியதாகவே உள்ளது. நாம் எல்லாவற்றிற்கும் அரசை மட்டும் தங்கியிருக்கக் கூடாது நாமே நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

மத்திய அரசுக்கு அடுத்தபடியாக மாகாண சபையும், அதற்கு அடுத்த நிலையில் பிரதேச சபைகளும் உள்ளன. இப் பகுதியினர் ஒருவர் மற்றவரின் எல்லைக்குள் பிரவேசிக்காமல் இருந்தால் தான் சுமுகமான உறவைக் கட்டியெழுப்ப முடியும்.


உள்ளூராட்சி சபைகள் மக்களின் நலன் வசதி கருதி அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தின் குறிக்கோள்கள் போதுமானதாக வழங்கப்பட்டுள்ளதா ? இல்லையா? என்று பார்க்க வேண்டும். இது தென்பகுதிக்குத் தேவைப்படாவிட்டாலும் வட மாகாணத்துக்கு அவசியமானது.

நாங்கள் பெரும்பான்மை இனத்தவரோடு கட்சியால், கலைகளால், மொழிகளால் வேறு பட்டவர்கள். இதனால் தான் எமக்கு அதிகாரப் பகிர்வு தேவைப்படுகிறது. ஆனால் அது கடந்த 25 வருடங்களாகக் கிடைக்கவில்லை. இதனால் தான் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அரசு எம்மை நாமே ஆள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். தமது கருத்தை பலப்படுத்தி எம்மை வலுவிழக்கச் செய்யக் கூடாது.

நாம் அரச சார்பு பிரதிநிதிகளுடன் எவ்வாறு நல்லிணக்கத்துடன் நடந்து கொள்கின்றோமோ அதே போல மத்திய அரசுடனும் உறவைப் பேண



விருப்பமுடையவர்களாக இருக்கின்றோம். இச் சூழ்நிலையில் அரசு எமக்கு நேசக் கரம் நீட்டுவது போல நீட்டி எம்மை வஞ்சிக்கின்றது.

இன்று வறிய குடும்பங்கள் மேலும் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன. இந்த மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும் - என்றார். (ங-400.422.8)

## கட்டாக்காலிகளைப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

முள்ளியவளைப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

முள்ளியவளைப் பகுதியில் கடந்த சில நாள்களாக வீதியில் கட்டாக்காலி கால் நடைகளால் ஏற்பட்ட விபத்துக்கள், மரணங்களைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வீதியில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளை உடனடியாகப் பிடித்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் கட்டுமாறு முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகரால் முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.சாந்த திலகரத்னவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

பிடிக்கப்படும் கால்நடைகள் மூன்று நாள் களுக்குள் உரிமையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் அவை முல்லைத் தீவு மாவட்ட நீதி மன்றில் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-433)

# காணாமற் போன மீனவர்கள் தாழையடிக் கடலில் மீட்பு

## மாதகலில் இருந்து சென்றவேளை சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.14

மாதகல் கடற்பகுதியில் மீன் பிடிக்க சென்றவேளை காணமற்போன இரண்டு மீனவர்களும் நேற்று வெள்ளிக் கிழமை வடமராட்சி கிழக்கு மாலை தாழையடி கடற் பகுதியில் மீனவர்களால் காப்பற்றப் பட்டனர்.

கடந்த புதன்கிழமை இந்த இரண்டு மீனவர்களும் சிறிய படகு ஒன்றில் மீன் பிடிப்பதற்காகச் சென்றுள்ளனர்.

க.நடராஜா, மரியதாஸ் ஆகிய இந்த இரண்டு மீனவர்களும் கடந்த மூன்று தினங்களாக கரை திரும்பவில்லை.

சீரற்ற காலநிலை, கடல் கொந்தளிப்பு காரணமாக இவர்கள் சென்ற படகு திசை மாறி வடமராட்சி கிழக்கு தாழையடி கடற் பகுதிக்குள் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

> “ சீரற்ற காலநிலை, கடல் கொந்தளிப்பு காரணமாக இவர்கள் சென்ற படகு திசை மாறி வடமராட்சி கிழக்கு தாழையடி கடற் பகுதிக்குள் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த படகு ஒன்றை அவதானித்த தாழையடி மீனவர்கள் உடனடியாக அங்கு விரைந்து படகையும் அதிலிருந்த மீனவர்கள் இருவரையும் பாதுகாப்பாக மீட்டுக் கரை சேர்த்தனர்.

இதன் பின்னரே அவர்கள் மூன்று தினங்களுக்கு முன்னர் மாதகலில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் என்பது தெரிய வந்தது. (து-17)

# இந்திய மீனவர் மூவருக்கு விளக்க மறியல்

இந்து சமுத்திரத்தில் கால நிலை சீரற்ற நிலையில் வல்வெட்டித் துறை கடலில் நேற்றுமுன் தினம் மாலை கரை ஒதுங்கிய மூன்று இந்திய மீனவர்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தால் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மல்லிகைப் பட்டினத்தைச் சேர்ந்த மரியராஜா செல்வன் (26 வயது) முத்துக் குமார் வேலன் (17 வயது) தங்கமுத்து வேல் (67 வயது) குறித்த மூவரும் வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் மூவரையும் பருத்தித்துறை பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் முற்படுத்திய போது, மூவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது. (த-8)

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரின் வீட்டில் நிகழ்ந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப் பட்டவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜாவினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில்பரவலாகக் கொள்ளைச் சம்பவங்கள்இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-433)

# மீனவர் பேச்சு திகதியை தமிழக அரசு அறிவிக்குக

## ஞானதேசிகன் வலியுறுத்தல்

சென்னை, டிசெ.14

தமிழக- இலங்கை மீனவர்கள் பேச்சுக்கான திகதியை தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகிற நிகழ்வுகள் கவலை தருகிறது.

ஒவ்வொரு முறையும் மீனவர்கள் கைது செய்யப் படுகின்றபோது, நான் நேரடியாகத் தலையிட்டு இந்திய வெளி விவகாரத்துறை அமைச்சகம், இலங்கைக்கான இந்திய தூதர், இந்தியாவுக் கான இலங்கைத் தூதர், இலங்கையில் உள்ள தமிழ் அமைச்சர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன்.

இது எல்லாமே மீனவ அமைப்புகளின் தலைவர்களுக்கும் தெரிந்த உண்மை.

சமீபத் தில் கூட இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவ அமைப்புகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு வந்தேன். தமிழகம் மற்றும் இலங்கை மீனவர் கள். இந் திய, தமிழக அதிகாரிகள் மற்றும் இலங்கை அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் பேச்சு நடத்தி, இந்த மாதத்துக் குள் இதற்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் பேரில் இந்திய அரசு எப்போது வேண்டுமானா லும் தன்னு டைய அதி காரிகளை பேச்சில் துணை நிற்க அனுப்பத் தயார் என்று அறிவித்தது.

தமிழக அரசு டிசெம்பர் மாதத்தில் இந்தப் பேச்சை வைத்துக் கொள்ளலாம் என்று அறிவித்ததன் அடிப்படையில், உடனடியாக அதற்கான திகதியைக் குறிப்பிட்டு பேச்சு வார்த்தைக்கு மாநில அரசு தயாராக வேண்டும். இந்தப் பேச்சுக்கு தமிழக மீனவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறார்கள் என்று அறிகிறேன்.

மீனவர் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து பேசி வருகிற மீனவ சங்க பிரதி நிதிகள் அந்தக் குழுவில் இடம் பெறுவார்கள் என்று நம்பு கிறோம்.



உடனடியாக தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்களின் பேச்சுக்கான திகதியை தமிழக அரசு நிர்ணயிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.


ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளாக சிறையில் உள்ள 5 இராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்க உடனடியாக தலையிட வேண்டும் என்று வெளி விவகாரத்துறை அமைச்சகத்திடம் தெரிவித்திருக்கிறேன். நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் உட்பட அனைத்து மீனவர்களையும், படகுகளையும் உடனடியாக இலங்கை அரசு விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

நெல்லியடி SINGER Plus
SALE SALE SALE SALE SALE SALE SALE SALE
ஆண்டு நிறைவையொட்டி விற்றுத்தீர்த்தல்
அனைத்துப்பொருட்களும் 60% வரை விலைகழிவுகள்



இடம்
கரவெட்டி பிரதேச செயலகம் அருகாமை
பருத்தித்துறை வீதி
கரவெட்டி
கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் இலவச விநியோகம்.
தொடர்புகளுக்கு
சிங்கர் காட்சியறை நெல்லியடி
021 226 4937 , 0756354832
காலம்
14.12.2013 - 22.12.2013

மங்களா நிறுவனத்தின் மாபெரும் அதிரடி மலிவு விற்பனை
10 % - 50 % விலைக்கழிவு முந்துங்கள் கையிருப்பு உள்ள வரை மட்டுமே



6000/= 3000/= 9000/= 4500/= 10500/= 5250/= 16000/= 11900/= 2200/= 1500/= 14000/= 8750/= 16500/= 9900/= 1500/= 1000/= 5000/= 2500/=
மர, வெளிநாட்டு, மூங்கில், தளபாடங்கள் சோபா செற்றிகள், Baby தொட்டில்கள், வீடு, அலுவலகத்திற்குரிய அனைத்து தளபாடங்களும் மின்னியல் பொருள்கள் 10% - 50% நம்ப முடியாத விலைக்கழிவில்...
ARPICO DAMRO Nilkamal
536, K.K.S. Road, Jaffna. Tel : 021 222 8367, 021 4921099, 077 7286069 போன்ற நிறுவனங்களினதும் விசேட விலைக்கழிவு...

# சேவையை முடித்து யாழிலிருந்து வெளியேறுகிறது 'அக்றிக்கோ'

வலி.வடக்கு, டிசெ.14

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக யாழ். மாவட்ட மக்களுக்கு மின்சாரம் வழங்க உதவியாக இருந்த 'அக்றிக்கோ' நிறுவனத்தினர் பத்து வருட சேவை நிறைவடைந்த நிலையில் தமது மின்பிறப்பாக்கிகளை சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து ஏற்றிச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கான மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவத்தினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் அடிப்படையில் யாழ்.மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்கும் வகையில் இரண்டாயிரம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்கும் பணிக்காக 'அக்றிக்கோ' நிறுவனம் காங்கேசன்துறை மற்றும் சுன்னாகம் பகுதிகளில் மின்பிறப்பாக்கிகளைப் பொருத்தி மின்சாரம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

தற்போது யாழ்.குடாநாட்டுக்கான மின்சார விநியோகம் லக்சபான மின்சாரத்துடன் இணைக்கப்பட்டதுடன் பெரிய மின்பிறப்பாக்கிகளையும் சுன்னாகத்தில் பொருத்தியுள்ள நிலையில் 'அக்றிக்கோ' நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் முடிவடைந்ததையடுத்து தமது மின்பிறப்பாக்கிகளை அந்த நிறுவனம் ஏற்றிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-86)




# நகரசபையின் வருமானம் 14 கோடியே 13 லட்சம்

தென்மராட்சி, டிசெ.14

சாவகச்சேரி நகரசபையின் அடுத்த வருடத்துக்கான உத்தேச மொத்த வருமானம் 14 கோடியே 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகவும், உத்தேச மொத்த செலவினம் 14 கோடியே 13 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவாகவும் மிகை வருமானம் 22 ஆயிரம் ரூபாவாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மொத்த வருமானங்களில் மீண்டு வரும் வருமானம் 10 கோடியே 75 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவாகவும், மூலதன வருமானம் 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவாகவும், புனருத்தாரண வருமானம் 3 கோடியே 33 லட்சம் ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தச் செலவினங்களில் மீண்டு வரும் செலவினமாக 5 கோடியே 45 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவும், மூலதன செலவினமாக 5 கோடியே 35 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், புனருத்தாரண செலவினமாக 3 கோடியே 33 லட்சம் ரூபாவுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் அபிவிருத்திப் பணிகளுக்காக சபை நிதியில் 5 கோடியே 35 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டத்தில் 3 கோடியே 33 லட்சம் ரூபாவுமாக மொத்தம் 8 கோடியே 68 லட்சத்து 20 ஆயிரம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது சபைக்குரிய மொத்த வருமானத்தில் 60 வீதத்துக்கு மேற்பட்டதாகும்.

அத்துடன் சபையின் சுகாதாரத் சேவையை மேம்படுத்த சபை நிதியிலிருந்து சுகாதாரத் தொழிலாளர்களுக்கான விடுதிகள் அமைக்க ஒரு கோடி 50 லட்சம் ரூபாவும், சபை வளாகத்தில் சுகாதாரத் தொழிலாளர்கள் உடை மாற்றும் அறை நிர்மாணிக்க 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

# சாவகச்சேரி நகரசபையின் 'பட்ஜெட்' நிறைவேறியது

தென்மராட்சி, டிசெ.14

சாவகச்சேரி நகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத் திட்ட பொழிப்பு நேற்று விஷேட வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டுக் கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எதிரணி உறுப்பினர்கள் இருவரும் சமுகமளிக்காத நிலையில் சபையின் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை 2014 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு- செலவுத் திட்ட பொழிப்பை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய போது இது என்னால் சமர்ப்பிக்கப்படும் மூன்றாவது வரவு - செலவுத் திட்டப் பொழிவாகும். கடந்த 2012 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அபிவிருத்திப் பணி களும் நிறைவேற்றப்பட்டுள் ளன. 2013 இற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட 80 சதவீதமான அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மிகுதிப் பணிகள் அடுத்த ஏப்ரல் மாதத்துக்குள் செய்து முடிக்கப்படும் என்று விளக்கினார்.

2014 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத்திட்டப் பொழிப்பை உறுப்பினர் த.சுதர்சன் முன்மொழிய உறுப்பினர் பொ.செல்வரத்தினம் வழிமொழிய அது சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(வ-9)

## சிறந்த பண்ணையாளர் தெரிவுப் போட்டி

அச்சுவேலி, டிசெ.14

பால் பசு வளர்ப்போர் மற்றும் சிறந்த பண்ணையாளர்கள் போட்டிக்கான விண்ணப்பங்கள் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் விநியோகிக்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி இந்த மாதம் 9 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அது 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிறந்த பண்ணையாளர் மற்றும் பால் பசு வளர்ப்போருக்கான போட்டியில் கால்நடை பராமரிப்பு மற்றும் உணவு வழங்கல், நோய்த்தடை நடவடிக்கை உள்ளிட்ட வகையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு புள்ளி வழங்கப்பட்டு சிறந்த பண்ணையாளர் தெரிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(வ-11)

## அஞ்சலி நிகழ்வு

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் அமரர் துரை ஆரோக்கியதாசனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கடந்த வாரம் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபர் இக்னேஸியஸ், அருட்திரு. அ.பி.ஜெயசேகரம் அடிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ. சிறில் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-135)

# வாழைப்பழ விலையில் வீழ்ச்சி செய்கையாளர் பெரும் பாதிப்பு

அச்சுவேலி, டிசெ.14

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை குறைவடைந்துள்ளது. இதனால் வாழைப் பயிர்ச் செய்கையாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கதலி வாழைப்பழத்தின் விலை ஒரு கிலோ ரூபா 20-25 வரை குறைவடைந்துள்ளது. இதனால் வாழைப்பழத்தின் விலை ரூபா 25-30 வரை விற்பனை செய்யப்படுகின்றது. கப்பல் வாழைப்பழம் கிலோ 80 ரூபா வரை விலை போகின்றது. சமையலுக்கு பயன்படுத்தும் மொந்தன் வாழைக்காய் கிலோ ஒன்று 30-40 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.



கடந்த ஏப்ரல் - ஜூலை வரையான காலப் பகுதியில் கதலி வாழைப்பழம் ஒரு கிலோ 180 ரூபா வரையும், இதரை வாழைப்பழம் 120 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் ஆலய திருவிழாக்கள் மற்றும் வைபவங்கள் அதிகமாக இருந்ததோடு வாழைக்குலை உற்பத்தி அளவும் குறைவடைந்திருந்தமையால் வாழைப் பழத்தின் விலை மிக உச்ச நிலையில் இருந்தது. வெளிமாவட்டங்களில் இருந்தும் வாழைப்பழங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன.

வாழைப்பழத்தின் விலை அதிகரித்ததை அடுத்து வாழைச் செய்கையின் அளவு அதிகரித்ததோடு மாரி மழை, குளிர்காலம் காரணமாக வாழைப்பழப் பாவனையின் அளவும் குறைவடைந்த நிலை என்பன, வாழைப் பழத்தின் விலையில் பெரும் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தியுள்ளன.

'நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் வாழைக் குலைச் சந்தைக்கு பெருமளவில் வாழைக்குலைகள் விவசாயிகளால் எடுத்து வரப்படுகின்றன. கதலி வாழைக் குலை கிலோ ஒன்று 18 இலிருந்து 20 ரூபாவரையும், அதே விலையிலேயே தான் இதரை வாழைக் குலையும் விலை போகின்றன. சமையலுக்குப் பயன்படுத்தும் மொந்தன் வாழைக்குலை கிலோ 40 ரூபாவுக்கு குறைவான விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது. வாழைக்குலை விற்பனை அளவு மிகவும் குறைவடைந்துள்ளது'. என்று சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (வ-11-21)

# நல்லூர் பிரதேச 'பட்ஜெட்'டுக்கு எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு

*ஏகமனதாக நிறைவேற்றம்*

யாழ்ப்பாணம், டிசெ.14

நல்லூர் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிரணி உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான வருமானம் ரூபா 180 மில்லியனாகவும் செலவினமும் அதே தொகையைக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

> இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான வருமானம் ரூபா 180 மில்லியனாகவும் செலவினமும் அதே தொகையைக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முக்கிய அபிவிருத்திப் பணிகளான வீதி புனரமைப்புக்கு ரூபா 67 மில்லியனும், மின் விளக்குகளுக்காக ரூபா 23 மில்லியனும், வாழ்வாதார உதவிகளுக்காக ரூபா 5 மில்லியனும், சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கு ரூபா 3 மில்லியனும், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்காக ரூபா 2 மில்லியனும், மயானங்கள் அபிவிருத்திக்கு ரூபா 2 மில்லியனும், ஆயுள்வேத வைத்திய அபிவிருத்திக்கு ரூபா 2 மில்லியனும், திண்மக் கழிவகற்றலுக்கு ரூபா 2 மில்லியனும், சுகாதாரப் பகுதிக்கு ரூபா ஒரு மில் லியனும் செலவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

# சந்தைக் குறைபாடுகளை நீக்க உடன் நடவடிக்கை

## நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

திருநெல்வேலி பொதுச் சந்தையில் காணப்படும் குறைபாடுகள் குறித்து பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் சந்தைக் கட்டடத்தில் காணப்படும் குறைபாடுகள் பூர்த்தியாக்கப்படுவதுடன் மழைநீர் உட்புகுந்து வழிந்தோடுவதைத் தடுப்பதற்கும் சுகாதார முறைகள் பேணப்படுவதற்கும் கட்டடத்தின் கீழ்த்தளம் முழுமையாக கொங்கிறீற்றாக மாற்றப்படும். நடைபாதையில் உள்ள கடைகள் தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வாகனத் தரிப்பிடம் மாற்றம் செய்யப்படவுள்ளது. எனவே வர்த்தகர்களும், பொது மக்களும் சந்தையின் புனரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (வ-7)

# மீனவர் பிரச்சினைக்கு பேச்சு ஒன்றே தீர்வு

## இந்தியக் கடலோர பாதுகாப்புப் படை அதிகாரி கூறுகின்றார்

சென்னை, டிசெ.14

தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தமாகத் தீர்வு காண வேண்டும் எனில் இருநாட்டு மீனவர்களுடனும் பேச்சு நடத்துவதே சிறந்த முடிவாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை அதிகாரியான வைஸ் அட்மிரல் அனுரக் ஜீ தப்லியாய்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு, இந்தியாவின் வெளி விவகார அமைச்சு உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். மீனவர்களுக்கு இடையிலான பலமான கலந்துரையாடல் ஒன்றின் மூலமே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அந்த பிரச்சினை தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற தீர்மானமானது, இரண்டு நாட்டு மீனவர்களும் ஏற்றுக் கொள்ள கூடியதாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பா.ஜ.க.– ம.தி.மு.க. கூட்டணி உறுதி

சென்னை, டிசெ.14


அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுடன் ம.தி.மு.க. கூட்டணி அமைத்துக் கொள்ளும் என்று உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தத் தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் பா.ஜ.கவின் தேசியத் தலைவர் ராஜ்நாத் சிங்கை புதுடில்லியில் சந்தித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

சட்டசபைத் தேர்தல்களில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றுள்ளதை அடுத்து அரசியல் கட்சிகளின் கவனம் பா.ஜ.க. மீது திரும்பியுள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் பா.ஜனதா கூட்டணியில் தே.மு.தி.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகளை சேர்க்கும் முயற்சியில் தமிழருவி மணியன் இறங்கியுள்ளார்.

ம.தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைப்பது தற்போது உறுதியாகியுள்ளது.

புதுடில்லியில் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ அதுகுறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டின் அரசியல் நிலமை, எந்த எந்த கட்சிகளுடன் கூட்டணி அமைந்தால் தமிழ்நாட்டில் அதிக இடங்களை பிடிக்க முடியும் என்பது குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர் என்று டெல்லி வட்டாரங்கள் கூறுகின்றன. இவர்களது அண்மைய சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ற)



2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி இந்திய நாடாளுமன்ற வளாகத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகப் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் பாதுகாப்புப் படையினர் 12 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயடைந்தனர். அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதன் 12 ஆவது நினைவு தினம் நேற்று இந்தியப் நாடாளுமன்றத்தில் நினைவு கூரப்பட்டது. அதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ற)

# டில்லியில் ஆட்சியமைக்க ஆம் ஆத்மிக்கு ஆதரவு

## ராகுல் காந்தி கூறுகின்றார்

புதுடில்லி, டிசெ.14

புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கத் தயாராக உள்ளது என்று அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

70 தொகுதிகளைக் கொண்ட புதுடில்லி சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு 32 இடங்களும், அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சிக்கு 28 இடங்களும், காங்கிரசுக்கு 8 இடங்களும் கிடைத்தன. ஆட்சி அமைக்க தேவையான 36 இடங்கள் எந்த கட்சிக்கும் கிடைக்காததால் ஆட்சி அமைப்பதில் இழுபறி நீடித்து வருகிறது.

ஆட்சியமைக்க பா.ஜ.க., ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் முன்வரவில்லை. அதேவேளை, புதுடில்லியில் புதிய அரசு அமைவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மாநில ஆளுநர் நஜீப் ஜங்கை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கேட்டுக் கொண்டார்.

இந்தநிலையிலேயே ஆம் ஆத்மி கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்கத் தயாராக உள்ளோம் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜெய் கிஷன் கருத்துத் தெரிவிக்கையில், "டில்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த அரசை வெளியில் இருந்து ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாரோடும் கூட்டணி வைத்து ஆட்சி அமைக்க தயராக இல்லை என்று ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது. (ற)

# ஆம் ஆத்மி கட்சி போன்று பா.ம.கட்சியும் சாதிக்கும்

சென்னை, டிசெ.14

புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றதைப் போன்று தமிழகத்தில் பா.ம.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் அந்தக் கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் யாருடனும் கூட்டணி வைக்க மாட்டோம். பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தலைமையிலான சமூக ஜனநாயக கூட்டணி உருவாகி உள்ளது. அதனோடுதான் கூட்டணி வைப்போம்.

புதுடில்லியில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்து கொண்டிருந்தன. தற்போது அங்கு ஒரு மாற்றம் தேவை என மக்கள் நினைத்துள்ளனர். ஆம்ஆத்மி கட்சியைத் தேர்ந்தெடுத்து உள்ளனர். அதேபோல் தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன.

47 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்திலும் மாற்றம் வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். அதனால் டெல்லியில் ஆம் ஆத்மி கட்சியைப் போன்று தமிழகத்தில் பா.ம.க. தலைமையிலான சமூக ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க முடிவு செய்து உள்ளனர். எங்கள் கூட்டணி நிச்சயமாக வெற்றி பெறும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# லோக்பாலுக்காக உயிரையும் தியாகம் செய்வேன்

## அன்னா ஹசாரே

புதுடில்லி, டிசெ.14

லோக்பால்சட்டத்தைதற்போதைய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரி உண்ணாவிரப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அன்னா ஹசாரே, தனது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நான்காவது நாளாக உண்ணாவிரத்தில் ஈடுபட்டு வரும் ஹசாரே அதுகுறித்துக் கூறுகையில்,

"ஜன்லோக்பால் சட்டம் நிறைவேற்றப்படும் வரை உண்ணாவிரதம் தொடரும். அதற்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# லாலுவுக்குப் பிணை



புதுடில்லி, டிசெ.14

கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள லாலு பிரசாத் யாதவுக்கு இந்திய உயர்நீதி மன்றம் பிணை வழங்கியுள்ளது.

பீஹாரில் கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் லாலுவுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் தாக்கல் செய்த பிணை மனுக்களை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றமும், ஜார்கண்ட் நீதிமன்றமும் தள்ளுபடி செய்திருந்தன. அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் லாலு சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு தலைமை நீதிபதி சதாசிவம், நீதிபதி ரஞ்சன் கோகாய் அடங்கிய பெஞ்ச் முன்னிலையில் கடந்த மாதம் 30ஆம் திகதிவிசாரணைக்கு வந்தது. அப்போது லாலுவுக்காக வாதாடிய சட்டத்தரணி ராம்ஜெத்மலானி, "குறித்த ஊழல் வழக்கில் லாலுவுடன் தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய குற்றவாளிகளுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. ஜார்கண்ட் நீதிமன்றத்தில் லாலு மீது தொடர்ந்துள்ள வழக்கில் தீர்ப்பு வழங்க நீண்ட காலமாகும். எனவே அவருக்குப் பிணை வழங்க வேண்டும்" என்று வாதாடினார். மனுவை ஆராய்ந்த நீதிபதிகள் லாலு பிரசாத் யாதவுக்குப் பிணை வழங்கித் தீர்ப்பளித்தனர். (ற)

# மரண அறிவித்தல்

## திருமதி புனிதவதி பஞ்சலிங்கம்



நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பஞ்சலிங்கம் 11.12.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான விஸ்வநாதன் -தவமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற புஸ்பராணி மற்றும் உருத்திரராசா (ஜேர்மனி), மீனகாந்தி (கனடா) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், பாலநந்தி (U.K), பிரபாகரன் (கனடா), காயத்திரி (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும், மதனரூபன் (U.K), தர்மஜா (கனடா), றொசான் (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், சர்வானந்தம் (கனடா), திருமதி ஜெசிந்தா லலிதா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், தர்மேந்திரா, யாழினி, சேயோன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அத்தையும், சர்மி (கனடா), யனுஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரியதாயும், ஹரிசன், திவ்ஜன், மிதுசன், அஸ்வின் (U.K), டிரான் (கனடா), வர்ணவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2013 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க.பஞ்சலிங்கம் குடும்பத்தினர்,
T.P:077 691 1666 /024 490 6460
வி. உருத்திரராசா குடும்பத்தினர்,
(சகோதரன்) T.P:077 852 6130

இல.190, முதலாம் ஒழுங்கை,
கல்வியியற் கல்லூரி வீதி,
பூந்தோட்டம்,
வவுனியா.

(40594)(3.6.45)

# தெலுங்கானா எதிர்ப்பு: சாலையில் சமைத்தார் ரோஜா

ஹைதராபாத், டிசெ.14

ஆந்திராவைப் பிரிப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்துவைஎஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவரும் நடிகையுமான ரோஜா சாலையில் அமர்ந்து சமையல் செய்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

ஆந்திராவைப் பிரித்துத் தெலுங்கானா மாநிலம் அமைக்கும் சட்டத் திருத்தத்துக்கு இந்திய அமைச்சர்கள் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது அந்த சட்டத்திருத்தம் இந்திய ஜனாதிபதியால் ஆந்திர சட்டசபையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்தநிலையில் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் நடிகை ரோஜா சாலையின் நடுவே அமர்ந்து சமையல் செய்து போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் சாலைப் போக்கு வரத்து பலமணி நேரம் தடைப்பட்டது. (ற)



கென்யாவில் 50ஆவது சுதந்திர தினம் கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. அந்நாட்டு ஜனாதிபதி உஹூரு கென்யாட்டா மீது சுமத்தப்பட்டுள்ள மனித நேயத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச அளவிலான விசாரணை அடுத்த ஆண்டு ஆரம்பமாகவுள்ள நிலையிலும், பெருகி வரும் ஊழல், சமத்துவமின்மை மற்றும் இன வன்முறை ஆகியவற்றுக்கு மத்தியிலும் இந்தச் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டுள்ளது. *படம்: சுதந்திர நிகழ்வுகளில் இடம்பெற்ற கென்ய பாரம்பரிய நடன நிகழ்ச்சி ஒன்றின் காட்சி.*

# தூக்கிலிடப்பட்டார் போர்க்குற்றவாளி

## *பங்களாதேஷில் வெடித்தது வன்முறை*

டாக்கா, டிசெ.14

போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஜமாத்-இ-இஸ்லாமி துணை பொதுச் செயலாளர் அப்துல் காதருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்தது பங்களாதேஷ் உயர் நீதிமன்றம். நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்த சில மணி நேரத்திற்குள்ளாகவே அவருக்கான தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. அதையடுத்து அங்கு பெரும் வன்முறைகள் வெடித்துள்ளன.

1971ஆம் ஆண்டு இடம்பெற்ற பங்களாதேஷ் போரின்போது நடைபெற்றஇனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்கு காரணமாக அமைந்திருந்தார் என்று ஜமாத்-இ-இஸ்லாமி துணை பொதுச் செயலாளர் அப்துல் காதருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து பங்களதேஷ் நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அதை எதிர்த்து அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆயுள் தண்டனையை, தூக்குத் தண்டனையாக அதிகரித்து தீர்ப்பு வழங்கியது.

அவருக்கான தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்துல் காதர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதையடுத்து அவருக்கான தண்டனையை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அந்நாட்டு உயர்நீதிமன்றம் காதருக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்பு வெளியான சில மணி நேரங்களில் (கடந்த வியாழக் கிழமை இரவு) காதருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது என்று பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது.

அதையடுத்து அந்த நாட்டில் பெரும் வன்முறைகள் வெடித்துள்ளன. அப்துல் காதரின் ஆதரவாளர்கள் வன்முறைகளில் இறங்கியுள்ளனர். வன்முறைகளை அடக்குவதற்காக பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் அந்தநாட்டின் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

# தீவிரவாதம் தொடர்பில் பாக். இரட்டை வேடம்

## *குற்றஞ்சாட்டுகின்றனர் அமெரிக்கநாடாளுமன்ற உறுப்பினர்கள்*

நியூயோர்க், டிசெ.14

தீவிரவாதம் தொடர்பாக பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளனர் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

தீவிரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் பாகிஸ்தான் அரசும், இராணுவத்தினரும் தலிபான் அமைப்பினருக்குத் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

வாய் வார்த்தைகளால் தீவிரவாதத்தை எதிர்க்கும் பாகிஸ்தான், அமெரிக்காவின் தீவிரவாதஒழிப்புநடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர்.

**வாய் வார்த்தைகளால் தீவிர வாதத்தை எதிர்க் கும் பாகிஸ்தான், அமெரிக்காவின் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற் படுகின்றது**

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் டானா ரோராபாச்சர்,

"அமெரிக்க பாகிஸ்தானின் வளர்ச்சிக்கு வழங்கும் நிதியுதவியை அந்நாட்டு அரசு தீவிரவாதிகளை வளர்க்கப் பயன்படுத்துகின்றது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் நிதியை நிறுத்துவதுடன், ஆப்கனில் இருக்கும் அமெரிக்கப் படையினரையும் திரும்ப அழைக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# டயோயு தீவுகள் சீனாவுடையதே

## *உரிமைகோருவதை நிறுத்துமாறு ஜப்பானுக்கு எச்சரிக்கை*

பிஜிங், டிசெ.14

சர்ச்சைக்குரிய டயோயு தீவுகள் மீது உரிமை கொண்டாடுவதை ஜப்பான் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எச்சரித்துள்ளது சீனா.

ஜப்பானின் வெளியுறவுத்துறை அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட ஓர் காணொலியில் சென்காகு தீவுகள் என்று அழைக்கப்படும் டயோயு தீவு ஜப்பானின் பிரதேசத்திற்குட்பட்டது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதுகுறித்து கடும் கண்டனம் தெரிவித்துள்ள சீனா, இது சீனாவை ஆத்திரமூட்டும் செயல் என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"ஜப்பான் வரலாற்று உண்மைகளை புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண ஜப்பான் முயலவேண்டும். அதை விடுத்து உரிமை கொண்டாடுவது என்பது கண்டனத்துக்கு உரியது.

இந்த விடயத்தில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, கடற்படை மற்றும் விமானப்படை பாதுகாப்பு என்பவற்றுக்காக தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஆதரவை நாடுவதாக அறிந்தோம். இது ஒரு தவறான உதாரணம். சீன கடல் எல்லையில் எது நடந்தாலும் அதற்கு ஜப்பான்தான் பொறுப்பு. இரு நாட்டு எல்லையிலும் பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, ஓர் அமைதியான வளர்ச்சிப்பாதையில் செல்ல ஜப்பான் ஒத்துழைக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி: வடகொரியாவில் ஒருவருக்குத் தூக்கு

சியோல், டிச 14

ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்தார் என்ற குற்றச்சாட்டில் வடகொரியாவில் முன்னாள் இராணுவ துணைத் தளபதி ஒருவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர் அந்நாட்டு ஜனாதிபதியின் நெருங்கிய உறவினராவார்.

வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங்யுன்னின் உறவினர் ஜங்சாங்தயக் (67). அவர் இராணுவத் துறையில் துணைத் தளபதியாகப் பதவி வகித்தார். ஜனாதிபதிக்கு அடுத்தபடியாக 2ஆவது இடத்தில் அதிகாரம் மிக்கவராகச் செயற்பட்டார்.

இந்த நிலையில் இவர் இராணுவப் புரட்சி மூலம் அதிபர் கிம் ஜாங்யுன்னிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றச் சதித் திட்டம் தீட்டினார் என்று தெரிவித்து கைது செய்யப்பட்டார். அவரது உதவியாளர்கள் இருவரும் அவருடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது இராணுவ நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெற்றது. அதில் ஜங் மற்றும் அவரது உதவியாளர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து உதவியாளர்கள் இருவரும் ஏற்கனவே தூக்கிலிடப்பட்டனர்.

இந்த நிலையில், ஜங்சாங்தயக்கும் நேற்றுமுன்தினம் தூக்கிலிடப்பட்டார். கிம் ஜாங்-யுன்னை பதவியில் இருந்து அகற்றி விட்டு தான் ஜனாதிபதியாக முயன்றமைக்காக அந்தத் தண்டனை வழங்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தூக்கிலிடப்பட்ட ஜங், கிம் ஜாங்யுனின் தந்தையின் தங்கை கிம் கியாங் ஹூயின் கணவர் ஆவார். தற்போதைய ஜனாதிபதியின் தந்தை கிம் ஜாங்-2இன் வலதுகரமாக, அவரது நம்பிக்கைக் குரியவராகத் திகழ்ந்த அவர் வடகொரிய அரசில் கடந்த 40 ஆண்டுகளாக அதிகாரம் மிக்கவராக இருந்தார். (ற)


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் செட்டியார் சிதம்பரசுப்பிரமணியம் செட்டியார் (சிறி)



யாழ்ப்பாணம்கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்டசுப்பிரமணியம் செட்டியார் சிதம்பரசுப்பிரமணியம் செட்டியார் (சிறி) 02.12.2013 திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செட்டியார்-சரஸ்வதி (ஆசிரியர்கள்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சாந்தினியின் அன்புக் கணவரும், லாவண்யாவின் பாசமிகு தந்தையும், கமலாவதி (லண்டன்), விமலாவதி (கனடா), சிவநேசன் (செட்டியார் - சுவிஸ்), குகனேசன் செட்டியார் (குகன் - லண்டன்), பரதன் செட்டியார் (லண்டன்), லீலாவதி, சிவஞானவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அன்னலிங்கம், விஜியகுமாரன், காந்திமதி, கௌரி, சியாமளா, சிவமூர்த்தி, புஸ்பரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், நிசாந், விதூசன், றெம்மியா, ரிசிகேஷ், திவ்யன், நிதிஷா, தான்யா ஆகியோரின் மாமனாரும், அபிகீத், அஷ்ணவி, சுவாஸ்ரிக், சேயோன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C.C.T.M.S. ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(42584)(7.6.3)

# அரசியல் கைதிகளை உடன் விடுவிப்பது சாத்தியமற்றது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

"அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்வதென்பது சாத்தியமற்றது. அவர்களுக்குள்ளும் குற்றமிழைத்தவர்கள் உள்ளனர்.

எனவே, இவர்கள் சரியாக இனங்காணப்பட்டதன் பின்னரே இது குறித்து தீர்மானங்களை எடுக்க முடியும்."

இவ்வாறு மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, "அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அரசு அமுல்படுத்த வேண்டும்" என்று புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பின்போது வலியுறுத்தியிருந்தார்.



இதுகுறித்து வினவியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நல்லிணக்க ஆணைக்குழு பரிந் துரைகள் தொடர்பில் என்னால் எதுவும் கூறமுடியாது. ஆனால், ஆண்டகை கூறியிருப்பதை நாமும் அறிவோம். அவர் கூறியிருப்பதில் உள்ள ஒரு பிரச்சினை என்னவெனில் அரசியல் கைதிகள், சாதாரண கைதிகள் என யாரும் இதுவரையிலும் அரசினால் அடையாளம் காணப்படவில்லை.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையே அரசியல் கைதிகளாகக் கூறப்படுகின்றது. ஆனால், அது இன்னமும் நிரூபிக்கப் படவில்லை. அவர்களுக்குள்ளும் குற்ற மிழைத்தவர்கள் உள்ளனர். இந்த நிலையில் இவர்களைக் கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் என எவ்வாறு கூறு வது? இவர்கள் குறித்து ஆராயப்பட்ட பின்னரே எந்தத் தீர்மானத்தையும் எம்மால் எடுக்க முடியும்.

ஆனால், அதேவேளை குற்றங்கள் செய்தமைக்கு ஆதாரங்களின்றி சிறை யில் கைதிகள் இருப்பார்களாயின் அவர்களை உடனே விடுதலை செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு அல்லா விடின் அவர்கள் மீது வழக்காவது தொடர வேண்டும். இவ்வாறு ஒன்று மில்லாது சிறையில் அவர்களை அடைத்து வைத்திருப்பது எம்மைப் பொறுத்தமட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஆகவே இதுவிட யத்தில் விரைவில் தீர்மானம் எடுக்கப் படும்" என்றார்.

# சிறுபான்மையினர் முரண்படக்கூடாது

## நஸீர் தெரிவிப்பு



நாட்டில் முப்பது வருட காலமாக இழப்புக்களை மட்டுமே சந்தித்த சிறுபான்மை சமூகங்கள் எந்தவொரு விடயத்துக்காகவும் முரண்படுவது எதிர்கால சந்ததியினருக்குச் செய்யும் துரோகம் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்தார்.

இதுகுறித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அக்கரைப்பற்று முஸ்லிம் விவசாயிகள் வட்டமடுவில் 1970 ஆம் ஆண்டு காடு வெட்டி அங்கு வசித்து விவசாயம் செய்து வந் துள்ளனர்.

எனவே விவசாயம் செய்த காணிகளில் விவசாயம் செய்வதுடன் பண்ணை வளர்ப்புக்கு பயன்படுத்தப்பட்ட காணிகளை பண்ணை வளர்ப்புக்கும் பயன்படுத்துதல் வேண்டும். இதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை.

வட்டமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினையை சிலருடைய தனிப்பட்ட உள் நோக்கங்களுக்காக பிழையாக பயன்படுத்த முற்படக்கூடாது.

அவ்விடயம் குறித்து பேச்சு மூலம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எல்லோரும் முன்வர வேண்டும்-என்றார். (ச)

# உடும்பு இறைச்சி விற்பனையில் ஈடுபட்டோர் கைது

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு பிரதேசத்தில் சட்டவிரோதமாக உடும்பு இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட இருவரை நேற்று வெள்ளிக்கிழமை காலை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த நபர்களிடமிருந்து உடும்புத்தோல் மற்றும் இறைச்சியை மீட்டுள்ளனர் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியப் பொலிஸாருக்கும் விசேட புலனாய்வு பிரிவினருக்கும் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலையடி வேம்பு, வீரமாகோவில் பிரதேசத்தில் மூன்று உடும்புகளை உரித்து இறைச்சியாக விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவரே மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடமிருந்து நிறுவைத் தராசு, உடும்பு தோல்கள், இறைச்சி என்பன மீட்கப்பட் டன என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் ஆலையடி வேம்பு, அளிக்கம்பை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர். (ச)


**நல்லூர் பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் - 2014**

**மக்கள் பார்வைக்கு**

நல்லூர் பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனைக் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 14.12.2013ஆம் திகதியிலிருந்து 22.12.2013ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

* தலைமை அலுவலகம் - கருவப்புலம் லேன், கொக்குவில்.
* நல்லூர் உப அலுவலகம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
* கொக்குவில் உப அலுவலகம் - பிறவுண் வீதி, கொக்குவில்.
* பொது நூலகம் கோண்டாவில் - நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
* பொது நூலகம் கொக்குவில் - பிறவுண் வீதி , கொக்குவில்.
* பொது நூலகம் நல்லூர் - கலாசாலை வீதி, திருநெல்வேலி.

நல்லூர் பிரதேச சபை
கொக்குவில். (சி/14379)(7.6.3)

ப.வசந்தகுமார்
தலைவர், நல்லூர் பிரதேச சபை.



**"லெபாறா நூலகம்" அமலமரித் தியாகிகளின் கல்வி சார் உள நிலையம்**

87, கனகாம்பிகைக்குளம், அன்னை இல்லம், கிளிநொச்சி.
தொலைபேசி: 021 228 3845

க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான இலகு கணிதம், ஆங்கிலம் மற்றும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கிறிஸ்தவ நாகரிக இலவச கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம். உங்கள் பதிவுகளை 23.12.2013 இற்கு முன்பதாக நூலகத்தில் உறுதிப்படுத்தவும்.

(29710) (10.6.3)
லெபாறா நூலகம்.



**வெளிக்களநிலையம்-தொண்டைமானாறு ஆண்டுப் பொதுக்கூட்டம்**

F.W.C.

வெளிக்கள நிலையம் தொண்டைமானாறின் பொதுக் கூட்டம் 29.12.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தொண்டைமானாறில் அமைந்துள்ள வெளிக்கள நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
வெளிக்களநிலையம்,தொண்டைமானாறு. (42504)(4,6.3)



**வேலை வாய்ப்பிற்கான விண்ணப்பம் கோரல் MBSL**

இலங்கை வங்கியினதும் MBSL வங்கியினதும் துணை நிறுவனமான MBSL காப்புறுதி நிறுவனத்தில் கீழ் காணப்படும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

01. 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
02. வசிப்பிடங்களுக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
03. அரச உத்தியோகத்தர் மற்றும் நிறுவனங்களில் பணிபுரிவோர் பகுதி நேர வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதவி வெற்றிடங்கள்:

★ வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்
★ குழுத்தலைவர்கள் / சிரேஷ்ட குழுத்தலைவர்கள்
★ உதவிக் குழு முகாமையாளர்கள்

தகைமைக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
மாதாந்த கொடுப்பனவுகள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தனிப்பட்ட திறனுக்கு ஏற்ப பதவி உயர்வும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

உங்கள் சுயவிவரக் கோவையினை 29.12.2013 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குழு முகாமையாளர்,
MBSL காப்புறுதி நிறுவனம்,
இல.99, முதலாம் மாடி, புகையிரத நிலைய வீதி, வவுனியா.
077 285 4118, 024 492 4960.
(40508) (10.6.3)



**யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் சிற்றுண்டிச் சாலை குத்தகைக்கான கேள்வி அறிவித்தல்**

யாழ் மாநகர சபை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைக் கட்டடமும், தளபாடங்களும், சமையல் பாத்திரங்களும் எதிர் வரும் 01.01.2014 ஆம் திகதி முதல் 31.12.2014 ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்துக்கான குத்தகைக்கு கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

01. கேள்விப் படிவக் கட்டணம் ரூபா.300.00 மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா. 1000.00 செலுத்துவதின் பேரில் வழங்கப்படும். (கேள்விப் படிவங்களில் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
02. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மேற்படி சங்க அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வருடாந்தம் ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா. 135,000/= (வரிகள் நீங்கலாக)
04. கேள்விப் படிவங்கள் 17.12.2013 ஆம் திகதி தொடக்கம் 26.12.2013ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
05. கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் 27.12.2013 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.
06. மேலதிக விவரங்களை மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவுச் சேவையில் உள்ள

க.மோகனரூபன் செயலாளர் (சி/14378)(10.6.3)
நரேந்திரன் உப தலைவர்
நா.இரகுமார் தலைவர்



**வீடு வாடகைக்கு உண்டு**

166/1, நாவலர் வீதி (கலா ஐஸ் ஒழுங்கை)
T.P: 076 607 1275
ச. சிவசோதி (42532)(7.6.3)



**கன்ரர் விற்பனைக்கு**

TATA 1109, NPLK-XXXX
16 அடி நீள கன்ரர் விற்பனைக்கு
தொடர்புக்கு: (42538)(10.6.3)
077 262 2988, 077 344 1042



**கடை வாடகைக்கு**

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் 35 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய 228/4 இலக்க கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:077 783 3807 (42534)(4.6.3)



**கொள்வனவு**

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.
(42531)(12.6) தொடர்பு: 077 772 2215



**பிரத்தியேக வகுப்பு**

தரம் 6,11 வரையான கணிதம், தரம் 10,11 வர்த்தகம் மற்றும் தரம் 4,5 புலமைப்பரிசில் வகுப்புக்கள் பிரபல ஆசிரியரால் தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
(42527)(12.6.3) தொடர்பு: 076 617 9511



**வயற்காணி விற்பனைக்கு**

மல்லாகம், நீலியம்பனை பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள கிணற்றுடன் கூடிய 26 பரப்பு வயற்காணி பரப்பு ரூபா 35,000/= படி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 718 6233 (42535)(4.6.3)



**கல்வி**

ஆண்டு 8 தொடக்கம் அனைத்து மாணவர்களுக்கும் ஆங்கிலம், ஆங்கில மொழி மூல பாடங்கள், (Spoken English) ஸ்போக்கன் இங்கிலிஷ், கணிதம், சிங்களம் ஆகியன 35 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள ஆசிரியரினால் யாழ் நகரில் சுண்டுக்குளி, கச்சேரியை அண்மித்த பகுதிகளில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். மாலை 7.00 மணியின் பின்னர் தொடர்பு கொள்ளவும். அல்லது உங்கள் இலக்கத்தை sms மூலம் அனுப்பி வைக்கவும். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:071 608 7833. ஒரு மணித்தியாலம் 150/= மட்டுமே. (42595)(7.6.3)



**மணமக்கள் தேவை**

* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 38¼ பாவமுடைய விவாகரத்துப் பெற்ற லண்டன் பிரஜா உரிமைபெற்ற லண்டன் வைத்தியசாலையில் பணிபுரியும் மணமகளுக்குப் பட்டதாரி மணமகன் லண்டனில் தேவை.
* 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 27 பாவமுடைய BSc விவசாய போதனா ஆசிரியருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய சிவில் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 85 இல் பிறந்த RC வேதமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு RC வேதத்தில் பட்டதாரி மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 15¼ பாவம் அமெரிக்கா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அமெரிக்காவிலோ உள்நாட்டிலோ பட்டதாரி மணமகன் தேவை.
* 81 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 33 பாவமுடைய விரிவுரையாளர் மணமகன் விவாகரத்துப் பெற்றுள்ளார். பட்டதாரி மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 7 இல் சூரியனும் செவ்வாயும் 30 பாவமுடைய விவாகரத்துப் பெற்ற டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
* 70 இல் பிறந்த 8இல் செவ்வாய் 43 பாவமுடைய விவாகரத்துப் பெற்ற அரச நிறுவனத்தில் காவலாளியாகப் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.
0776070862 (42599)(12.5.6)

## அதிபரின் இறப்புத் தொடர்பான செய்திகளுக்கு மறுப்பு

*மாரடைப்பே காரணமெனவும் தெரிவிப்பு*

கிளிநொச்சி, டிசெ.14

மாரடைப்புக் காரணமாகவே அக்கராயன் ஆரம்ப வித்தியாலய அதிபர் ப.கணேசலிங்கம் இறந்துள்ளார். சில ஊடகங்களில்அவர்தமதுவீட்டில்இருந்து எடுத்துச் சென்ற உணவை உண்டதால் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டமை தவறானதாகும். இவ்வாறு இறந்த அதிபரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய கிளிநொச்சிவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் பரீட்சைக் கடமையில் இருந்த அதிபருக்கு வீட்டில் இருந்து உணவு வழங்கப்பட்டது. அதனை அங்கிருந்தஅனைவரும் பகிர்ந்து உண்டுள்ளனர். அன்றிரவு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதால் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரது உயிர் பிரிந்துவிட்டது. மருத்துவமனை நிர்வாகத்தினர் அவரது உடலை வழங்குவதற்குத் தயாரான நிலையில் சில ஊடகங்கள், வீட்டில் இருந்து வழங்கப்பட்ட உணவை உண்டதன் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்பதாகச் செய்திகளை வெளியிட்டதால் உடலைப் பெறுவதில் வீணான தாமதம் ஏற்பட்டது. ஊடகங்கள் செய்திகளை வெளியிடும் போது பொறுப்புடனும், உண்மைத் தன்மையுடனும்நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு அவற்றின் மீது நம்பகத் தன்மை ஏற்படும் எனத் தெரிவித்தார். (க-18)

# 12 ஆயிரம் வடபகுதி மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை

## கூறுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, டிசெ.14

போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த 12,000 சிறுவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நாம் கைகொடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.



> ஒரு மனிதனுடைய எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முன்பள்ளியே அத்திபாரம் இடுகின்றது.

வவுனியா அருணோதய முன்பள்ளியின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முத்தையா மண்டபத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

ஒரு மனிதனுடைய எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முன் பள்ளியே அத்திபாரம் இடுகின்றது. நாட்டில் பல முன் பள்ளிகள் இருக்கின்றபோதிலும் அர்ப்பணிப்புடனும் சிறப்பாகவும் அடித்தளம் இடுகின்ற முன்பள்ளிகள் ஒரு சிலவே காணப்படுகின்றன. அந்த வகையில் வவுனியாவில் இருக் கின்ற சிறந்த முன்பள்ளிகளில் ஒன்றாக அருணோதய முன்பள்ளி விளங்குகின்றது. சிறப்பான நிர்வாகக் கட்டமைப்புடன் பாலர் வகுப்பு மாணவர்கள் விரும்பிக் கற்கும் நிலையமாக அது விளங்குகின்றமை பாராட்டப்படவேண்டியது.

எமது நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக தாய், தந்தையரை இழந்த ஆயிரக்கணக்கான சிறார்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையிலுள்ளனர். வடமாகாணத்திலே தாய், தந்தை ஆகியோரை இழந்த, காணாமற் போன குடும்பங்கள் மற்றும் நீண்டகால அரசியல் கைதிகளின் பிள்ளைகள் என 12,000 பேர் உள்ளனர். இந்தச் சிறார்களின் எதிர்காலம் இன்று எமது மக்களுடைய கைகளிலேயே தங்கியுள்ளது. இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு புலம்பெயர் மக்கள், தனவந்தர்கள், தனியார் நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் என்பன உதவி செய்ய முன்வர வேண்டும். உங்களால் செய்யப்படுகின்ற ஒரு சிறு உதவி கூட அவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பெரும் உதவியாக அமையும்.

பாதிக்கப்பட்ட எமது சிறார்கள் சொந்தக் காலில் நிற்கும் வரை நாம் உதவி செய்ய வேண்டியுள்ளது. அதன் மூலமே அவர்களையும் எமது சமூகத்தில் நற்பிரசைகளாக்க முடியும் எனத் தெரிவித்தார்.

எஸ்.தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.ரம்ஸீன், தமிழ் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் என்.எஸ். செல்வரட்ணம், தெற்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வாகீசன், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் தி.மனோகர ராஜா, பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் உட்படப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (க-421)

## 20 வருட சிறைத் தண்டனை வவுனியாவில் நால்வருக்கு

*கொள்ளைக் குற்றத்துக்காக*

கிளிநொச்சி,டிசெ.14

வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட நான்கு பேருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் தலா இருபது வருட சிறைத்தண்டனைவிதித்துள்ளது.

கடந்த 2006 ஆம், 2007 ஆம் ஆண்டுகள் காலப் பகுதிகளில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டு இவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்று வந்தன.

வவுனியா மேல்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்று வந்த வழக்கில் குறித்த நால்வரும் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து நான்கு பேருக்கும் தலா சுமார் இருபது வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிவான் சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் குற்றவாளிகளை முற்படுத்திய போதே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 3குளங்கள் புனரமைப்பு

கிளிநொச்சி,டிசெ.14

முல்லைத்தீவு முத்து ஐயன் கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள மூன்று குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி உடையார்கட்டுக் குளம் 195 மில்லியன் ரூபா செலவிலும், விசுவமடுக்குளம் 85 மில்லியன் ரூபா செலவிலும், மருதமடுக்குளம் 89 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டு வருகின் றன.

மீள்குடியமர்வின் பின்னரான முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்தக் குளங்கள்புனரமைக்கப்பட்டுவரு கின்றன. உடையார் கட்டுக்குளத்தின் கீழ் 950 ஏக்கர் நிலப்பரப்பிலும் விசுவமடுக் குளத்தின் கீழ் 800 ஏக்கர் வரையான நிலப்பரப்பிலும், பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் கடந்த 2008 ஆம் ஆண்டு உடைப்பெடுத்த மருதமடுக் குளத்தின் கீழ் 450 வரையான விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் உலக தரிசன நிறுவனத்தின் வழிநடத்தலில் மல்லாவியில் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்டு மனச்சோர்வு நிலைக்கு உள்ளானவர்களுக்கான சிகிச்சை வழங்கும் இறுதி நாளன்று விளையாட்டு நிகழ்வு ஒன்று இடம்பெறுகின்றது. (க-421)

## சாரதா வித்தியாலயத்தில் சிறப்பான ஒளிவிழா நிகழ்வு

வருடாந்த ஒளிவிழா நிகழ்வு வவுனியா, முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

பாடசாலை அதிபர் பி.நேசராசா தலைமையில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பமாக விருந்தினர்கள் பாடசாலை நுழைவாயிலில் இருந்து அழைத்து வரப்பட்டனர். பின்னர் பாடசாலை அதிபரின் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்ப மாகின.

இந்த நிகழ்வின் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் சி.விஸ்வலிங்கம்கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக 'றோன்ஸ் வேட்' நிறுவனத்தின் இணைப்பாளர் ஆ.பாரதி ஆனந்தன், தேவ அன்பு இல்லப் பொறுப்பாளர் எஸ்.இக்னேசியஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.


வரவேற்புரையை பாடசாலையின் ஆசிரியர் நந்தபாலா நிகழ்த்த சிறப்புரைகளை 'றோன்ஸ் வேட்' நிறுவன இணைப்பாளர் ஆ.பாரதி ஆனந்தன், தேவ அன்பு இல்லப் பொறுப்பாளர் எஸ்.இக்னேசியஸ் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் இந்தப் பாடசாலையில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்ற மாணவி எஸ்.அனுசியாவுக்கும், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குமான கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்கள் பரிசில்களை வழங்கினர். இதேவேளை இந்த மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை154 புள்ளிகளைப் பெற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி எஸ்.அனுசியாவுக்கு பாடசாலை அதிபர் பி.நேசராசா தமது சொந்த நிதியிலிருந்து மாணவியின் கல்வி வளர்ச்சிக்காக 5,000 ரூபாவை அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (க-421)

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி செல்வநாயகம்

கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி செல்வநாயகம் 10.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லர்-சின்னத்தங்கச்சி தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் -பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், இராசேந்திரம், பரமேஸ்வரன், யோகேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி, சோமாவதி, சத்தியானந்தன், இராசலிங்கம் காலஞ்சென்றவர்களான இராசநாயகம், துரைராசா, அரசநாயகம், சிவபாக்கியம், பொன்னுத் துரை இராஜேஸ்வரி (மாம்பழம்), பரமநாதன் ஆகியோரின் மைத்துனியும், பிரபாகரன், பிரபாகினி, சுபா, கிருபாகினி, நிருபாகரன் ஆகியோரின் பெரியதாயாரும், தர்சன், கயலினி, பிறேம்காந், பார்த்தீபன், மீராகினி, தனுஜா, சிந்துஜா, குணரூபன், யசிமீரா, தர்மராஜா, சிவனேஸ்வரன், மதுஜா, காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் யோகேந்திரா, மகேந்திரா, விஜேந்திரா, விமலாதேவி, கமலாதேவி, சறோசாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிவேதன், நிருசிகா, ஜனனி, அனுஜன், அசானா, யனார்த்தன், மதுசன், சௌமியா, உதயசங்கர், திஷான், பவிஷன், தர்சுபன், அக்ஷயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில். (42537)(3.6.4)

தகவல்:
சே.இராசேந்திரம் (வெள்ளை)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு அபராதம்

அம்பாறை.டிசெ.14
அம்பாறை,இறக்காமம் பிரதேசத்தில் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த முதியவருக்கு அபராதமாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் செல்வி எம்.எஸ். பிரிங்கி உத்தரவிட்டுள்ளார்.
தமண பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து இறக்காமம் பிரதேசத்தில் வைத்து 5 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் முதியவர் ஒருவரைக் கைது செய்து குறித்த தினமொன்றில் நீதிமன்றத்தில் முன்னிலை யாகுமாறு பொலிஸார் உத்தர விட்டு பிணையில் விடுவித்தனர். அதனையடுத்து இந்த நபர் புதன்கிழமை அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகியபோது அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு நீதிபதி உத்தர விட்டு தீர்ப்பளித்தார். (ச)



கல்முனை மாநகர சபை , கல்முனை பொலிஸ் நிலையம் என்பன இணைந்து கல்முனை நகரில் ஏற்பாடு செய்துள்ள டெங்கு ஒழிப்பு சிரமதானம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சிரமதானப் பணியில் கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.எம்.கபார், மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலி ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# பிரிவை ஏற்படுத்த துணை போகாதீர்

### ஆரிப் சம்சுடீன் வேண்டுகோள்

கல்முனை.டிசெ.14
கல்முனைப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தும் முயற்சிக்கு எந்தவொரு சமூகமும் துணை போகக் கூடாது. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
ஆண்டாண்டு காலமாக இரு சமூகங்களையும் சார்ந்த பாமர மக்கள் முதல் படித்த மக்கள் வரை ஒற்றுமையாகவே கல்முனைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர்.
எனினும் ஒரு. சில குழுக்களின் செயற்பாடுகளினால் கல்முனை பிரதேசத்தில் இரு சமூகங்களிடையேயும் ஒற்றுமை சீர்குலைந்து காணப்பட்டது.
அந்தச் சூழ்நிலை மாறி, கடந்த 1990 ஆம் ஆண்டுகளின் பின்னர் கல்முனைப் பிரதேசத்தில் இரு சமூகங்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றன.
அம்பாறை மாவட்டத்திலோ அல்லது வடக்கு, கிழக்கிலோ இன ரீதியாக பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படவில்லை. அவ்வாறு இருக்கையில், கல்முனையில் மாத்திரம் ஏன் இன ரீதியாக பிரதேச செயலகத்தைப் பிரிக்கக் கோருகிறார்கள் என்பது புரியவில்லை. -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# திருமலைத் தாக்குதல்; ஐ.நாவிடம் முறையீடு

### காணாமற்போனோரைத் தேடியறியும் குழு விரைவில் அறிக்கை

திருகோணமலை.டிசெ.14
சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் திருகோணமலை நகரில் காணாமற் போனோரின் உறவுகள் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தின் மீது காடையர்கள் குழு நடத்திய காட்டு மிராண்டித்தனமான த்தாக்குதல் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் முறைப்பாடு செய்யப்பட வுள்ளது. காணாமற்போனோரைத் தேடியறியும்குழு அறிக்கை வடிவில் இந்த முறைப் பாட்டை சமர்ப்பிக்கவுள்ளது.



காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் இந்தத் தகவலை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தினார்.
எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் பங்கேற்க வரும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் தமக்கு நீதி பெற்றுத் தருமாறு கோருவதற்காக காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் ஏற்பாட்டில் காணாமற் போனோரின் உறவுகள் ஜெனிவா செல்லவுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.
பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்கச் சிங்களவர்களும், இராணுவப் புலனாய்வாளர்களும் நடத்திய இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் காணாமற் போனோரின் உறவுகள், காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் காயமடைந்தனர் என்று அவர் கூறினார்.
காணாமற்போனோருக்கும் அவர்களைத் தேடும் அவர்களின் உறவுகளுக்கும் ஐ.நாவில் நீதி கிடைக்கும் வரை வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் தொடரும். எந்த அச்சுறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் நாம் அடி பணியமாட்டோம். தீர்வு கிடைக்கும் வரை ஓய மாட்டோம்" - என்றும் அவர் தெரிவித்தார். (ச-சி)

# மட்டக்களப்பில் இடர் ஒத்திகை

மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ ஒத்திகை பெரிய கல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் இன்பராஜா, இராணுவத்தினர் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இடர் ஏற்பட்டால் எவ்வாறு விரைவாகப் பாதுகாப்பான இடத்தை நோக்கிச் செல்வது என்பது குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (ச)

# மனைவியை மீட்டுத்தரக் கோரி கணவன் போராட்டத்தில் குதிப்பு

### திருமலையில் பிள்ளைகளுடன் களமிறங்கினார்

திருகோணமலை,டிசெ.14
வெளிநாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ள தனது மனைவியை மீட்டுத்தருமாறு கோரி திருகோணமலையைச் சேர்ந்த நபர், மூன்று பிள்ளைகளுடன் நேற்றுமுன்தினம் காலை முதல் புல்மோட்டைச் சந்தியில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்துள்ளார்.
திருகோணமலை, புல்மோட்டை, அரபாத் நகரைச் சேர்ந்த அபூபக்கர் முகமட் ரபீக் என்ற நபரே பிள்ளைகளுடன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். வெளிநாட்டுக்குச் சென்ற நான் கடந்த செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி நாட்டுக்கு திரும்பிய போது மனைவி வீட்டில் இருக்கவில்லை.
அலியார் மைமூனாஸ் என்ற பெயரை கொண்ட தனது மனைவிக்கு அலியார் அஸீமா என பெயரை மாற்றி தயாரித்த போலியான அடையாள அட்டையை பயன்படுத்தி கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அபூபக்கர் முகமட் ரபீக் தெரிவித்தார்.
தனது மனைவியை உள்ளூரிலுள்ள முகவர் ஒருவரே கொழும்புக்கு அழைத்துச் சென்று போலியான ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளார் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இந்தச் சம்பவம் குறித்து கொழும்பிலுள்ள பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்வதற்குச் சென்றபோதிலும், பொலிஸ்நிலையங்களில் பொலிஸார் தன்னுடைய முறைப்பாட்டை பதிவு செய்து கொள்ளவில்லை. "பொலிஸாரின் அலட்சிய நடவடிக்கையை அடுத்தே எனது மனைவியை உடனடியாக மீட்டுத்தருமாறு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன் என்று அவர் கூறினார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25 ★ 01 ★ 1948

மறைவு
26 ★ 11 ★ 2012

அமரர் கந்தையா தர்மலிங்கம்

திதி: கார்த்திகை மாத பூர்வபக்க திரயோதசி

இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
நீங்காத எந்தையே
உமை நினைந்தே தொழுகின்றோம்
உய் வழிகள் காட்டிடுவீர்


நீங்காத நினைவுகளுடன்
மனைவி, மகன்மார், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(சி/14366)3.6.4)

# 600 கத்தோலிக்கர் இலங்கையில் தஞ்சம்

இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் தொந்தரவுகள் மற்றும் இடையூறுகளால் பாகிஸ்தானைச் சேர்ந்த 600 கத்தோலிக்கர்கள் இலங்கையில் தஞ்சமடைந்துள்ளனர் என்று சிலாபம் மறை மாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.
இவர்கள் கொழும்பு மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.
இந்த மக்களுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். மூன்றாவது நாடு ஒன்றுக்கு செல்லும் நோக்கத்தில் அவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)


கென்யாவின் மொய் சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்ற கென்யாவின் சுதந்திரதின வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

# ரூ. 10,000 அபராதம்

கொழும்பு,டிசெ.14
தங்கத்தின் விலைப் பட்டியலைக் காட்சிக்கு வைக்காத நகைக்கடை உரிமையாளருக்கு 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையையடுத்து பதுளை குற்றவியல் நீதி மன்ற நீதிபதி இவ்வாறு தீர்ப்பளித்தார்.
பதுளை நகரில் பிரதான நகைக்கடை ஒன்றில் தங்கத்தின் விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாது தங்க விற்பனை செய்து வந்த உரிமையாளர் தொடர்பாகப் பதுளை நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் அக் கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். இந்த நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த நபர் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டமையையடுத்து 10 ஆயிரம் ரூபாவை அபராத மாக செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச)

# தமிழருக்குச் சம உரிமை வழங்கப்பட வேண்டும்

*ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு*

கொழும்பு,டிசெ.14
"நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப் படுத்தி, தமிழர்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும்.
இதையே கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் அரசிடம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்" என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.



கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, "அரசு, நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்தி, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்" எனத் தெரிவித்திருந்தமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்ததாவது:-
"கர்தினால் ஆண்டகை தெரிவித்துள்ள கருத்து ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் எமக்கு மகிழ்சியளிக்கின்றது.
அவரது வேண்டுகோள் நியாயமானதே. ஐ.தே.கவின் நிலைப்பாடும் இதுவே. நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடை முறைப் படுத்த வேண்டும். அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். தமிழர்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என நாமும் தொடர்ந்தும் அரசிடம் வலியுறுத்திக் கொண்டே வருகிறோம்.
ஆனால், அரசினால் இவையெதுவும் இன்னமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.
தற்போது, ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருப்பதும் அரசுக்கு ஓர் முன்னெச்சரிக்கையே ஆகும். அவர் கூறியதைப் போன்றே அரசு செயற்பட வேண்டும். இல்லையேல் அடுத்த மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தொடரில் அரசு நிச்சயமாக மாட்டிக்கொள்ளும்.
சர்வதேச விசாரணையைக் கூட அரசு மனம் வைத்தால் இல்லாதொழிக்கலாம்.
உள்நாட்டுப் பிரச்சினையை உள்நாட்டிலேயே தீர்த்து வைத்தால் இது போன்ற பிரச்சினை வராது? இதை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். -என்றார். (ச-சி)

# விபத்தில் 2 பேர் சாவு

கொழும்பு,டிசெ.14
இரத்தினபுரி, பாணந்துறை பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தொன்றில் இராணுவ அதிகாரியொருவரும் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.
இந்த விபத்து இரத்தினபுரி நகருக்கு அண்மையில் இடம் பெற்றது. இராணுவ அதிகாரி ஒருவரும் விசேட அதிரடிப் படை வீரர் ஒருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் மதில் சுவரொன்றில் மோதி விபத்து இடம்பெற்றது. இந்த விபத்தில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். (ச)

# போதைப் பொருள் விவகாரம்: சபையில் பிரதமருடன் விவாதம்

*கேள்விக்கணை தொடுத்தார் ஐ.தே.க எம்.பி.*

கொழும்பு,டிசெ.14
அண்மையில் கைப்பற்றப்பட்ட 200 கிலோவுக்கும் மேற்பட்ட ஹெரோயின் போதைப்பொருள்களை விடுவிக்குமாறு பிரதமர் அலுவலகம் வழங்கியதாகக் கூறப்படும் கடிதம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜிவ சேனசிங்க நேற்று முன்தினம் சபையில் வைத்து பிரதமரிடம் கேள்வி எழுப்பியதால் இவ்விவகாரம் தொடர்பில் இருவருக்குமிடையில் கடும் சொற் போர் ஏற்பட்டது.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டுறவு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க ஆரம்பத்தில் குறித்த விடயதானங்கள் பற்றிப் பேசினார்,
இவ்வாறு அவர் உரையாற்றிக் கொண்டிருக்கையிலேயே சர்ச்சைக்குரிய அந்தக் கடிதம் தொடர்பிலும் கேள்விகளைத் தொடுத்தார்.
"போதைப்பொருள்களை விடுவிப்பதற்குக் கடிதம் வழங்கிய பிரதமர் பதவி விலக வேண்டும்" என்று அரச பங்காளியான ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.
இந்தக் கடிதம் தொடர்பில் நானும் பிரதமரிடம் கேள்வியெழுப்பியிருந்தேன்.
ஆனால், அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சுட்டிக்காட்டினார்.
இதன்போது குறுக்கீடு செய்த பிரதமர்,
"இது தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம் பெறுகின்றன.
நான் சபாநாயகருக்கும் கடிதமொன்றை வழங்கியுள்ளேன். விசாரணைகள் முடியும் வரை அமைதியாக இருக்கின்றேன்" என்று கூறினார். (ச-சி)



விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை

★ பல் முக சீராக்கல்
(Consultant ortho dontist)
★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)



மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

தொடர்புகளுக்கு – 077 654 4731 (தர்ஷினி)

பல் வைத்திய நிலையம்
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6069

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 320 2300
021 720 1587

(42629)(7.6.3)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசின் வயிற்றில் புளிகரைக்கும் ஐ.நாவின் விசேட பிரதிநிதி பெயானி

● இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் விவரங்கள் குறித்து வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும்.

● பொதுமக்கள் வாழும்- செயற்படும்- இடங்களில் இருந்து படையினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.

● இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைக்குக் காத்திரமான தீர்வு காணப்பட வேண்டும்.

–அவற்றின் பொருட்டு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட யுக்தி நிறைந்த உத்தி தேவை.

உள்ளூரில் இடம்பெயர்ந்தோருக்கான விவகாரங்கள் உட்பட மனித உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதியான கலாநிதி சாலோகா பெயானி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு உட்பட அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்த அவர், நிலைமையை நேரில் அவதானித்து ஐநா. மனித உரிமைகள் சபைக்குத் தாம் சமர்ப்பித்த அறிக்கையிலேயே இந்த முக்கிய அம் சங்களை வெளிப்படுத்தி உள்ளார்.

போருக்குப் பிந்திய காலத்தில் மேற்கொள்ளப் பட்ட நிவாரண உதவி நடவடிக்கைகளில் இருந்து அபி விருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்கு மாறுகின்ற காலப் பகுதியில்–

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் காத்திரமான நடவடிக்கைகளை, ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தமது அறிக்கையில் இடித்து உரைத்துள்ளார். அந்த அறிக்கை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்திருந்தவேளை, சாலோகா பெயானி, போரினால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்கள் உட்பட வடக்கில் பல பகுதிகளை நேரில் சென்று பார்வை இட்டவர். இங்குள்ள அரச அதிகாரிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களையும் சந்தித்து கள நிலைமைகளையும் விவரங்களையும் நேரில் கேட்டறிந்தவர்.

அந்த அனுபவத்தின் பாற்பட்டு, அவர் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டிய பின்வரும் அம்சங்களும் அறிக்கையில் அடங்கி உள்ளன:

✱ இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான சாதகமான நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

✱ காணிகளுக்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

✱ தேசிய பாதுகாப்புக்கான இராணுவக் கரிசனையோடு மட்டும் செயற்படாமல், பொதுமக்களின் நடமாடுவதற்கான–வாழ்வதற்கான இடத்தைத் தேர்வு செய்வதற்கான உரிமைகளுக்கும் இடமளிக்க வேண்டும். அவற்றில் சமநிலைத் தன்மை பேணப்பட வேண்டும்.

✱ இலங்கையில் போர் நடைபெற்ற பகுதிகளைப் பொறுத்தவரை அங்குள்ள பெண்கள், மற்றும் சிறுமிகளின் உடல் ரீதியான தன்னாதிக்கம், அவர்களது இனப்பெருக்கத்துக்கான உரிமை என்பன பாதுகாக்கப்பட வேண்டும்.

இதேவேளை–

இடம்பெயர்ந்து மீளத்திரும்பியோர் அல்லது மீள் குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதை பெயானி வரவேற்றுள்ளார். அதனை உரிய வகையில் பூர்த்தி செய்வதன் மூலமே இடம்பெயர்ந்தும் பதிவு செய்யப்படாதவர்களின் விவரங்கள் மற்றும் தமது சொந்தக் காணிகளுக்குத் திரும்பமுடியாதவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைச் சரியாகக் கண்டறிந்து அவற்றுக்கு நிரந்தரமான தீர்வை வகுக்க முடியும் என்றும் தொழில் நுட்பத்துடன் (Professionally) எடுத்துரைத்துள்ளார்.

அதுமட்டுமன்றி, ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அலுவலர்களை நாட்டிற்குள் பிரவேசிக்கக் கூடாது என்று எதிர்த்து வந்த இந்நாட்டு அரச அதிகாரிகள்–

இங்கு பயணம் செய்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அனைத்துலக விசாரணைக்கான காலக் கெடுவை "விதித்ததன்" விளைவாகவே, விசேட பிரதிநிதி கலாநிதி சாலோகா பெயானி இங்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் கொள்ளலாம் அல்லவா?

எவ்வாறெனினும், மனித உரிமைகளுக்கான ஐநாவின் சிறப்புப் பிரதிநிதியின் வருகை, எமது அரசு மறைத்து வைத்திருக்கும் பல ஆக்கபூர்வமற்ற நிலைமைகளை, அனைத்துலகத்துக்குப் புட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது. அவற்றைப் புறந்தள்ள முடியாத இக்கட்டான நிலை கொழும்பு அரசாங்கத்துக்கு இப்போது ஏற்பட்டுள்ளது.

# நீதி கிடைக்குமா....?



ஒரு ராஜீவ் காந்தி உயிர் போனதற்காக ஓர் இனத்தையே ஈழத்தில் அழித்திட இலங்கைப் போரில் இந்தியா பங்கு கொண்டது. இந்திய அரசும் வடநாட்டு ஊடகங்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களையும் ஈழத்தமிழர்களையும் குற்றப்பரம்பரையினர் போல் இன்று வரை சித்திரித்து வருகின்றன.

ஆனால் இப்போது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அப்பாவிகளே தண்டிக்கப்பட்டுள்ளனர்; தூக்குக் கொட்டடியிலும் கொடுஞ்சிறையிலும் இருபத்திரண்டு ஆண்டுகளாக அப்பாவிகளே வதைபடுகின்றனர் என்ற உண்மைகள் வெளிவந்துள்ளன.

ஒப்புதல் வாக்கு மூலம் - கொலைச் சதி என்ற இரண்டு கற்கள் மீது இவ் வழக்கு கட்டப்பட்டது. இவ்விரண்டும் பொய்யாகப் புனையப்பட்டவை என்பதை அவ்வழக்கை விசாரித்த அதிகாரி தியாகராசனின் ஒப்புதல் வாக்கு மூலமும், நீதிபதி கே.டி.தோமஸ்ஸின் கூற்றும் மெய்ப்பிக்கின்றன.

ஒப்புதல் வாக்கு மூலம் சாதாரணமாகப் பேசி வாங்கப்படுவதில்லை. பிடித்து வைத்துள்ள நபருக்குக் கடும் சித்திரவதைகள் செய்து விசாரணை அதிகாரிகள் சொல்லும் குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொள்ளும் கட்டாயத்தை அந்தநபருக்கு உண்டாக்குவார்கள். இப்படிப் பெறப்படும் ஒப்புதல் வாக்கு மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மனம் திருந்தி, குற்றத்தை ஒப்புக் கொண்டதால் கொடுக்கப்பட்டது என்று சட்டம் கூறுகிறது.

சென்னை அடையாற்றில் உள்ள மல் லிகை மாளி கைதான் - சித்திரவதை முகாமாக, சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்தி கேயனால் மாற்றப்பட்டது. அங்கு வைத்துத் தான் பேரறிவாளன் உள்ளிட்ட பதினாறு பேரிடம் தியாக ராசன் ஒப்புதல் வாக்கு மூலம் வாங்கினார். பணி ஓய்வு பெற்ற தியாகராசனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டது; பேரறி வாளன் சொல்லாத ஒன்றைச் சொன்ன தாக எழுதி நாம் அவரிடம் கையை முத்து வாங்கி, ஒப்புதல் வாக்கு மூலம் தயாரித்து விட்டோம்; அதனால் அவர் தூக்கிலிடப் படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

### உண்மை ஒருபோதும் உறங்குவதில்லை

சென்னை அடையாற்றில் உள்ள மல்லிகை மாளிகைதான் - சித்திரவதை முகாமாக, சிறப்புப் புலனாய்வுக் குழுத்தலைவர் கார்த்திகேயனால் மாற்றப்பட்டது. அங்கு வைத்துத்தான் பேரறிவாளன் உள்ளிட்ட பதினாறு பேரிடம் தியாகராசன் ஒப்புதல் வாக்கு மூலம் வாங்கினார்.

பணி ஓய்வு பெற்ற தியாகராசனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டது; பேரறிவாளன் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக எழுதி நாம் அவரிடம் கையெழுத்து வாங்கி, ஒப்புதல் வாக்கு மூலம் தயாரித்துவிட்டோம்; அதனால் அவர் தூக்கிலிடப் படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. தாம் செய்தது அறம் தவறிய செயல் என்று வருந்தி, இப்போது மௌனம் கலைத்திருக்கிறார்.

சிவராசனுக்குப் பற்றறி வாங்கிக் கொடுத்தேன். ஆனால் அது என்ன காரியத்திற்காகத் தேவைப்பட்டது என்று அவர் என்னிடம் சொல்லவில்லை; அவர் ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கான வெடிகுண்டை இயக்குவதற்காக இந்த பற்றறியைப் பயன்படுத்தப் போகிறார் என்ற செய்தி எனக்குத் தெரியாது என்று பேரறிவாளன் சொன்னதைப் பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன் என்று இப்போது தியாகராசன் கூறுகிறார். ஏன் அந்தத் தவறைச் செய்தீர்கள் என்று கேட்டதற்கு அவ்வாறு நான் செய்யாமல், அறிவு சொன்னதை அப்படியே எழுதியிருந்தால் அவர் குற்றம் செய்ததாக ஆகாது. குற்றம் செய்ததை ஒப்புக் கொண்டு சொல்வதுதான் ஒப்புதல் வாக்கு மூலம்; எனக்கு மேலதிகாரிகள் இட்ட பணி ஒப்புதல் வாக்கு மூலம் வாங்க வேண்டும் என்பதுதான்; காவல்துறை எப்போதுமே தனது வழக்குத் தயாரிப்புக்கு இசைவாகவே ஒப்புதல் வாக்கு மூலம் தயாரிக்கும். அதைத்தான் அறிவு விசயத்திலும் நான் செய்தேன். ஆனால் அது ஓர் உயிரை வாங்கப் போகிறது என்று தெரிந்ததும் உறுத்தல் ஏற்பட்டது; தூக்கம் போனது; அறம் தவறக்கூடாது என்பதற்காக உண்மையைச் சொல்கிறேன் என்கிறார் தியாகராசன்.

### புனையப்பட்டது பொய்வழக்கு

உச்ச நீதிமன்றத்தில், காத்ரி, கே.டி. தொமஸ், வாத்வா ஆகிய மூன்று நீதிபதிகள் இவ்வழக்கை விசாரித்தனர். இந்த அமர்வுக்குத் தலைமை தாங்கியவர் கே.டி. தொமஸ். அவர் ஓய்வு பெற்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் கடந்த சில ஆண்டுகளாக, ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர்களைத் தூக்கிலிடக்கூடாது. வாழ்நாள் தண்டனையாக அதை மாற்றவேண்டும் என்று கோரி வருகிறார்.

அது பொதுவான சாவுத் தண்டனை ஒழிப்புக்குரல் மட்டுமன்று. குற்ற உணர்வின் வெளிப்பாடாகவும் உள்ளது. அவர் இப்போது சொல்கிறார்:7.5.1991 அன்று சிவராசன் விடுதலைப் புலிகள் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு பேசியபோது குறிப்பிட்ட செயல் பற்றி தமிழ்நாட்டில் யாருக்கும் தெரிவிக்க வில்லை என்று கூறியுள்ளார். இது காவல்துறையின் குற்ற அறிக்கையில் இருந்தது. ஆனால் அதை நாங்கள் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டோம் என்கிறார். நீதிபதிகள் அதைப் கவனத்தில் எடுத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கான சதி ஆலோசனையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் கலந்து கொள்ளவில்லை என்றாகும். அதாவது சி.பி.ஐ. போட்ட 120பி என்ற குற்றச் சதி மெய்ப்பிக்கப்படாமல் போயிருக்கும். 120பி செல்லாததாகி, ஒப்புதல் வாக்கு மூலங்கள், காவல்துறை அதிகாரியின் விருப்பப்படி தயாரிக்கப்பட்டவை என்று ஆகிவிட்டால் பின்னர் இந்த வழக்கில் யார் மீதான குற்றச்சாட்டும் நிற்காது. புனையப்பட்ட இந்தப் பொய் வழக்குக் கட்டடம் தானாகவே பொலபொலவெனச் சரிந்து விழுந்து மண்மேடாகி விடும்!

### தமிழன் என்பதால் தீர்ப்பிலும் பாரபட்சம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையில் அதிகாரிகளும், தீர்ப்பளிப்பதில் நீதிபதிகளும் சட்டத்தைக் கடைபிடிக்க வில்லை. கொல்லப்பட்ட ராஜீவ் காந்தி, நேருவின் பேரன். இந்திராவின் மகன் - முன்னாள் பிரதமர் என்ற அடிப்படையில் அரண்மனை விசுவாசத்தை மட்டுமே அளவுகோலாக வைத்துள்ளனர்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம்; பத்துக் குற்றவாளிகள் தப்பினாலும் ஓர் அப்பாவி தண்டிக்கப்படக் கூடாது என்று ஆட்சி யாளர்களும் நீதித்துறையினரும் பேசுவதெல்லாம் வெறும் பசப்பு வார்த்தைகள் என்பது ஐயம் திரிபற மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற மூன்று நீதிபதிகளும் தங்கள் தீர்ப்புரையில், ராஜீவ் கொலைகாரர்களுக்கு சாவுத் தண்டனை வழங்க வேண்டும் என்பது தேசத்தின் கூட்டு மனச் சான்றின் விருப்பம் ஆகும் என்று கூறியுள்ளார்கள். ஒருகொலை வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்கள் குற்றவாளிகள் என்பது ஐயம் திரிபற மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்பது தான் சட்டத்தின் தேவை. பொதுமக்கள் விரும்புகிறார்கள். எனவே சில பேரையாவது தூக்கில் போட வேண்டும்; சில பேருக்காவது வாழ்நாள் சிறைத் தண்டனை வழங்க வேண்டும் என்பது சட்டத்தின் வற்புறுத்தல் அன்று. இந்திய நீதித்துறையின் மிக உச்சத்தில்

காவல்துறை எப்போதுமே தனது வழக்குத் தயாரிப்புக்கு இசைவாகவே ஒப்புதல் வாக்கு மூலம் தயாரிக்கும். அதைத்தான் அறிவு விசயத்திலும் நான் செய்தேன். ஆனால் அது ஓர் உயிரை வாங்கப் போகிறது என்று தெரிந்ததும் உறுத் தல் ஏற்பட்டது; தூக்கம் போனது; அறம் தவறக்கூடாது என்பதற்காக உண்மையைச் சொல்கிறேன் என்கி றார் தியாகராசன்.

உட்கார்ந்திருக்கும் கற்றறிந்த நீதிபதிகளே, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சில பேரையாவது தூக்கில் போடவேண்டும் என்பது பொதுமக்கள் விருப்பம் என்று கூறினால் இந்நாட்டில் நீதி என்ன யோக்கியதையில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் இந்திராகாந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் பொது மக்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக நாலைந்து பேரைத் தூக்கிலிடவில்லை; நாலைந்து பேருக்கு வாழ்நாள் தண்டனை வழங்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழ் இனத்துக்கு எதிராக வரும்போது இந்தியா எல்லா நிலையிலும் இனக் காழ்ப்புணர்ச்சியோடு நடந்து கொள்கிறது.

(தமிழ்த்தேசிய தமிழர் கண்ணோட்டம்)

# ஊடகங்கள் மீதான தாக்குதல் ஊடக சுதந்திரப் படுகொலையே

## சபையில் சரவணபவன் எம்.பி. சீற்றம்



சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் ஊடகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதும் அவை தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படாமையும் இந்த நாட்டில் ஊடக சுதந்திரத்தைக் கொலை செய்யும் நடவடிக்கைகளாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தகவல் ஊடகத்துறை அமைச்சு மீதான் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சரவணபவன் எம்.பி. இவ்வாறு கூறினார். அவரது உரை வருமாறு:

இன ஒடுக்குமுறைக்கு எதிராக உறுதியான போராட்டத்தை நடத்தி 27 வருடங்கள் கொடிய சிறைவாசம் அனுபவித்த போதிலும் கூட தனது இலட்சிய உறுதியில் தளராது நின்று கறுப்பின மக்களை விடுவித்த மாமனிதர் நெல்சன் மண்டேலாவுக்கு இனவாத அநீதிகளுக்கு எதிராகப் போராடும் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் எனது மனப்பூர்வமான அஞ்சலியைச் செலுத்தி எனது உரையை இங்கு நான் ஆரம்பிக்கின்றேன்.

மாமனிதர் நெல்சன் மண்டேலா இன ஒடுக்குதல் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடிய அதே வேளையில் கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவற்றை அடைவதிலும் தன் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்துள்ளார். குறிப்பாக நீதிமன்றத்தைக் கூட ஓர் ஊடகமாக்கி மக்களை எழுச்சிபெற வைக்கமுடியும் என்பதற்கு, அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட போது அவர் ஆற்றிய நீதிமன்ற உரை சாட்சியம் சொல்லி நிற்கின்றது. அவரது போராட்ட வலிமையையும் நியாயத்தையும் ஊடகங்கள் உலகெங்கும் கொண்டு சென்றன. அதன் காரணமாக அவரைப் பயங்கரவாதியாகப் பிரகடனம் செய்த நாடுகள் கூட அவரது கருத்துக்களை ஆதரிக்கவேண்டிய நிலை எழுந்தது.

முழு உலகத்துடனும் இணைந்து எமது நாடும் அந்த மாமனிதருக்கு இன்று அஞ்சலி செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் சட்ட பூர்வமாகவும், சட்ட பூர்வமற்ற வழிமுறைகள் மூலமும் ஊடக ஒடுக்குமுறை தலைவிரித்தாடும் எமது நாட்டில் நாம் அவருக்கு அஞ்சலி செய்யும் தகுதி உள்ளவர்கள் தானா என எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம்.

இங்கு இந்தச் சபையில் பல உறுப் பினர்கள் பல விடயங்கள் பற்றியும் பேசினார்கள். தொழில் துறைகளில் இருப்பவர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்ற பல்வேறுதுறைகளில் உள்ளவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள், வசதியீனங்கள் யாவும் எடுத்துக் கூறப் பட்டன. அவைகள் தேவையானவை தான். அதைப்போலவே எமது சமூகத்தில் இருக் கும் இன்னொரு சமூகத்தினரைப் பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்புகின் றேன். அவர்கள் தான் இந்த நாட்டிலுள்ள ஊடகவியலாளர்கள். இவர்கள் பலதரப்பட்ட ஊடகங்களில் பணிபுரிகின்றார்கள்.

ஏனைய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் போலவே இவர்களும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணிபுரிகிறார்கள். ஏதோ செய்திகளை எடுத்துப் பிரசுரித்துவிட்டு அல்லது வெளிப்படுத்தி விட்டு அவர்கள் சொகுசாக வாழ்க்கை நடத்துவதாக எவரும் நினைப்பார்களானால் அது மிகவும் தவறான ஒரு விடயம்.

அன்றாட வாழ்வில் அவர்களும் மற்றவர்களைப் போலவே கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. பிள்ளைகள் இருக்கின்றார்கள். குடும்பப் பொறுப்புகள் இருக்கின்றன. வீட்டுப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை என்று நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

அவர்கள் வெளியிடும் செய்திகள், கட்டுரைகள், படங்கள் போன்றவற்றுக்காக எத்தனையோ விதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். ஆபத்துக்களைச் சந்திக்கின்றார்கள். இரவு பகல் பார்க்காமல் உழைக்கின்றார்கள். சில பல வேளைகளில் சரியான நேரத்தில் சரியாகச் சாப்பிடாமல் ஒரு பணிஸ், ஒருவடையைச் சாப்பிட்டு தேநீர், கோப்பியை அருந்திவிட்டு கடமை புரிகின்றார்கள். சில வேளைகளில் அதிகாரிகளின் கோபம், படையினரின் தாக்குதல், சில வேளைகளில் தம் உயிரையும் பணயம் வைக்கிறார்கள் இந்த ஊடகவியலாளர்கள். இவைகளைக் கவனித்து அவர்களுக்கும் நிவாரணம் அளிக்கவேண்டும் என்று எவரும் சிந்திக்காமல் இருப்பது கவலையளிக்கிறது.

கடந்த வருடம் ஊடகவியலாளர்களுக்கு 12 லட்சம் ரூபாய் கடனாக தருவதாக ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. அது உண்மையில் வரவேற்கவேண்டிய ஒன்று. அதே போன்று ஊடகவியலாளர்களுக்கென்று அரசு திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது அவசியம் என்று நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

கடந்த காலங்களில் கொழும்பிலுள்ள ஊடகவியலாளர்களுக்கென்று வீடு வழங்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதே போன்ற திட்டங்கள் கொழும்பு ஊடகவியலாளர்களுக்கு மட்டுமின்றி வெளியூர் ஊடகவியலாளர்களுக்கும் பயன்படும் படியாக நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம்.

மடிக்கணினிகளும் புகைப்படக் கருவிகளும் அவசியம் தான். அதே போல் வீட்டு வசதி, வாகன வசதி, போன்ற விடயங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கு நிதி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். இன்னொரு விடயம், நாடு முழுவதிலும் உள்ள ஊடகவியலாளர்கள் தமது பணிகளில் ஈடுபடும்போது தாக்குதலுக்கு உள்ளாவது, விபத்துகளில் சிக்குவது போன்றவற்றுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அவ்வாறான சம்பவங்களில் உயிர் இழக்க நேரிடுமானால் அவர்களுக்கு மிக இலகுவாக நிதி வசதிகள் கிடைக்கும் வகையில் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

நாட்டில் நடப்பவைகள் யாவும் நாளைய தினம் பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் வெளிவந்து விடுகின்றன. அதற்காக உழைக்கும், இரவு பகல் பாராது பணியாற்றும் ஊடகவியலாளர்களை நாம் மறந்துவிடகூடாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எமது நாட்டில் துணிச்சலுடனும் நேர்மையுடனும் உண்மைகளை வெளியிட்ட, நியாயங்களுக்கெதிராகக் குரல் கொடுத்த எத்தனையோ ஊடகவி யலாளர்கள் நட்ட நடுவீதியில் பலர் பார்க்கப் படுகொலை செய்யப்பட்டனர். பலர் காணாமற்போய் விட்டனர். பலரின் வீடுகள் தாக்கப்பட்டன. பலருக்குக் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. பலர் சிறை செய்யப்பட்டனர். பலர் உயிர்ப் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

இப்படியான நிலையில் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. எம்.ரி.வி., லங்கா ஈ.நியுஸ், உதயன் போன்ற ஊடக நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றுக்குப் பொருள் சேதங்களும் பணியாளர்களுக்கு உயிர்ச் சேதமும் விளைவிக்கப்பட்டன. ஆனால் இன்று வரை இப்படியான வன்முறைகள் தொடர்பாக நீதி கிடைக்கவில்லை. இந்நிறுவனங்களுக்கு எவ்வித நட்டஈடுகளும் வழங்கப்படவில்லை. ஆனால் ஊடகங்களின் குரலை ஒடுக்க ஊடக ஒழுக்கக் கோவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படும் சட்ட விரோத வன்முறைகளின் பின்னால் அதிகாரம் படைத்த அரசசார்பு சக்திகள் உண்டு என நாம் சந்தேகப்படுவதை எவராவது தவறு என்று சொல்லிவிட முடியுமா?

வடக்கில் பிரபல ஊடகவியலாளராக விளங்கிய நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் படுகொலைசெய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டனர். பின்பு அவர்கள் சட்டமா அதிபரின் சம்மதத்துடன் பிணையில் விடப்பட்டனர். இவ் வழக்கில் பிரதான எதிரியான ஈ.பி.டி.பி உறுப்பினர் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இன்றுவரை அவர் கைதுசெய்யப்படவோ அல்லது அவரைக் கைது செய்ய இன்டர்போல் அமைப்பைக் கோரவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் கொல்லப்பட்டு 10 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும் இன்றுவரை நீதி கிட்டவில்லை. இதில் அதிகாரம் படைத்தவர்களின் பின்னணி இல்லையெனச் சொல்லிவிடமுடியுமா?

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க சர்வதேச அளவில் மதிக்கப்பட்ட ஒரு பிரபல ஊடகவி யலாளர். அவர் பட்டப் பகலில் நட்ட நடு வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது படுகொலை தொடர்பாக இருவர் கைதுசெய் யப்பட்டனர். ஒருவர் தடுப்புக் காவலில் இருந்தபோதே நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். மற் றவர் போதிய ஆதாரங்கள் இல்லை எனச் சட்டமா அதிபரால் தெரிவிக் கப்பட்டதை அடுத்து அவர் விசா ரணையின்றியே விடுதலை செய் யப்பட்டார். இவற்றின் பின்னணி யில் அதிகாரங்கள் இல்லை என்பதை நம்ப முடியுமா?

லங்கா ஈ.நியூஸ் ஊடகவியலாளரும் கேலிச்சித்திரகாரருமான பிரகீத் எக்னெலிகொட இருவருடங்களுக்கு முன்னர் காணாமற் போய்விட்டார். அது தொடர்பாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் கேள்வி எழுப்பப்பட்டபோது அவர் வெளிநாடொன்றில் தலைமறைவாக இருப்பதாக இலங்கையின் சார்பில் பதிலளிக்கப்பட்டது.

இப்பிரச்சினை நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டபோது உறுப்பினர் ஒருவர் நான் பிரகீத்தை பிரான்சில் சந்தித்தாக கூறியிருந்தார். எனவே, அப்பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றது. அங்கு சாட்சியமளிக்க குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு பிரகீத்தை நேரடியாகத் தெரியாது எனவும் தனக்கு வேறு ஒருவர் பிறிதொருவரைக்காட்டி இவர்தான் பிரகீத் என அறிமுகம் செய்ததாகக் கூறினார். ஆனால், குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட அந்த நபர் அப்படி எதுவும் இடம்பெறவில்லை என பிரான் சிலிருந்து அறிவித்து விட்டார். இப்படியான நிலையில் பிரகீத் உயிருடன் இருப்பதாக ஒரு போலியான தோற்றப்பாடு உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை தெளிவாகப் புலனாகின்றது. இம் முயற்சியில் இலங்கை யின் ஐ.நா. பிரதிநிதி, குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும் பங்கு உண்டு என நம்பாமல் இருந்துவிட முடி யுமா?

அண்மையில் கொழும்பிலுள்ள சண்டே லீடர் பத்திரிகையின் துணை ஆசிரியை மந்தனா இஸ்மாயில் வீட் டிற்குள் நட்டநடுநிசியில் புகுந்த இனந்தெரியாத நபர்கள் அங்குள்ளவர் களைத் துப்பாக்கி முனையில் வைத்துக் கொண்டு சில ஆவணங்களைத் தேடியுள்ளனர். அவர்கள் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டபோதிலும் அவர்களின் பின்னணியில் நின்றவர்கள் யார் என்ற விடயம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. மந்தனா இஸ்மாயில் உயிர்ப் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

இவ்வாறே மௌபீம பெண் பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டபின் குற்றச்சாட்டு எதுவுமின்றி விடுவிக்கப்பட்டதும் ஊடகவியலாளர் திசாநாயக்கவுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதும், இலங்கை ஊடக வரலாற்றில் மறந்துவிடக்கூடிய விடயங்களல்ல. இங்கு என்னால் தெரிவிக்கப்பட்டவை ஊடகவியலாளர்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட அநீதிகளில் ஒரு சில மட்டுமே. இலங்கையில் வேறும் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் என்பதையும், பலவித துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதையும் உயிரச்சம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர் என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடி யாது.

ஏற்கனவே நான் குறிப்பிட்டமை போன்ற சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் ஊடகங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதும் அவை தொடர்பாக எவரும் கைது செய்யப்படாமையும் இந்த நாட்டில் ஊடக சுதந்திரத்தைக் கொலை செய்யும் நடவடிக்கைகளாகும்.

இவற்றின் பின்னால் அரசசார்பு அதிகார பீடங்கள் உள்ளன என்பதை இடம்பெறும் ஒவ்வொரு சம்பவங்களும், அவை தொடர்பாக உரிய நடவ டிக்கைகள் எடுக்கப்படாமையும் துல்லியமாகத் தெளிவுபடுத்துகின்றன.

இன்று எமது நாட்டில் இடம்பெறும் ஊடக ஒடுக்குமுறைகள் தொடர்பான கேள்விகள் எமது நாட்டின் எல்லைகளுக்கு வெளியே விரிந்துவிட்டன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசம் எம்மைக் குற்றக் கூண்டில் ஏற்றும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம் பிள்ளை இலங்கையில் நிலவும் ஊடக ஒடுக்குமுறை தொடர்பாக வெளியிட்ட கண்டனத்தை நாம் அலட்சியப்படுத்தி விடமுடியாது.

அது மட்டுமின்றி டேவிட் கமரூன் உதயன் நிறுவனத்துக்கு வருகை தந்தமையும் அங்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டமையும் புறமொதுக்கப்படக் கூடிய விடயங்களல்ல.

எமது அரசும் அரசின் அதிகார பீடங் களும் ஊடக சுதந்திரம் உட்பட ஜன நாயக விழுமியங்களைப் பேணி சர்வதேச நெருக்கடிகளுக்குள் சிக்கும் அபாயத்திலிருந்து மீளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று நானும் ஓர் இலங்கையன் என்ற உரிமையுடன் கேட்டுக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன் - என்றார்.

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச் சோர்வு வந்து நீங்கும். உங்களைப் பற்றி தவறாகச் சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம்.

**இடபம்:** எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். அரசு காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மிதுனம்:** நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**கடகம்** : எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**சிங்கம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். .

**கன்னி:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**துலாம்:** வியாபார ரீதியாகச் சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**தனுசு:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**மகரம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

**கும்பம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**மீனம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

# தத்தம் நிலையில் தாம் பெரியவரே!



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

இந்த உலகம் மூன்று வகை யான சக்திகளால் ஆக்கப்பட்டிருப்பதாக சாங்கியத் தத்துவம் கூறுகிறது.
இந்தச் சக்திகள், சமஸ்கிருதத்தில் சத்துவம் என்றும், ராஜசம் என்றும் தாமசம் என்றும் அழைக்கப்படுகின்றன.
இவற்றை இன்றைய பௌதிக விஞ்ஞானப் படி முறையே சமநிலை என்றும், இயங்கு நிலை என்றும் செயலற்ற நிலை என்றும் கூறலாம். தாமசம் என்பது இருள் என்றும், சோம்பேறித்தனம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ராஜசம் என்பது இடைவிடாமல் செயல்கள் புரிவது; தன்னிடம் கவர்வது, தன்னிடமிருந்து விலக்கித் தள்ளுவது இவைகளையே எந்த நேரமும் செய்து கொண்டிருப்பது. சமநிலை என்பது இந்த இரண்டுக்கும் இடைப்பட்டு அமைந்த நிலை.
ஒவ்வொரு மனிதனிடமும் இந்த மூன்று சக்திகளும் நிலைபெற்றுள்ளன. சில நேரங்களில் தாமசம் தலைதூக்கி நிற்கும். அப்போது நாம் சோம்பேறிகளாக இருப்போம். நம்மால் எந்த வேலையும் செய்ய முடியாது; அங்கும் இங்கும் கூடப் போக மாட்டோம். மந்தமானவர்களாக , ஏதோ சில கருத்துக்களைப் பிடித்துக் கொண்டு அதில் கட்டப்பட்டவர்களாக அல்லது வெறும் சோம்பேறிகளாக இருப்போம்.
சில நேரங்களில் நம்மிடம் செயல்புரியும் குணம் தலைதூக்கும். சில நேரங்களில் அமைதி அடைந்தவர்களாக, ஓயாத அலைச்சல், ஒன்றும் செய்யாத சோம்பேறித்தனம் என்றும் இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்போம். மனிதர்களிடம் இந்த மூன்று குணங்களில் ஏதாவது ஒன்று தலைதூக்கி நிற்கும். சில மனிதர்கள் சுறுசுறுப்பு இல்லாதவர்களாகவும், சோம்பேறிகளாகவும், மந்தமானவர்களாகவும் இருக்கிறார்கள். இன்னும் சில மனிதர்கள் எப்போதும் ஆரவாரமும், அமர்க்களமும் நிறைந்தவர்களாகவும் சுழன்று சுழன்று காரியம் செய்பவர்களாகவும் அளவற்ற ஆற்றல் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றும் சிலர் உள்ளம் கவரும் இனிமையும், ஆழ்ந்த அமைதியும் , தென்றல் போன்ற மென்மையும், அதே நேரத்தில் அளவில்லாத உழைப்பு, சோம்பேறித்தனம் என்னும் இரண்டையும் சமப்படுத்தி இதமாகக் காரியங்களைச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள்.. இந்த விசித்தரமான குண வேறுபாடுகள் மனிதர்களிடம் மட்டு மல்ல, மிருகங்கள் , மரங்கள் முதலிய எல்லாப் படைப்புகளிலுமே அமைந்திருப்பதைக் காணலாம்.

# பூமியிலிருந்து சிதறிய பாறைகளிலிருந்து செவ்வாய், வியாழனில் உயிரினங்கள் தோன்றியிருக்கலாம்

## ஆராய்ச்சியாளர்கள் கருத்து



உயிர்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வரும் ஆராய்ச்சியாளர்கள் அமெரிக்காவில் ஒன்று கூடித் தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். அப்போது தங்கள் கருத்துகள் பற்றி அவர்கள் கூறியதாவது.
பூமியில் கடந்த 350 கோடி ஆண்டுகளில் சூரியனைச் சுற்றிவரும் மிகப்பெரிய விண்பாறைகள் பூமியில் மோதியபோது டைனோசர்கள் உயிரிழந்து இருக்கலாம். அப்போது பூமியில் இருந்து சிதறிய 3 மீற்றர் அளவு கொண்ட ஆயிரக்கணக்கான பாறைகள் விண்வெளியில் அதிவேகத்தில் பறந்து சென்றிருக்கலாம். உயிர்கள் தோன்றுவதற்கான மூலங்களைக் கொண்ட இந்தப் பாறைகள் செவ்வாய் மற்றும் வியாழன் கிரகத்தின் துணைக்கோள்களில் விழுந்து இருக்கலாம். அங்கு ஏற்கனவே உயிர்கள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் இருந்த நிலையில் இதன் மூலம் அங்கு புதிய உயிரினம் தோன்றி யிருக்கலாம். அல்லது பூமி மற்றும் செவ்வாய்க் கிரகங்களில் இருந்து சூரிய மண்டலத்தின் மற்ற கிரகங்களுக்கும் இதுபோன்று அநேகமாக உயிர் மூலங்கள் சென்று உயிர்கள் தோன்றி யிருக்கலாம்.
பொதுவாக வியாழன் துணைக்கோள்களில் உயிர்கள் இருக்கின்றனவா என்று ஆராய்பவர்கள். உயிர்கள் தோன்று வதற்கான மூலக்கூறுகள் தானாகத் தோன்றியவையா அல்லது பூமியில் உள்ள உயிர் குடும்பங்களின் மற்றொரு பிரிவா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.
சூரிய மண்டலத்தில் சுற்றிவரும் விண்பாறைகள், வால் நட்சத்திரங்கள் மூலம் இதுபோன்று நுண்ணுயிர்கள் சூரிய மண்டலத்துக்குள் வலம் வரலாம் என்றும் நம்பப்படுகிறது.

## நாளை

கார்த்திகை-29
ஞாயிற்றுக்கிழமை 15.12.2013
திதி: திரயோதசி பி.ப.12.14 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மு.இ.09.22 வரை
சுபநேரம்:
09.21- 10.51 வரை
இராகுகாலம்:04.51-06.21 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 3 | | 4 | 1 | |
| 4 | 2 | | 7 | | | | | 6 |
| | 3 | 7 | 4 | | 6 | 2 | | |
| 9 | | | | | | | | |
| 3 | 5 | | 2 | 1 | 9 | | 4 | 8 |
| | | | | | | | | 1 |
| | | 1 | 5 | | 3 | 6 | 7 | |
| 2 | | | | | 7 | | 3 | 4 |
| | 7 | 3 | | 8 | 4 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 7 | 1 | 9 | 4 | 6 | 8 | 3 |
| 4 | 3 | 8 | 6 | 2 | 5 | 9 | 7 | 1 |
| 9 | 1 | 6 | 7 | 8 | 3 | 5 | 4 | 2 |
| 6 | 8 | 9 | 3 | 4 | 7 | 1 | 2 | 5 |
| 7 | 5 | 2 | 8 | 1 | 6 | 4 | 3 | 9 |
| 3 | 4 | 1 | 9 | 5 | 2 | 7 | 6 | 8 |
| 8 | 7 | 3 | 5 | 6 | 1 | 2 | 9 | 4 |
| 1 | 6 | 4 | 2 | 3 | 9 | 8 | 5 | 7 |
| 2 | 9 | 5 | 4 | 7 | 8 | 3 | 1 | 6 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# திருமணத்துக்குப் பின் ஆண்கள் தொலைக்கும் விஷயங்கள்!!!

பொதுவாகத் திருமணம் என்றுவரும்போது, நிறைய பேர் பெண்கள் தான் அதிகம் தியாகம் செய்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆனால் பெண்களைப் போலவே ஆண்களும் ஒருசில முக்கியமான வற்றை இழக்கிறார்கள் என்பது தெரியுமா? ஆம், எப்படி பெண்கள் திருமணத்துக்கு பின் பெற்றோர்கள், தோழிகள் மற்றும் பலவற்றை இழக்கிறார்களோ, அதைப் போன்று ஆண்களும் அதுவரை அவர்களுக்கு சந்தோஷத்தைத் தரும் சிலவற்றை இழக்கின்றனர் என்பதை விடத் தியாகம் செய்கின்றனர் என்று சொல்லலாம்.

ஆனால் இப்படி இழப்பதை அவர்கள் ஒருபோதும் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அப்படி வெளிக்காட்டினால், பின் திருமண வாழ்க்கையில் உள்ள சந்தோஷம் மற்றும் ஆரோக்கியம் போய்விடும் என்பது தான் அதற்கான காரணம்.

**அப்படி எதைத்தான் இழக்கிறார்கள்....**


ஒவ்வொரு ஆணுக்கும் அம்மா என்றால் உயிர். ஆனால் அந்த உயிரை திருமணம் ஆன பின்னர் ஒரு கட்டத்தில் தாயுடன் இருக்கும் நாள்களை ஆண்கள் இழப்பார்கள். இந்த இழப்பு அவர்களது மனதில் எவ்வளவு பெரிய வடுவாய் இருந்தாலும், அதனால் உண்டான வலியை அவர்கள் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்கள். அதற்காக அம்மாவைக் காணவே செல்ல மாட்டார்கள் என்று சொல்ல முடியாது.

> முக்கியமாக சுதந்திரத்தை இழப்பார்கள்.

பெண்கள் மட்டும் திருமணத்துக்குப் பின் தோழிகளை இழப்பதில்லை. ஆண்களும் தான் திருமணத்துக்கு பின் நண்பர்களை இழக்கின்றனர். முற்றிலும் இழக்கா விட்டாலும், அவர்களுடன் நினைத்த நேரத்தில் எல்லாம் நேரத்தைச் செலவிட முடியாத நிலை ஏற்படும். ஏனெனில் நண்பர்களை விட தன்னை நம்பி வந்த மனைவி தானே முக்கியம். அதனாலேயே பல ஆண்கள் திருமணத்தின் பின் நண்பர்களுடன் அதிக நேரத்தை செலவிடுவதில்லை.

திருமணத்துக்கு முன், ஒரு பொருளைக்கூட நகர்த்தாமல் இருக்கும் ஆண்கள், திருமணத்துக்குப் பின் ஏற்றத்தாழ்வு பாராது பல்வேறு வேலைகளை மனைவிக்காக செய்கின்றனர். அம்மாவுக்குக்கூட இவ்வளவு வேலை செய்திருக்க மாட்டார்கள். ஆனால் திருமணத்துக்கு பின் மனதில் பாரபட்சம் பார்க்காமல் மனைவிக்காக அனைத்தையும் செய்வார்கள். பணம் சம்பாதித்து தனக்கென்று எதையும் செலவிடாமல் மனைவியை சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று கடைகளுக்குச் சுற்றுலாவுக்கு என அழைத்துச் செல்வது, பரிசுகள் வாங்கிக் கொடுப்பது என்று பல செலவுகளைச் செய்வார்கள். முக்கியமாகச் சுதந்திரத்தை இழப்பார்கள்.





# தூக்கம் கெடுவதற்கு அறிவியல் காரணமில்லை

மின்சாரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு மனிதன் தூங்கியதைவிட தற்போது மிகக் குறைந்த அளவிலே தூங்குகிறான். இதற்குக் காரணம் மின்சாரம் தான் என்றால் அது மிகவும் தவறு. மனிதன் தனது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டதுதான் அவனது குறைவான தூக்கத்துக்குக் காரணமாகிறது.

அதேபோல, கணினியில் அதிக நேரம் வேலை செய்வதாலும், செல்பேசியாலும் மனிதனின் தூக்கம் குறைவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் மனிதனின் தூக்கத்தை எந்த வகையிலும் கணினியோ, செல்போனோ குறைக்கவில்லை என்கிறது பல்வேறு ஆய்வு முடிவுகள்.

அதிக நேரம் கணினி முன்பு அமர்ந்து இணையத்தில் உலா வரும் மனிதன், அதன் மீதான ஆர்வத்தினால், நேரம் கழிவது தெரியாமல் இருந்து விடுவதுண்டு. அதுபோலவே, செல்பேசியில் பேசுவதாலும், இணையத்தைப் பயன்படுத்துவதாலும் அதிக நேரம் கண் விழித்திருப்பதற்கு நேரிடுகிறதேத் தவிர, அறிவியல் ரீதியாக செல்போனோ, கணினியோ மனிதனின் தூக்கத்தை விழுங்கவில்லைஎன்பதுதான்உண்மை என்கிறது ஆய்வுகள்.

குறிப்பிட்ட நேரம் வரை கணினியில் பணியாற்றிவிட்டு அல்லது இணையத்தில் உலாவிவிட்டு குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்துக்கு உறங்கச் சென்று விடும் பழக்கத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். அதேப் போலத்தான் செல்பேசியிலும், அதிக நேரம் பேசிக் கொண்டிராமல், அரட்டை அடிக்காமல் எப்போதும் நாம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உறங்கச் சென்றுவிட்டால் தானாகவே அந்த நேரத்தில் தூக்கம் வந்து விடும்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உறங்கி, குறித்த நேரத்தில் எழுந்து பழகிவிட்டால், உறக்கத்துக்கு எந்தப் பாதிப்பும் வராது. ஒருவர் தானாகவே விருப்பப்பட்டு, தனது தூக்க நேரத்தைக் கெடுத்துக் கொண்டு செல்போனில் அரட்டை அடித்துக் கொண்டோ, கணினியில் விளையாடிக் கொண்டோ ஸ்கைப்பில் பேசிக் கொண்டோ இருந்தால் அதற்கு அறிவியல் பொறுப்பாகாது.

# நீங்கள் அதிகம் கோபப்படுபவரா......

1. எவன் ஒருவன் தனது கோபத் தைத் தடுத்துக் கொள்கிறானோ, அவன் தன்னுடைய பெரிய எதிரியை வெற்றி கொண்டவன் ஆகிறான்.

**-லத்தீன்**

2. கோபம் கொப்பளிக்கும் அந்த ஒரு கணத்தில், நீ பொறுமை காத்தால் நூறு நாள் துன்பத்திலிருந்து தப் பித்து விடுவாய்.

**-சீனம்**

3. கோபத்தை வெளிக்காட்டுவது, குளவிக் கூட்டின் மீது கல்லெறி வதற்கு ஒப்பானது.

**-மலபார்**

4. கோபத்தை வெற்றி கொள்வதற்கு ஒரே வழி, அதைத் தாமதப்படுத்து வது.

**-செனேகா**

5. ஒரு கண நேரத்தின் கோபத்தை அடக்கி வைப்பவன், ஒரு நாளை யத் துயரத்தை அடக்கியவனா வான்.

**-முதுமொழி**

6. கோபம் தலைதூக்கும்போது, அதன் பின் விளைவுகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

**-கன்ஃபூசியஸ்**

7. கோபப்படும் மனிதனால் அதிக அளவு சிறப்பாக வேலைகள் செய்ய முடியாது. அமைதியான, மன்னிக்கக்கூடிய, சம நோக்குடைய, நிலைகுலையாத மனமுடையவனே அதிக அளவு செயல்பட முடியும்.


**-சுவாமி விவேகானந்தர்**

8. மனம்போன போக்கில் நடப்ப தற்கு மிக முக்கியமான காரணம் கோபம்தான். அதிகச் செலவுகளையும் மனச்சுமைகளையும் உண்டாக்கும் பொருளான கோபத்தைச் செலவழிப்பதில் மிகவும் கஞ்சனாக இருங்கள்.

**-ஜார்ஜ் வில்லியம் கர்ட்ஸ்**

9. சினத்தை ஒழிக்க வேண்டும். சினம் ஒழிய மனம் அடையும் நிலைதான் பொறுமை.

**-வேதாத்திரி மகரிஷி**





ஏழாலை தெற்கு பெரிய தம்பிரான் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு பிரமாண்டமான விதத்தில் திருவிளக்குப் பூசை இடம்பெற்றது. பூசை வழிபாடுகளில் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அடியவர்கள் கலந்துகொண்டனர். முந்நூறுக்கும் மேற்பட்ட குத்துவிளக்குகள் ஏற்றப் பட்டு திருவிளக்குப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வழிபாடுகளுடன் இந்த ஆலயத்தின் இந்தாண்டுக்கான பூசை வழிபாடுகள் நிறைவடைந்துள்ளதுடன் அடுத்த பூசை வழிபாடுகள் அடுத்த தை மாதம் தைப்பொங்கலுடன் இடம்பெறுவது வழமையாகும். (வ-86)

# திருவெம்பாவையை முன்னிட்டு இந்து மகா சபையால் நிகழ்வுகள்

வலி வடக்கு டிசெ 14

திருவெம்பாவையை முன்னிட்டு இந்து மகா சபை ஏற்பாடு செய்துள்ள 'தொண்டுகள் புரிவோம் அறநெறி வளர்ப்போம்' என்ற தொனிப் பொருளிலான மூன்று நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தியாசாலையில் ஆரம்பமாகவுள்ளன.

அறநெறி ஆசிரியர்கள் மற்றும் அறநெறி மாணவர்களுக்கான திருவாசகம், திருமந்திரப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளைத் தொடர்ந்து சிவமங்கையர் அமைப்பினால் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை அறநெறி மாநாடு நடைபெறும். இரண்டு அமர்வுகளாக இந்த மாநாடு நடைபெறும். காலை அமர்வில் கலை நிகழ்வுகள், ஆன்மிகச் செயற்பாட்டாளர்களுக்கு மனித நேய விருது வழங்கல், பரிசளிப்பு விழா, சிவ நற்பணி மன்றங்களின் ஆன்மிக இதழான அன்பே சிவம் இதழ் வெளியீடு போன்றன இடம்பெறும்.

மாலை நிகழ்வில் அறநெறிச் செயற்பாடுகள், ஊர்கள் தோறும் உள்ள ஆலயங்களில் அறநெறி மன்றங்களை இயக்குவது, கிராமங்களில் அறநெறி மற்றும் தொண்டுகளை முன்னெடுப்பது, அறநெறியின் புதிய பாடத்திட்டம் தயாரித்தல் போன்றன தொடர்பாக ஆராயப்படும். இந்த ஆன்மிக மாநாட்டுக்கு நல்லைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் யாக்கிரத சைதன்ய சுவாமிகள், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் சபா.வாசுதேவக் குருக்கள், மற்றும் சம்புநாத ஈஸ்வர சுவாமிகள் நரசிங்க சித்தர் போன்றோர் கலந்துகொள்வர்.

இறுதி நாள் நிகழ்வாக சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரா ஆலயத்திலிருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வரை ஆன்மிகப் பாத யாத்திரையும் இடம்பெறும் என்று இந்து மகா சபை அறிவித்துள்ளது. இந்த அனைத்து நிகழ்வுகளிலும் இந்து மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் இந்து மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ-86-250)

புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு

## மீள்கேள்வி அறிவித்தல் - 2014

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2014 இலிருந்து 31.12.2014 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 24.12.2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 24.12.2013 பி.ப 01.30 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 24.12.2013 பி.ப 02.30 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 02. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 2,850,000.00 |
| 03. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 450,000.00 |
| 04. | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 630,000.00 |
| 06. | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 990,000.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 01. | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 180,000.00 |
| 02. | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 180,000.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 01. | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை (பராமரிப்பு,மின்சாரம்,கழிவகற்றல் செலவுகள் உள்ளடங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 250,000.00 |

### நிபந்தனைகள்:

- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்குப் பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் மூன்றிலொரு பகுதியை 27.12.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரத்தினைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- மரக்கறிச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் (1Km சுற்றுவட்டாரத்துள்) நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.
- சந்தையைக் குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணம் அறவிடலாம். மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் இடத்திற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவிதக் கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப் படும் துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும் ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 10.00 உம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
- இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்குப் எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு,ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றுக்கு ரூபா 500.00 இனைக் கடைவாடகையாகச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.
- சந்தைவளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு எந்தவிதமான வரியும் அறவிடக் கூடாது.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதில் பங்குபற்ற இயலாது.
- திருமுறிகண்டி கட்டண கழிப்பறைக்கான கட்டணம் நபர் ஒருவருக்கு ரூபா 10.00 அறவிடமுடியும். அத்துடன் அவற்றுக்கான கழிவகற்றல் கட்டணம், மின்சாரம், ஏனைய பராமரிப்பு செலவு என்பன குத்தகைதாரரையே சாரும்.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.

செயலாளர்,
பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
14.12.2013. (C/14377)2.6.3)

# மணிவாசகர் விழா நாளை ஆரம்பம்

காரைநகர், டிசெ.14

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் 59 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா நாளை ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெற உள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அதி பர் வே.முருக மூர்த்தி தலைமையில் நடை பெற உள்ளது. இந்த விழாவை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம் பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைக்க உள்ளார்.

இந்த விழாவில் மணி வாசகர் திருவுருவப் படமும் திருவாசகத் திருமுறையும் ஊர்வலம், காரைநகர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், சபையினால் நடத்தப் பட்ட சைவ சமயப் பாடப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர் களுக்குத் தங்கப் பதக்க மும் தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும் இடம் பெறும். தொடர்ந்து சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெற உள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை மா லை 5 மணிக்கு வட மாகாணக் கல்வியமைச்சின் பிரதிச் செய லாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்த உள்ளதுடன் திருவாசகத் தேனில் என்ற தலைப்பில் கருத்தரங்கு பேராசிரியர் சிவலிங்கராசா தலைமையில் இடம்பெற உள்ளது. இதில் தமிழருவி த.சிவகுமா ரன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், ஆசி ரியர் கு.பாலசண்முகன் ஆகி யோர் கருத்துரை வழங்க உள் ளனர்.

மூன்றாம் நாள் நிகழ்வு செவ் வாய்க் கிழமை இரவு 8.30 மணிக்கு சபைத் தலைவர் பண் டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ் வுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், நிருத்தியார்ப்பணம் என்பன இடம்பெற உள்ளது. (ந-250)

# 'இசைமாலை' இதழ் வெளியீடு

மணிகண்டன் இசைமாலை இரண்டாவது இதழின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா, முத்தையா மண்டபத்தில் இடம்பெற உள்ளது. ஆ.லோகேஸ்வரன் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

வ.தயாபரன் எழுதிய இந்த நூல் வெளியீட்டு விழாவில் கொழும்பு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தைச் சேர்ந்த சு.ரவீந்திரகுமார், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என.சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-402)

# கலை விழா

தென்மராட்சி, டிசெ.14

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெறும். நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக வட மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் சு.விஸ்வரூபனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா, பாடசாலை அதிபர் க.சிவகரன், தென்மராட்சி நன்னடத்தை அலுவலர் விக்னராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)

# ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி, டிசெ.14

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை 'திருமழிசை ஆழ்வாரும் வாழ்வியலும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும்.

இந்தச் சொற்பொழிவை சைவப் புலவர் எஸ்.நித்தியசச்தரன் நிகழ்த்துவார். (ந-8)

# கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் அ. நவரத்தினம் (உரிமையாளர் - சத்தி ஸ்ரோர்ஸ், கச்சாய் வீதி, சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவி

**திருமதி ஜெயராணி நவரத்தினம்**

அவர்கள் நேற்றுமுன்தினம் (12.12.2013) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் மறைவுக்கு மன்றத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். (சி.7607)(45.3.6)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

# கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி, கனகபுரம் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர்
திருமதி **கனகரட்னேஸ்வரி சச்சிதானந்தம்**
அவர்களின் அன்பு மாமனாரான கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த

**வல்லிபுரம் கந்தப்பு**

அவர்கள் 12.12.2013 வியாழக்கிழமை இறையடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(29709) (12.3.6)

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி.

# 90 ஆவது நினைவு நாள்



அமரர்
**இராசையா சுரேஸ் (கவிதன்)**
தோற்றம் 20.11.1978 மறைவு 16.09.2013

தரணியில் நீங்கள் எம்முடன் வாழ்ந்த
அந்தப் பசுமையான நினைவுகள்
என்றென்றும் மாறாது
அணையாத தீபமாக இப்பூவுலகில்
இறுதி வரை வாழுங்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்
சுதன் (தம்பி-வவுனியா)
வள்ளிபுனம்,
18 ஆம் கட்டை, புதுக்குடியிருப்பு.
(40595)(3.6.4)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.06.1950
மறைவு 08.12.2011
திதி:- திரயோதசி

ஒன்றல்ல, இரண்டல்ல எத்தனை
ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எமைவிட்டு
அகலாது.

உம் நினைவுகளுடன்:
மனைவி - நந்தினி,
மகன் - ஹஜனன்,
குடும்பத்தினர்.

அமரர்
**விஜயரட்ணம் கமலநாதன் (தம்பி)**

'தனிகை',
ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பழை. (41055)(12.6.3)

# விண்ணக வாழ்வின் 50 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"இரத்தினகிரி" ஏழாலை வடக்கைச் சேர்ந்த அமரர் இராசையா இரத்தின கோபாலசிங்கம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவி



திருமதி
**நகோமி நேசமலர்**
(முன்னாள் ஆசிரியர்
வ/நெடுங்கேணி ம.வி)

தோற்றம் 08.12.1927 மறைவு 14.12.1963

நீங்கள் எம்மோடு வாழ்ந்த
காலம் சிறிதெனினும் விட்டுச்
சென்ற ஞாபகங்கள் காலம்
உள்ளவரை என்றென்றும்
தொடரும்

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது" சங்:116-15

நீங்காத நினைவுகளுடன் என்றும் உங்கள்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"கானான்"
நெளுக்குளம்,
வவுனியா. (40592)(3.6.4)

# கடைகளில் தொடர்ந்தும் போதைப் பொருள் சோதனை

## செட்டியார் தோட்டத்திலேயே குளிசைகள் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் போதைப்பொருள் அல்லது போதைப்பொருள் கலந்த உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பது தொடர்பில் பரிசோதனைகள் தொடரும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

நல்லூர், முத்திரைச் சந்தி, செட்டியார் தோட்டம் பகுதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் போதைப்பொருள் எனக் கருதப்படும் 64 குளிசைகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியிருந்தனர். இதனையடுத்து குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் குறித்த வியாபார நிலையத்தைத் தொடர்ந்தும் இயக்குவதற்கும் நீதிமன்றம் அனுமதிய ளித்தது.

சில வாரங்களுக்கு முன்னர் யாழ். நவீன சந்தைப் பகுதியில் உள்ள ஒரு வியாபார நிலை யத்திலும், குருநகர் பாங்ஷால் வீதியில் உள்ள ஒரு வியாபார நிலையத்திலும் போதைப் பொருள் எனக் கருதப்படும் பொருள்கள் மீட் கப்பட்டதுடன் அந்த இரண்டு கடைகளும் 'சீல்' வைக்கப்பட்டன.

பின்னர் இரண்டு வியாபார நிலையங்களையும் தொடர்ந்து இயக்குவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

செட்டியார் தோட்டம் பகுதி வியாபார நிலையத்தின் உரிமையாளர் 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டதுடன் மீட்கப்பட்ட பொருள்களைப் பரிசோதனைக்கு அனுப்புமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட ஏனைய வியாபார நிலையங்களிலும் போதைப்பொருள் பரிசோதனை, கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை வெளியான "நல்லூரில் சிக்கிய போதைக் குளிசைகள்" என்ற செய்தியில், நல்லூர் செட்டித்தெருவில் எனத் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. நல்லூர் செட்டியார் தோட்டம் என்பதே சரியானது. (கு-4)

## நூல் வெளியீடு

வவுனியா, டிசெ.14

அகளங்கனின் 'கம்பனில் நான்' என்னும் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீடு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கலாநிதி க.ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

தமிழ்ப் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம், வவுனியா பல.நோ.கூ. சங்கத் தலைவர் சைவ சிரோமணி சி.சுப்பிரமணியம் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரின் மாதாந்த முழு நிலா நிகழ்வின் போது இந்த நூல் வெளியீடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

## குறும்படம் வெளியீடு

வவுனியா, டிசெ.14

வவுனியாவில் இடம் பெற்ற மனித உரிமை தின நிகழ்வின் போது குறும்படம் ஒன்றும் வெளியிட்டு வைக் கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இதனை வெளியிட்டு வைத் தார்.

வவுனியா பிரசைகள் குழுவின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தினம் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது சு.வரதகுமாரின் உருவாக்கத்தில் உருவான தவிப்பு என்னும் குறும்படத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்டு வைத் தார்.

இந்தக் குறும்படம் போரினால் பாதிக்கப்பட்ட வயோதிபர்களின் அவலங்களைச் சித்திரிப்பதாக அமைந்துள்ளது. (க-421)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அப்பாத்துரை ஞானேஸ்வரன்**
(சின்னக்கிளி)
திதி : திரயோதசி
(14.12.2013)

அன்னை மடியில் 25.01.1942
இறைவன் அடியில் 26.11.2012

ஆண்டு ஒன்று போனதுவே அப்பா...
ஆனாலும் உங்கள் நினைவு மாறவில்லை அப்பா...
உயிர்தந்து உடல்தந்து பாசத்துடன் வளர்த்த அப்பா...
ஆண்டவன் படைப்பதில் அழிப்பும் நியதி அப்பா...
ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம் அப்பா..."

"ஜனக பதி"
பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

**குடும்பத்தினர்.**

(சி/14380) (7.6.3)

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தேவசுதா (நிதியா) வடிவேற்கரசு**
திதி:கார்த்திகை பூர்வபக்க திரயோதசி
(14.12.2013)சனிக்கிழமை

அன்னை மடியில் 02.02.1987
ஆண்டவன் அடியில் 01.12.1998


பிள்ளைக் கலிதீர்க்க வந்துதித்த என்
ஏக மகள் நிதியாவே-உன்னை
பிரியமுடன் வளர்த்து வந்தேன்-
கற்பனைகள் கட்டி நின்றேன்-உன்
பிதாவையும் நான் இழந்தேன்
பொட்டிழந்தேன் பூவிழந்தேன்-இப்போ
பிதிர்க்கடன் உங்கள் இருவருக்கும் நான்
கொடுக்கும் தனிமரம் ஆனேனோ!
உன் துயர் என்றும் நீங்காதம்மா!

பிரிவால் துயருறும்
செல்வராணி (அம்மா) (40048)(3.6.4)
வடிவேற்கரசு (வைத்தீஸ்வரன்)
சித்தம்பாதி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**குகதாசன் கனகரட்ணம்**

மலர்வு 03.05.1965
உதிர்வு 14.12.2011



அரணாய் இருந்து
அரைவயதில் பிரிந்தாய்
ஆறாத வடுவை
ஆழமாய் அறைந்துவிட்டாய்
ஆண்டிரண்டு ஆனதே
அகலாத நினைவுகள்
அழைக்கின்றதே ஐயா
உம் மீண்டவரவை...

**குடும்பத்தினர்.**
ரொரன்ரோ,
கனடா.

(41088)(12.6.3)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு: 021 5671111 advt@uthayan.com

# மரண அறிவித்தல்

## சூசைப்பிள்ளை ஜோண்பிள்ளை

(இளைப்பாறிய தபாலதிபர்)



யாழ்ப்பாணம், இளவாலையைப் பிறப்பிடமாகவும், நாரந்தனை செருக்கன் சந்தி மற்றும் சொய்சாபுர, கொழும்பை வதிவிடமாகவும்கொண்ட சூசைப்பிள்ளை ஜோண்பிள்ளை 11.12.2013 புதன் கிழமை இறைபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நீற்றா சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், ஜின், ஜெசி, ஜெனற், ஜெயக்குமார், றாஜகுமார், சசிக்கலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமிர்தநாதர் (மனோ), நியூமன் (வசந்தன்), உமா, றஜனி, செல்வக்குமார் ஆகியோரின் மாமனும், யூடியா, அனிக்கா, சோனியா, செல்டன், றுக்ஷி, கிவ்ரி, கிறேற்றி, றவீன், றுபெசன், றேனியா, ஜொனி, மணிக் ஆகியோரின் பேரனும், பொன்மணி, ஜோர்ஜ், காலஞ்சென்ற பொன்னு ஜோசப், செல்லக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை இராசய்யா மற்றும் விக்ரோறியா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.12.2013) சனிக்கிழமை நாளை (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையிலும், பின்னர் (16.12.2013) திங்கட்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இளவாலையிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத் திற்கு எடுத்துச்செல்லப் பட்டு, பி.ப. 3.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்ட பின்னர் புனித அன்னம்மாள் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், (சி.10214)(45.6.3)
தொ.பே. 011 263 5509, கைப்பேசி: 076 682 8430

# இதய அஞ்சலி



## திருமதி சகிதேவி கந்தையா (தெல்லிப்பழை)

சிறந்த சைவத் தமிழறிஞரும் எங்கள் தேவஸ்தான நிர்வாக சபையின் ஆரம்பகால தலைவராக விளங்கிய காலஞ்சென்ற **சே.தியாகராசா** அவர்களின் ஏக புத்திரியுமாகிய **திருமதி சகிதேவி கந்தையா** அவர்கள் நேற்றுமுன்தினம் (12.12.2013) வியாழக்கிழமை லண்டனில் காலமனார்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து இதய அஞ்சலியைச் சமர்ப்பித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை. (சி.14376)(45.2.8)

# மரண அறிவித்தல்

## தருமலிங்கம் கந்தையா

(ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர், விவசாயத் திணைக்களம், வவுனியா)



வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கரம்பன், வவுனியா, கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட தருமலிங்கம் கந்தையா 09.12.2013 திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் (புளியங்கூடல்)-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னம்மா, தாமோதரம்பிள்ளை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி (அம்பிகா), ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புக் கணவரும், கனடாவைச் சேர்ந்த சிவதர்மன் (Real Estate Agent, Home Life Today), குகநேசன், சாருமதி, இளங்குமரன், பானுமதி, காலஞ்சென்றவர்களான சந்திரமதி, பாருமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான நாகம்மா, பூபதி, தேவகி மற்றும் இராஜரட்ணம் (ஓய்வுநிலை பணிப்பாளர், யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனம்), இராமச்சந்திரன் (ஓய்வுநிலை முகாமையாளர், அரச விவசாயப் பண்ணை , வவுனியா), திலகம் (ஓய்வுநிலை ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரவதனி, சிவசக்தி, வைகுந்தராஜன் (விந்தன்), தர்ஷிகா, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கிருபாம்பிகை, வாமதேவன், கந்தவனம், வைத்திலிங்கம், செல்லம்மா, குலசேகரம்பிள்ளை, சிவராஜா (உரிமையாளர் PTS, 4ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு-11), நவரட்ணம் மற்றும் பராசக்தி (லண்டன்), ஸ்கந்தராஜா (ஓய்வுநிலை நில அளவையாளர் ONTARIO), பாலசரஸ்வதி (லண்டன்), அன்னமுத்து, கமலாதேவி (சாவகச்சேரி), சித்ரா (ஓய்வுநிலை உபஅதிபர், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்), றஜனி, பாலகுமாரன் (ஓய்வுநிலை தொழில்நுட்ப அலுவலர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவின், மதுஷா, நிவேதா, சாருராம், துளசிகாந், பிரஜா, பிரணவி, ஐவன், கீரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2013 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவா +19054725220
குகன் +14164572363
370, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (42593)(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
த.இராஜரட்ணம்(சகோதரன்)
021 222 6803

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.14

வடமராட்சி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், முகவில் அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் தரம் II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-II இற்கு மேற்பட்ட தரமுடையவர்கள் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களும், தரம் -III பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம் - III இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாகவும், தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக் குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியான சேவையை ஆற்றியவராகவும் இருத்தல் வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

## பாம்புக் கடிக்கு இருவர் இலக்கு

பாம்புக் கடிக்கு இலக்கான இருவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புலோப்பளையைச் சேர்ந்த கந்தசாமி ஜெயக்குமார் (வயது-28), கைதடி நுணாவிலைச் சேர்ந்த செல்வராசா வரதராஜா (வயது-39), ஆகிய இருவரே பாம்பினால் கடியுண்டவர்களாவர். (ந-9)

## திரைப்பட விழா

யாழ்.நூலக கேட்போர் கூட மண்டபத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் ஐரோப்பிய திரைப்பட விழா நடைபெறவுள்ளது. இதன்போது இரு தினங்களிலும் முற்பகல் 10.30 மணிக்கும், பிற்பகல் 2.30 மணிக்கும் மற்றும் மாலை 4.30 மணிக் குமாக மூன்றுவேளைகளிலும் திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. இதில் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். எனத்தெரிவிக்கப்படுகிறது. (ந)

## சொற்பொழிவு

உடுவில் பிரதேச இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவெம்பாவை விரதகால சிறப்புச் சொற்பொழிவு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் சொர்ணவரதகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மெய்ப் பாடும் மணிவாசகரும் என்ற தலைப்பில் ஆசிரியர் செ. பாலச்சந்திரனின் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (ந)

# வரலாற்று நூல்களை அதிகம் கற்க வேண்டும்

வரணி, டிசெ.14

"மாணவர்களின் வாசிக்கும் ஆற்றலை ஊக்குவிப்பது பாடசாலைகளும் நூல்கல்களுமே. அந்த வகையில் மாணவர்கள் நூல்களை வாசிக்கும் போது எமது வரலாறு தொடர்பான நூல்களை அதிகம் வாசிக்க வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள் இந்த விடயத்தில் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக விளங்க வேண்டும்" என வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் வரணி பொது நூலகத்தில் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது அரச பாடப் புத்தகங்களில் எமது சந்ததியினரின் வரலாறு திரிவுபடுத்தப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றது. இந்த நிலையில் எமது பிற்காலச் சந்ததியினர் நூல்களை வாசிக்கும் போது இப்படியா எமது சந்ததியினரின் வரலாறு இருந்தது எனச் சிந்திக்கும் நிலை ஏற்படும். எனவே மாணவர்களாகிய நீங்கள் கூடுதலாக வரலாறு சம்பந்தமான நூல்களை அதிகமாகப் படிக்க வேண்டும். அப்போது தான் எமது வரலாற்று உண்மை நிலையை பிற்கால சந்ததியினரும் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் -என்றார். (ந-122)

# பால் சேகரிக்கும் நிலையம் திறப்பு

## *நெஸ்லே நிறுவனத்தால் புதுக்குடியிருப்பில்*

நெஸ்லே நிறுவனத்தினால் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் பால் சேகரிக்கும் நிலையம் திறக்கப்படவுள்ளது.

இதில் நெஸ்லே நிறுவனத்தின் தெற்காசிய வலயத்துக்கான சிரேஷ்ட பிரதித் தலைவர் நந்து நந்தகிசோர், தெற்காசிய வலயத்துக்கான சந்தைப்படுத்தல் தலைவர் எட்டியன் பேணி, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் கணேஷ் அம்பலவாணர் ஆகியோர் கலந்து கொள்வர்.

இவர்கள் மாலை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மைலோ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இதேவேளை ரில்கோ விருந்தினர் விடுதியில் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சுகாதாரம் ஆரோக்கியம்·தொடர்பான நிகழ்விலும் இவர்கள் கலந்து கொள்வர். (ந-23)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகம்மா கிருஸ்ணசாமி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பெருமாள் கோயிலடியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கிருஸ்ண சாமி 08.12.2013 ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமியின் பாசமிகு மனைவியும், தேவகியின் (வேணி) அன்புத் தாயும், உமாகாந்தனின் அன்பு மாமியும், அபிரா, நல்லைவிக்கிரமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அநந்தியின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசையா, சுபத் திரை (பொன்குட்டி), ஜெயபாலசிங்கம் மற்றும் இரத்தினம்மா (இராசாத்தி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நவமலர், கனகரட்ணம், வேலாயுதபிள்ளை, கனகசபை மற்றும் சின்னத்துரை அன்னலட்சுமி, நேசமலர் ஆகியோரின் மைத்துனியும், இரத்தினமகேசன் (நேசன்), சரா, ரூபன், விமலன், பவன், பாமினி ஆகியோரின் பெரியதாயும், காந்தரூபன், பிரேமரூபன், மோகனரூபன், காலஞ்சென்ற வசந்தரூபன் மற்றும் சுபகாந்தி, துஸ்யந்தி, தயாநிதி, தயாபரன், தயானந்தி, தயாளினி, தயாளன், தயாரூபி, ஜெயரஞ்சன், ஜெயசீலன் ஜெய சாந்தன், ஜெயகாந்தன், ஜெயபாரதி, ஜெயகாந்தி, ஜெயகௌரி ஆகியோரின் மாமியும், வரலக்ஷ்மி (மணி), வரதரா ஜன், சந்திரகுமார், குமார், பிரேமா ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 11.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத வீதி, (வளத்தை லேன்),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42597) (10.6.3)

தகவல்: மகள்-தேவகி (வேணி)
உமாகாந்தன் குடும்பத்தினர்.

## திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை



மட்டுவில் மத்தி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை 10.12. 2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், தேவராணி, திருநாவுக்கரசு (முன்னாள் கிராம அலுவலர்- கனடா), தேவபாதம் (STO மருத்துவ பீடம்- யாழ். பல்கலைக்கழகம்), சிவலோகநாதன் (கனடா), காலஞ்சென்ற யோகராணி மற்றும் சுகிர்தராணி (கனடா), ஜமுனாராணி (கனடா), ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கனகசபை (ஆசிரியர்), தயாநிதி (கனடா), தங்கேஸ்வரி (ஆசிரியை- சிறுப்பிட்டி G.T.M.S), வசந்தி (கனடா), சிவராசா (கனடா), திருக்கேதீஸ்வரன் (கனடா), சிறிதரன் (கனடா), ஜெனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற வர்களான சிவக்கொழுந்து, இரத்தினம், கந்தையா (சிவகுரு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் மத்தி, மடத்தடி,
சாவகச்சேரி.
T.P: 021 205 7817, 077 468 9412

தகவல்:
பொ.தேவபாதம்
(சி/7602) (45.3.6)

## யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்தலும் புதிய நிர்வாகத் தெரிவும் -2013**

காலம்: 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை: செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத்தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். நாம் இழந்த மணல் சேவையைப் பெற்றுக் கொள்ளும் முயற்சி பற்றி ஆராய இருப்பதனால் தவறாது சமுகமளிக்கவும்

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

க.செல்வச்சந்திரன்
செயலாளர்

(சி/14387)(4.6.3)

# வினாசியோடை வீதியை புனரமைக்கக் கோரிக்கை

அக்கராயன், டிசெ. 14

பூநகரி வினாசியோடைக் கிராமத் துக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கிராம வீதி புனரமைக் கப்படாமையால் இங்கு மீளக் குடியமர்ந்துள்ள 97 குடும்பங் கள் போக்குவரத்து நெருக் கடியை எதிர் கொண்டு வருகின்றன. கிளிநொச்சியில் இருந்து பிற்பகல் 3.40 மணிக்கு புறப்படும் அரச பஸ் இரவு நேரத்தில் வினாசியோடைக் கிராமத்தில் தரித்து நின்று விட்டுக் காலையில் மீண்டும் கிளிநொச்சியை நோக்கிப் பயணிக்கின் றது. இதனால் இந்தக் கிராம மக்கள் அதிகளவில் பயன்பெறுவதில்லை. எனவே இந்தக் கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துமாறு வேண்டு கோள்விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி, சங்கானையில் (துபால் கந்தோருக்கும் சேச் றோட்டுக்கும் இடையில்) 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776257905, 0212213010

## கார் விற்பனைக்கு

NP - JS - XXXX இலக்கமுடைய Silver Colour Maruthi Alto Lxi

(சி14386)(12.6.3) தொடர்பு: 077 138 1492

## வாடகைக்கு

அரச வீதி, உரும்பிராயில் கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில், பலாலி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 10 பரப்பில் அமைந்துள்ள 5 அறை, சமையலறை கொண்ட 2500 சதுர அடி வீடு சகல வசதிகளுடன், நிறுவனங்களுக்கு, உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்குண்டு.

(சி10313)(12.6) தொடர்பு: 077 839 4434

## யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

### மீள் கேள்வி அறிவித்தல் - 2014

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2014ஆம் திகதி முதல் 31.12.2014ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் - ரூபா 500.00 (வற் ,தே.க.வரி நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் - 17.12.2013 – 27.12..2013 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 27.12..2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் - 27.12.2013 பி.ப 2.30 மணிக்கு

விண்ணப்பப்டிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 27.12.2013ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக் காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

### மாநகரசபை யாழ்ப்பாணம்
### மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ இல | குத்தகை விவரங்கள் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதிசேர் வரியும், 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பெரியகடை மரக்கறிச் சந்தை | | 10000.00 | 1652500.00 |
| 02 | குருநகர் மீன்சந்தை | | 10000.00 | 1400000.00 |
| 03 | நாவாந்துறை மீன் சந்தை | | 10000.00 | 577500.00 |
| 04 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 520600.00 |
| 05 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 02 | 5000.00 | 516325.00 |
| 06 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 7000.00 | 453150.00 |
| 07 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 02 | 7000.00 | 495900.00 |
| 08 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 7000.00 | 363850.00 |
| 09 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 05 | 7000.00 | 448875.00 |
| 10 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 06 | 7000.00 | 360050.00 |
| 11 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 07 | 7000.00 | 287375.00 |
| 12 | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 99750.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 03 | 5000.00 | 88825.00 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 04 | 5000.00 | 190000.00 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 05 | 5000.00 | 88825.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 06 | 5000.00 | 88825.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 07 | 5000.00 | 88825.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 08 | 5000.00 | 88825.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 09 | 5000.00 | 88825.00 |
| 20 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | 11 | 5000.00 | 63175.00 |
| 21 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 12 | 5000.00 | 12825.00 |
| 22 | முஸ்லீம் கல்லூரி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | | 5000.00 | 110000.00 |

மேலதிக விவரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

**மாநகரசபை அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**
**14.12.2013**

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**மாநகரசபை யாழ்ப்பாணம்.**

(C/14383)(10.6.3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 28.02.2013 இற்கு பின்னர் பட்டம் பெற்ற தூய, பிரயோக விஞ்ஞான பட்ட மாணவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமை:**

எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.

விண்ணப்பப்படிவங்கள் கீழ்காணும் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. இணையத்தளம் : www.jfn.ac.lk

**முடிவு திகதி:** 23.12.2013

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும் தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி/14388)(10.6)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 78 ஆவது பிறந்த நாள் நினைவும்



தோற்றம் 14.12.1935
மறைவு 17.11.2002

திதி : திரயோதசி (14.12.2013)

**சுப்பிரமணியம் கந்தசாமி**

(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா / சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

ஆண்டு பதினொன்று ஓடிப்போனதுவோ
ஆறாத துயர் இன்னும் ஓய்ந்ததில்லை
புன்முறுவல் சிரிப்பும் புலமைதோய் முகமும்
இனிதான பேச்சும் பணிவான பார்வையும்
காலனில் கணக்கேட்டில் நின்றதுவோ
உமது மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும்
மாறாது எம் மனதிலிருந்து என்றுமே

" ஐயா அகம் "
4 ஆம் குறுக்குத் தெரு
கச்சாய் வீதி சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருபாலசிங்கம் துவாரகன்



யாழ். அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் மல்லாவியை வசிப்பிடமாகவும், வவுனியா கூமாங்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருபாலசிங்கம் துவாரகன் 11.12.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருபாலசிங்கம் (கிளி)- நாகரஞ்சினி தம்பதியரின் செல்லப் புதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12. 2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3.00 மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளையார் கோயில் வீதி,**
**கூமாங்குளம், வவுனியா.** (42590)(10.14)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சுப்பன் வைத்திலிங்கம்

(முன்னாள் தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்)

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் வைத்திலிங்கம் நேற்று (13.12.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தும்பளை ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணகை அம்மன் கோயிலடி,
தும்பளை.

(42611) (10.14)

தகவல்: மனோன்மணி (மனைவி)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகம்மா பொன்னையா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் துணுக்காய் கல்விளானை வசிப்பிடமாகவும், இல. 749, மல்லாவி யோகபுரம் மத்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகம்மா பொன்னையா கடந்த (11.12.2013) புதன்கிழமை காமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராம நாதர் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா -சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் பாசமிகு மனைவியும், மகேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற வரதராஜா (வரதன் -விக்கி) மற்றும் கேதீஸ்வரன் (கேதீஸ்- லண்டன்), தனலட்சுமி (தனம் -சுவிஸ்), கோணேஸ்வரன் (ஈசன்-மல்லாவி பால்ச்சபை முகாமையாளர், கல்விளான்), நகுலேஸ்வரன் (செல்வம்- சுவிஸ்), மங்களேஸ்வரி (மங்களா -கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ் சென்ற சின்னத்தம்பி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்காளான பொன்னாச்சி, குமாரசாமி, தம்பையா, சண்முகம், செல்லையா, தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவரத்தினராஜா (நவம்-சுவிஸ்), நகுலேஸ்வரி (குமுதா -லண்டன்), புவனேஸ்வரன் (செல்வம்- சுவிஸ்), விஜினா (விஜி- மல்லாவி), அருந்ததி (சுவிஸ்), விஜயகுமாரன் (கிளிநொச்சி) ஆகியோரின் மாமியும், காலஞ் சென்ற தணிஜன் (தணி), மற்றும் பாமினி (அனுஷா), தசந்தன் (தஜி), கஜந்தன் (கஜி), தஷானி, கஜீ வன், சஞ்சீவன், கஜானா, ஜெனிஷன், சர்விகன், சாதுசன், சாதுரிஜன், ருஷானி, நர்ஷானி, விதுஷா, கனுஷா, சாருஷன், சங்கீர்த் ஆகியோரின் பாச மிகு போத்தியும், தணிகாவின் பாசமிகு பூட் டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.20103) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல் மல்லாவி திருநகர் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 749, யோகபுரம் மத்தி, மல்லாவி.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பரீட்சை தாமதம்; விசாரணை ஆரம்பம்

கொழும்பு,டிசெ.14

நுவரெலியா, கந்தபொல பகுதி பாடசாலை ஒன்றின் பரீட்சை நிலையத்தில் சாதாரண தரப் பரீட்சை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தாமதமாக ஆரம்பமானமை தொடர்பில் மாகாண கல்வித்திணைக்களம் விசாரணையை ஆரம் பித்துள்ளது. நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் திலக் ஏகநாயக்க தெரிவித்தார். வினாப் பத்திரங்களை கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டதனால் பரீட்சை தாமதமாக ஆரம்பமாகியது என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறினார்.

கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகள் 18 இல் வெளியீடு

கொழும்பு,டிசெ.14

நாட்டிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்கள் அனுமதி பெறுவதற்கான புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள்விவரம்எதிர்வரும் 18 ஆம் திகதி வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சின் செயலர் அநுர திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பரீட்சையில் மூன்று லட்சத்து 29, 725 பரீட்சார்த்திகள் தோற்றினர். அதில் சிங்கள மொழி மூலம் இரண்டு லட்சத்து 49, 396 பரீட்சார்த்திகளும், தமிழ் மொழி மூலம் 80,329 பரீட்சார்த்திகளும் தோற்றியுள்ளனர். தேசிய ரீதியில் 2836 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் நீண்ட காலம் அலுவலகப் பணியாளராகக் கடைமையாற்றி ஓய்வு பெற்ற

### சுப்பன் வைத்திலிங்கம்

அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர்புரிச்சங்கம், தேர்தல்கள் அலுவலகம், யாழ்ப்பாணம்.

பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்

### சிவகுரு உதயகுமார்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட சிவகுரு சுசிலா தேவி தம்பதி யரின் அன்புமகன் உதயகுமார் (உதயன்) 13.12.2013 வெள்ளிக்கிழமை நேற்று சுவிஸில் காலமானார்.

அன்னார் நிர்மலாதேவி (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), உமாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் நேசலிங்கம், சுபாஜினி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிதுர்ஜா, நிருபா, நியந்தன், ஜதுசன், ஜனுசன், ஜர்வன் ஆகியோரின் மாம னாரும் பிரியங்கா, துவாரகா ஆகி யோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.12.2013) அன்று ஒரு மணியளவில் Krematorium Nordheim Kaferholzstr 101, 80 57 Zurich Swizerland இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவகுரு - சசீலாதேவி
T.P : 077 6156803

## மரண அறிவித்தல்

### கதிரித்தம்பி கலியுகவரதன்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி கலியுகவரதன் நேற்று முன்தினம் (12.12.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - செல்லமுத்து தம்பதியரின் அருமை மருமகனும் மகேஸ்வரியின் (தேவி - தட்டெழுத்தாளர்,நீதி மன்றம், மல்லாகம்) பாசமிகு கணவரும் ஜனார்த்தன் (ஜனா - மாணவன்), பிரார்த்தனன் (பிரபு - சப்ரகமுவா பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாகரன், சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 ஆம் கட்டை ஒழுங்கை, மல்லாகம்
T. P : 077 2139624

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா கணேசரத்தினம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா கணேசரட்ணம் (09.12.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணேசரட்ணத்தின் அன்பு மனைவியும், கனகசபை, பொன்னம்பலம், அன்னம்மா, சௌந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசலட்சுமி, அமிர்தகௌரி, கதிர்காமசோதி, பாலசுப்பிரமணியம், அகிலாண்டேஸ்வரி, ஜெகதீஸ்வரி, விக்கினராஜா, செல்வராஜா, சிவகாமசுந்தரி, கலைவாணி, ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோரின் அன்புத்தாயும், சண்முகலிங்கம், இராசேந்திரம், வசந்தகுமாரி, லாலசொருபி, வியேந்திரன், தயாபரன், ஜெயகுமாரி, ரங்கநாதன், ரவிசந்திரன், மோகனராணி, தர்சிகா ஆகியோரின் மாமியும், மதிவதனி, மயூரன், தேவமுகுந்தன், சேஸகோபாலன், பரன், ஜலஜா, சுபோசனா, தரனிவாசன், யசிந்தா, யசிந்திரா, அஜந்தன், அனுறூபன், கோபிகா, ஆர்த்திகா, தயீவன், திவ்யா, தனுசன், குமரன், கிருஸ்னவி, தினேஸ்காந், தர்சன், டவினா, கரிசன், கரிசித்தன், கர்னிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆகாஸ், அபினாஸ், அனோஸ், மதுரிகா, மதுசன், ஐஸ்வர்யா, ஆராதனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செட்டி (மகன்), சண்முகம் (மருமகன்)

# மேல் மாகாண தேர்தலில் தனித்துப் போட்டி பொது எதிரணி அமைந்தால் மீள்பரிசீலனை

## ஐ.ம.மு. அரசியல் குழு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 14

எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களி லும் ஏணி சின்னத்தில் தனித்து போட்டியிட ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது. அதேவேளை, இன்று எதிரணியில் செயலாற்றுகின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே எதிர்க்கட்சி கூட்டணியாக பொது சின்னத்தில் போட்டியிடும் நிலைமை உருவாகுமானால், தனித்துப் போட்டியிடும் தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியற்குழுக் கூட்டம் நேற்று கொழும் பில் காலை 10 மணி முதல் இரண்டு மணித்தியாலங்கள், கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீசூர்யா விடுதியில், கட்சி தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்று நான்கு தீர் மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. அரசியல்கு ழு வில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கட்சியின் பிரதி தலைவரும், மேல்மாகா ணசபை உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுரு பரன் ஊடகங்களிடம் கூறிய தாவது,

மேல்மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும், நமது சொந்த சின்னமான ஏணி சின்னத்தில் நமது கட்சி தனித்து போட்டியிடும். கட்சி தலைவர் மனோ கணேசன், நேரடியாக கொழும்பு மாவட்டத் தேர்தலில் களமிறங்கி, மேல்மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் போட்டியிடும் நமது வேட்பாளர் அணியினருக்கு தலைமை தாங்குவார்.

**பொது எதிரணி**

இந்த அரசு இன்று நிலைத்திருப்பதற்கு ஒரே காரணம், பொது எதிரணி கூட்டணி இல்லாமையாகும். பொது எதிரணி அமைக்க ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் வரை காத்திருக்க தேவையில்லை. இந்த மாகாணசபைத் தேர்தல்கள் மூலமாகவே இந்த அரசை வீழ்த்தும் முயற்சியை ஆரம்பிக்கலாம். ஆகவே ஐக்கிய தேசிய கட்சி, ஜனநாயக கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சி களை குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுசேர அழைக்கிறோம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்காவையும், மீண்டும் செயற்பாட்டு அரசியலுக்குள் வர அழைக்கிறோம்.- என்றார். (ங-சி)

# ஆயர் பற்றி அவதூறு: சம்பிக்கவுக்கு கண்டனம்

மன்னார், டிசெ.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசகராக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை செயற்பட்டு வருகின்றார் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

கூட்டமைப்பின் ஆலோசகராகச் செயற்படும் மன்னார் ஆயருக்கு எதிராக கர்தினால் எடுக்கப்போகும்நடவடிக்கை என்ன? என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பாக செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

வடக்கில் உள்ள தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்குத் தீர்வு காண்பதற்காக மன்னார் ஆயர் செயற்பட்டு வருகின்றார். மக்களின் துன்பத்தை நீக்குவதற்கு மன்னார் ஆயர் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார். இதனால் அரசு அவருக்குப் புலிகளின் தலைவர் எனப் பெயர் சூட்டியுள்ளது.

இச் சூழ்நிலையில் தற்போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க மன்னார் ஆயர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசகராகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். இவரின் இந்தக் கருத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (த-12-400)

# இறுதிப் போரில் கைவிட்ட வாகனங்கள் பழைய இரும்புக்கு

## பொதுமக்கள் கடும் விசனம்

கிளிநொச்சி, டிசெ.14

இறுதிப் போரின் போது பொது மக்களால் கைவிடப்பட்டுக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் பராமரிக்கப்பட்ட வாகனங்கள் பழைய இரும்புக்காக ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இறுதிப் போரின் போது பெரும் எண்ணிக்கை யான வாகனங்கள் பொதுமக்களால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தன. இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்பட்ட வாகனங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்பட்டன.

இவ்வாறு பராமரிக்கப்பட்ட வாகனங்களில் பெருமளவானவை தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களுடையவை என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களுக்குச்சொந்தமான வாகனங்களும், உரிய ஆவணங்கள் எவையும் இல்லாத நிலையில் பொது மக்களால் மீட்கப்படாத வாகனங்களுமே மாவட்டச் செயலகத்தினால் பழைய இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இறுதிக்கட்டப் போரின் போது வாகனங்களுக்கான ஆவணங்கள் அனைத்தும் தொலைந்த நிலையில் அவற்றின் உரிமையாளர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். இந் நிலையில் இவற்றை ஏலத்தில் விற்பனை செய்தமை என்ற வகையில் நியாயம் எனப் பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, இரும்புக்காக ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் நீண்ட காலமாகக் கிளிநொச்சி செயலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்தன. இவை நக ரின் மையப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அங்கு டெங்கு நுளம்புகள் பெருகும் அபாய நிலை காணப்பட்டது.

இதனால் அவற்றை அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சட்டமா அதிபரின் அனுமதியுடன் விற்பனை செய்துள் ளோம். இதன் மூலம் சுமார் 10 மில்லியன் ரூபா வரு மானமாகக் கிடைத்துள்ளது.

இந்த நிதியை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளி களின் வாழ்வாதார மேம்பாட் டுக்குப் பயன்படுத்த உள்ளோம்-என்றார். (த-6-400)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடமாகாண

மீறிச் செயற்படுவது? மத்திய அரசும், ஆளுநரும் தான் அரசமைப்பை மீறுகின்றனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணசபை அரசமைப்பை மீறுகின்றது என வடக்கு ஆளுநர் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். வீடமைப்பு மற்றும் போக்குவரத்துத் துறைகளைத் தமது அதிகாரத்தின் கீழ் கோருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

அரசமைப்பின் பிரகாரம் போக்குவரத்து, வீடமைப்பு மாகாணப் பட்டிய லில்தான் இருக்க வேண்டும். நிலைமை இப்படியிருக்கையில், இது விடயத்தில் வடக்கு மாகாணசபை அரசமைப்பை மீறியுள்ளது என எவ் வாறு கூறுவார்? ஆளுநர் கூறிய பொறுப்புவாய்ந்த கருத்துத்தானா இது?

வடக்கு ஆளுநர் சட்டத்தில் புலமை பெற்றவர் அல்லர். அவர் எப்படி அரச மைப்பின் பொருட்கோடலைக் கோர முடியும்? வடமாகாணசபையானது அரசமைப்பின் பிரகாரம் தான் செயற்படுகின்றது. ஆளுநர் தான் அரசமைப்பை மீறும் வகையில் செயற்படுகின்றார். எனவே, அரசமைப்பை மீறும் அவரை நீக்குவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

குறிப்பாக, வடமாகாணசபைக்கு அண்மையில் பூஜித ஜயசுந்தர என்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவ்வாறான நியம னங்களின்போது மாகாண முதலமைச்சரின் இணக்கப்பாடு அவசியம். ஆனால், இது விடயத்தில் அவரின் ஒப்புதல் பெறப்பட்டதா? அப்படியானால் அரசமைப்பை மீறிச் செயற்படுவது வடமாகாணசபையா? ஆளுநரா? மத்திய அரசா?

பொலிஸ், சட்டமும் ஒழுங்கும் ஆகியன மாகாண விடயதானங்களுக் குரியவை. ஆனால், சட்டமும் ஒழுங்குமே பகிரப்பட்டுள்ளன. பொலிஸ் வழங்கப்படவில்லை. பிரதம செயலாளர் நியமனத்துக்கும் முதல்வரின் இணக்கம் தேவை. இந்த நடை முறையை அரச தரப்பு பின்பற்றவில்லை.

சட்டத்தை மதித்து, அரசமைப்பை வாசித்துப் புரிந்து கொள்ள வேண்டிய ஆளுநர் உடன்தெரிவுசெய்யப்படவேண்டும். ஆளுநர் ஒருவர் அரசமைப்பை மீறுகின்றபோது அவரைப் பதவி நீக்கலாம் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது - என்றார். (கு-சி)

### போர்க்

முறைப் படுத்துவது என்பதை இலங்கை அரசே தீர்மானிக்கும் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை முதன் முதலாக இலங்கை அரசு நடத்தியதை ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனாலும் இலங்கையில் இன்னமும் இனப் பாகுபாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்வதாகக் கிடைக்கும் அறிக்கைகள் தொடர்பாக அவர்கள் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனை விட, இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பான விவாதத்தில் பேசிய பிரிட்டன் கொன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜொப்ரி வான் ஒடன், வடக்கிலுள்ள தமிழர்களின் விவகாரம் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகியுள்ள நிலையில், இரு தரப்பினதும் நடவடிக்கைகளால் தமது நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும் என்ன நடந்தது என்று சுதந்திரமான விசாரணை மூலம் தெரிந்து கொள்ளும் உரிமை இலங்கை மக்களுக்கு இருப்பதாகப் பிரிட்டன் லிபரல் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் பில் பென்னியன் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், நம்பகமான விசாரணை, படைக்குறைப்பு, காணிப்பிரச்சினையை தீர்ப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்குதல் உள்ளிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக, விரைவாக நடைமுறைப்படுத்தவதற்கான முயற்சிகளை இலங்கை அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சுதந்திரமானதும் வினைத்திறனானதும் நீதித்துறை மற்றும் சட்டம் ஒழுங்கு, கருத்துச் சுதந்திரத்துக்கான வெளிப்பாடு, ஏனைய சமயங்கள் மீதான சகிப்புத் தன்மையின்மையை குறைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

### கடும் மழைக்கு

சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கே நிரந்தர நியமனம் என்று கூறப்படுவதாக தமக்கு தொண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

'நீங்கள் 2 வாரங்களுக்கு பணிபுரியுங்கள். அதற்குள் தீர்வு எட்டப்படும். நீங்கள் பணியைத் தொடர மறுத்தால் இராணுவத்தினரைக் கொண்டு வந்து உங்கள் பணிகளைச் செய்ய வேண்டிவரும் என்று வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தம்மிடம் தெரிவித்தார் என்று தொண்டர்கள் போராட்டத்தின் போது கூறினர்.

இது தொடர்பாகப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இராணுவத்தினரை அழைத்து வந்து பணியைத் தொடர்வோம் என்று நான் கூறவில்லை. அமைச்சு அவ்வாறு செய்யும் நிலைக்கு நாம் இடமளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தினேன் - என்றார்.

தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தொண்டர்கள் கூறினர். (த-4-17)

### சர்வதேச

அவர்கள் இந்தச் சம்பவம் தொடர்பில் வெளிப்படையாகப் பேசுவதற்கு இன்னமும் தயக்கம் காட்டுவதாக பி.பி.சி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி திருகோணமலை மூதூர் நகரில் 'அக்ஷன் பாம்' வளாகத்தில் வைத்து 17 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவற்றை இலங்கை இராணுவத்தினரே மேற்கொண்டுள்ளனர் என்று அந்த நிறுவனம் அண்மையில் குற்றச்சாட்டை முன் வைத்ததுடன், இதற்குச் சர்வதேச விசாரணையே தேவை என்றும் வலியுறுத்தியிருந்தது.

சம்பவம் நடந்து 7 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அந்தத் துயரச் சம்பவத்தை மறக்க முடியாதுள்ளது என்று கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். அவர்கள் வெளிப்படையாகப் பேசுவதற்குத் தயக்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

சர்வதேச விசாரணைகள் மூலமே தமக்கு நீதி கிடைக்கும் என்று நம்புவதாக அவர்கள் குறிப்பிட்ட அதே வேளை, எந்தவிசாரணையானாலும் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதிலேயே உறுதியாக தாம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (த-5)

### தனக்கு

ளால் தெரிவு செய்யப்பட்டு, அதன் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில்,

ஆளுநரால் அவசர அவசரமாக விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய, நேற்று வடக்கு மாகாண சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார் வடக்கு ஆளுநர்.

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், மத்திய அரசுக்குட்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்கள், வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைச் சட்டங்கள் ஊடாக ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் கள் தொடர்பில் ஆளுநராகப் பதவியேற்று 4 வருடங்களின் பின்னர் நேற்று அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார் ஆளுநர் சந்திரசிறி.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் தொடர்பிலோ வடக்கு முதலமைச்சருக்குரிய அதிகாரங்கள் தொடர்பிலோ அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை இந்தக் கலந்துரையாடலின் கேள்வி நேரத்தின்போது தலா இரண்டு தமிழ் பேசும் அதிகாரிகளும், சிங்கள அதிகாரிகளும் மட்டுமே கேள்வி கேட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-5)

### 24 மணி

என்னிடம் நேரடியாக முறையிட முடியும்.

பொலிஸாருக்கு மாதாந்தம் சம்பளம் வழங்கப்படுகிறது. எனவே பொலிஸாருக்கு எவரும் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. லஞ்சம் கொடுப்பதும் தவறு வாங்கினாலும் தவறு.

போக்குவரத்துப் பொலிஸார் விதிமுறை ஒழுங்குகள் மீறியவர்களுக்கு எதிராக முறைப்பாடு எழுதும் போது சிங்கள மொழியில் எழுதுவதைக் கடைப்பிடித்து வருகின்றனர். பொதுமக்களுக்கு அது புரியாத மொழி என்பதனால் அதனை மாற்றி அமைப்பது தொடர்பில் கலந்துரையாடவுள்ளேன்- என்றார். (த-4)

### சில்மிஷ

அத்துடன் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சனி ஐங்கரனுக்கும் இது குறித்துஅறிவித்தனர். அதன் பின்னர் குறித்த மினி இராணுவ முகாமுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது அந்தப் பகுதி மக்கள், குறித்த இராணுவச் சிப்பாய் இவ்வாறு தொடர்ச்சியாக பெண்கள் குளிப்பதை மறைந்திருந்து பார்த்து வருவதாகவும், அவர் தனியா கச் செல்லும் பெண்களுடன் தவறாக நடக்க முற்படுவதாகவும் குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து குறித்த இராணுவ அதிகாரி, மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார். அத்துடன் குறித்த இராணுவச் சிப்பாயை உடனடியாக இடமாற்றம் செய்துள்ளார். (ங-5-21)

# மைலோ கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட இறுதி இன்று

## அன்ரனிஸ்- மேரிஸ் அணிகள் மோதல்




பாஷையூர் சென். அன்ரனிஸ்



நாவாந்துறை சென். மேரிஸ்

யாழ்ப்பாணம், டிசெ.14
நெஸ்லே லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் 'மைலோ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மாலை 3 மணிக்கு இடம் பெறவுள்ளது.

"-"

இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இந்த நிகழ்வில் விருந்தினர்களாக நெஸ்லே லங்கா நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் கணேஸ் அம்பலவாணர், நெஸ்லே நிறுவனத்தின் தெற்காசிய வலயத்தின் சிரேஷ்ட பிரதித் தலைவர் நந்து நந்தகிசோர், நெஸ்லே நிறுவனத்தின் தெற்காசிய வலயத்தின் சந்தைப்படுத்தல் தலைவர் எட்டியா பேணி, வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-23)

## அரையிறுதியாட்டத்துக்கு மூளாய் வளர்மதி தகுதி

யாழ்ப்பாணம், டிசெ.14
அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழகமும் அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.
இதில் மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது. (த-23)

## கிரிக்கெட் பயிற்சி முகாம்


யாழ்ப்பாணம், டிசெ.14
இலங்கை கிரிக்கெட் சபையின் ஒழுங்கமைப்பில் இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் எதிர்வரும் திங்கட்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்று இடம் பெற வுள்ளது.
காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நடை பெறும் இந்தப் பயிற்சி முகாமில் பாடசாலைகளின் கிரிக்கெட் பயிற்றுநர்களும், ஏனைய கிரிக்கெட் பயிற்றுநர் களும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-23)

## இறுதியாட்டம் இன்று காலை



யாழ்ப்பாணம், டிசெ.14
முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப்பிரிவு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் முல்லைத் தீவு சென்.யூட் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## சென்.மைக்கல் நடத்தும் மென்பந்து கிரிக்கெட்




யாழ்ப்பாணம்,டிசெ.14
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளது.
இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் மைதானத்துக்குச் சமுகம் தந்து பதிவுகளை மேற்கொண்டு போட்டியில் பங்குகொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

## எல்லே போட்டி அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.14
வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## வவுனியாவில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டி




யாழ்ப்பாணம்,டிசெ.14
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் சாந்தன்.யூட்சன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று திங்கட்கிழமை வவுனியா வைரவப் புளி யங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற வுள்ளது.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சன்சைன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## மின்னொளியில் தாச்சிப்போட்டி

வலி. வடக்கு, டிசெ. 14
யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் இளைஞர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் தாச்சிப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-
உடுவில் ஆனந்தா விளையாட்டுக் கழகத்துக்கும் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 3 பழங்களை பெற்ற நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மிகவும் உற்சாகமாகவும் கவனமாகவும் விளையாடிய நிலையில் 5:0 பழம் என்ற நிலையில் போட்டி முடிவடைந்தது.
போட்டி நிறைவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 8:3 பழங்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.
தெல்லிப்பழை உதயதாரகை விளையாட்டுக் கழகத்துக்கும் உடுவில் வைகறை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தை வைகறை விளையாட்டுக் கழகம் 5:1 பழம் என்ற அடிப்படையில் கைப்பற்றியது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழகம் 3:1 என்ற பழக் கணக்கில் தனதாக்கியது ஆட்ட நிறைவில் வைகறை விளையாட்டுக் கழகம் 6:4 பழங்கள் என்ற அடிப்படை யில் வெற்றி பெற்றது. (த-86-23)

## கரம் போட்டியில் வென்ற அணிகள்



யாழ்ப்பாணம்,டிசெ.14
வடக்கு மாகாண அமைச்சு அணிகளுக்கு இடையே நடை பெறும் விளையாட்டுப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி யில் இடம்பெற்றது.
இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதிக் கொண்டது. இதில் உள்ளூராட்சி அமைச்சு அணி 2:1 என்ற செற் கணக் கில் வெற்றி பெற்றது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுகாதார அமைச்சு அணியை எதிர்த்து ஆளுநர் செயலக கொத்தணி அணி மோதிக் கொண்டது. இதில் ஆளு நர் செயலக கொத்தணி அணி 2:1 என்ற செற் கணக் கில் வெற்றி பெற்றது. (த-23)




# தொடரை இழந்தாலும் இந்தியா முன்னிலையில்

ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதில் முதலிடத்தில் இருந்த இந்தியாவின் விராட் கோஹ்லி இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். இவர், சமீபத்தில் முடிந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சோபிக்காதது தான் பின்னடைவுக்கு காரணம்.

இந்தியாவுக்கு எதிராக ஒரு சதம், ஒரு அரைசதம் உட்பட 189 ஓட்டங்கள் எடுத்த தென்னாபிரிக்க அணியின் அணித் தலைவர் டிவில்லியர்ஸ், 872 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் இருந்து முதன் முறையாக முதல் இடத்துக்கு முன்னேறினார். ஏற்கனவே இவர், டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையிலும் முதல் இடத்தில் உள்ளார்.

இதன்மூலம் ஒரே நேரத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகிக்கும் 9ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார். தென்னாபிரிக்கா சார்பில் கலிஸ், அம்லாவுக்கு பின் இந்த இலக்கை எட்டிய மூன்றாவது வீரரானார்.

அணித்தலைவர் டோனி 6 ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டார். தென்னாபிரிக்காவுக்கு எதிராகச் சோபிக்காத இந்தியாவின் ஷிகர் தவான் (10 ஆவது இடம்), ரோகித் சர்மா (18ஆவது), சுரேஷ் ரெய்னா (23ஆவது) ஆகியோரும் பின்னடைவைச் சந்தித்தனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் பாகிஸ்தானின் சயீட் அஜ்மல் முதலிடத்தில் நீடிக்கிறார். இந்தியாவுக்கு எதிராக 6 இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன், மூன்று இடங்கள் முன்னேறி 2ஆவது இடம் பிடித்தார். இந்தியாவின் ரவிந்திர ஜடேஜா (7ஆவது இடம்), அஷ்வின் (17 ஆவது) ஆகியோர் பின்னடைவைச் சந்தித்தனர்.

தென்னாபிரிக்காவின் டிசாட்சொபே (8ஆவது இடம்), மோர்னி மோர்கல் (9ஆவது) முதல் 10 வரிசையில் உள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை இழந்த போதிலும், ஒருநாள் போட்டி அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி 120 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறது. அடுத்த மூன்று இடங்களில் ஆஸ்திரேலியா(114 புள்ளி), இங்கிலாந்து(111), இலங்கை(110) அணிகள் உள்ளன. மூன்று புள்ளிகள் கூடுதலாகப் பெற்ற தென்னாபிரிக்க அணி 110 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் தொடர்கிறது. அடுத்த இரண்டு இடங்களில் பாகிஸ்தான்(100 புள்ளி), மேற்கிந்திய தீவுகள்(90 புள்ளி) அணிகள் உள்ளன. (த)



## டெஸ்ட்டில் கலக்குவோம்

ஒருநாள் போட்டியில் வெற்றியைப் பறிகொடுத்தாலும், டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்திய அணி விளையாடி வருகிறது. ஒருநாள் போட்டியில் 2 ஆட்டங்களிலும் மோசமான தோல்வியைத் தழுவி தொடரை இழந்தது. இந்நிலையில் இவ்விரு அணிகள் மோதும் மூன்றாவது ஒருநாள் போட்டி செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நடந்தது. இந்திய அணி விளையாட ஆரம்பித்த போது மழை தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதனால் 3 போட்டி கொண்ட தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில் இது குறித்து அணித்தலைவர் டோனி கூறுகையில், ஒருநாள் தொடரை இழந்ததன் மூலம் நிறையப் பாடங்களைக் கற்றுக் கொண்டோம். வேகப்பந்து. பவுன்சை எப்படி எதிர்கொள்வது என்பதை ஒருநாள் தொடரில் அறிந்தோம். இதனால் டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது - என்றார்.

# ரொனால்டோ புதிய சாதனை

சம்பியன்ஸ் லீக் போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ புதிய சாதனை படைத்துள்ளார். கோபன்ஹேகனில் நடந்த சம்பியன்ஸ் லீக் போட்டியில் ரியல் மட்ரிட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, தனது அணியை 2:0 என்ற விகிதத்தில் வெற்றி பெறச்செய்தார். இவரது கோல் தான் ரியல் மட்ரிட் அணியை வெற்றி பெறச் செய்தது.

இதன் மூலம் ஒரு பருவ காலத்தில் அதிக கோல் அடித்த நபர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார். இந்தப் பருவகாலத்தில் அவர் 9 கோல்கள் அடித்து உள்ளார், இதற்கு முன் பருவகாலத்தில் 8 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.

இது குறித்து அவர் கூறுகையில், நான் எனது கோல்கள் கணக்கின் மூலம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். அணியின் வெற்றிக்கு உதவ முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் அதிக கோல்கள் அடிக்க விரும்பினேன். அது சாதனையாக அமைந்தது. ஆனால் நான் சாதனைகளை முறியடிக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். (த)




> நான் எனது கோல்கள் கணக்கின் மூலம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். அணியின் வெற்றிக்கு உதவ முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

# அதிர்ஷ்டத்தால் சதம் அடித்தாரா கொக்?

தென்னாபிரிக்க அணி வீரர் குயின்டன் டி கொக் சதம் அடித்ததற்கு அதிஷ்டம் தான் காரணம் என இந்திய அணியின் பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை 2:0 என்ற கணக்கில் இழந்து கிண்ணத்தைப் பறிகொடுத்தது.

இந்தத் தொடரில் மூன்று போட்டிகளிலும் தென்னாபிரிக்க வீரர் குயின்டன் டி கொக்-135, 106, 101 என ஹட்ரிக் சதம் அடித்து அசத்தினார்.

இது குறித்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா கூறுகையில், குயின்டன் மூன்று போட்டிகளில் சதம் அடித்தமை அவருக்கு நல்லது தான். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இவருக்கு அதிர்ஷ்டம் என்று தான் சொல்வேன். மூன்று போட்டிகளிலும் இவர் அடித்த பந்துகள், அதிர்ஷ்டவசமாகக் களத்தடுப்பாளர்களுக்கு இடையில் பறந்து சென்றன. மூன்றாவது போட்டியில், இரண்டு எளிய பிடியெடுப்புகள் கோட்டை விடப்பட்டன. கடந்த 12 மாதங்களாக உலகின் பல அணிகளுக்கு எதிராக வெற்றிகள் பெற்று வந்துள்ளோம். ஒரு சில நேரங்களில் இதுபோல தோல்விகள் கிடைக்கலாம், இது எங்களுக்கு நல்ல பாடம்தான். ஒருநாள் தொடரை இழந்தாலும், டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குயின்டன், இஷாந்த் சர்மா கூறியது சரி தான், நான் அதிர்ஷ்டக்காரன் தான். ஏனெனில் செஞ்சூரியன் போட்டியில் இருமுறை தப்பித்தேன். இப்படி விளையாடியதற்காக கோபப்பட்டேன் என்றும், மற்றபடி மூன்றாவது சதம் கடினமாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார். (த)



# சங்கா, மஹேல வென்றனர் விருது




இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை வென்றுள்ளார்.

இந்த விருதுக்காக சயீட் அஜ்மல், இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி, ஷிகார் தவான் உள்ளிட்ட வீரர் களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


அத்துடன் இலங்கை அணியின் மற்றுமொரு வீரரான மஹேல ஜெயவர்த்தன துடிப்பு மிக்க கிரிக்கெட் வீரருக்கான விருதை தனதாக்கியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விருதுகள் நேற்று அறிவிக்கப் பட்டன.

இதன்படி டெஸ்ட் போட்டிகளின் சிறந்த வீரருக்கான விருதை ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க் வென்றுள்ளார்.

அத்துடன் பெண்களுக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த வீராங்கனைக்கான விருதை சுசி பேட்ஸ் தனதாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-400)

# மைக் டைசன் வெளியேற்றம்



முன்னாள் அதிபார குத்துச் சண்டைவீரரான மைக்டைசன் லண்டனில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளார். தமது 'மறுக்க முடியாத உண்மைகள்' என்ற சுயசரிதை நூலை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வதற்காக மைக் டைசன் லண்டன் பயணித்துள்ளார்.

எனினும்பிரிட்டன் குடிவரவுச் சட்டத்தின் கீழ், 4 வருடங்களுக்கு மேல் சிறை தண்டனை அனுபவித்த ஒருவர், அந்த நாட்டினுள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

47 வயதான மைக் டைசன், கடந்த 1992ம் ஆண்டு பாலியல் வன்புணர்வு சம்பவம் ஒன்றுடன் தொடர்பு பட்ட நிலையில் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, அதில் மூன்று ஆண்டுகள் தண்டனை அனுபவித்திருந்தார். இதனைகருத்தில் கொண்டு பிரிட்டன் குடிவரவு அதிகாரிகள் அவரை பலவந்தமாக வெளியேற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு எதிரான பாகிஸ்தான் அணி

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹக் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியில் 15 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

அண்மையில் தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் அணியில் இடம் பெற்றிருந்த வீரர்களான நசீர் ஜம்ஷெத், உமர் அமின் இருவருக்கும் அணியில் இடம் வழங்கப்படவில்லை. அவர்களுக்குப் பதிலான ஷார்ஜீல் கான், ஹரிஸ் சொஹைல் இருவரும் இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர்.

இந்த அணியில் வேகப்பந்து வீச்சாளர்களான உமர் குல், மொஹமட் இர்பான் இருவரும் கருத்திற் கொள்ளப்படவில்லை. இருவருக்கும் ஏற்பட்ட உபாதையிலிருந்து குணமடையாத தன் காரணமாகவே அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

5 போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் டிசெம்பர் 18ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள அணி விபரம்:
மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ், ஷார்ஜீல் கான், அஹமட் ஷெஷாத், சொஹைப் மசூத், ஹரிஸ் சொஹைல், அசத் ஷபீக், உமர் அக்மல், ஷகிட் அப்ரிடி, சயீட் அஜ்மல், அப்துர் ரெஹ்மான், ஜுனைட் கான், அன்வர் அலி, சொஹைல் தன்வீர், பிலாவல் பற்றி.

(ங-400)

**French Classes பிரெஞ் வகுப்புகள்**

French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே (தொ.பேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

**Notice to Sri Lankan Chartered Students**

Commencement of Strategic Level – Classes in Jaffna

Basic discussion about Strategic Level subjects, class timetable and Chartered Institute requirements for the exam

Date: 16th December 2013 [Monday]
Time: 10.30 am
Venue: K-AIMS Jaffna

K-AIMS 147- 2/2 K.K.S Road [Top of DFCC Bank]
0773 722 104

All CAB – II Passed Candidates are expected to participate.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தசாமி (வர்த்தகர்)



அராலி மத்தி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி நேற்று (13.12.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை,
0777111121

தகவல்:
க. கோபாலசிங்கம்
(மகன்-சிற்பாசாரியார்)

**வீடு வாடகைக்கு**

ஈச்சமோட்டை திருஞானபிள்ளை வீதியில் 3அறைகளுடன் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
T.P:- 077 3027567

**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்களும் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 6592044

**வீடும் கடையும் விற்பனைக்கு**

யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தியில் மூன்று பரப்பு காணியில் 45 அடி நீளம் கொண்ட மூன்று கடைகளும் மேல் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 783 6878 (சி/14334) (7.6.3)

**Diploma in Mobile Phone Repairing**
சகல வகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி

முல்லைத்தீவு, நெல்லியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில் இணைய விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். முடிவில் அரச சான்றிதழ் வழங்கப்படும். (காலம் - 2 மாதங்கள்)
இன்றுவரை என்னிடம் 2000 மேற்பட்ட மாணவர்கள் கற்றுவெளியேறி உள்ளதுடன் உரிய தொழில் வாய்ப்பையும் பெற்றுள்ளனர். பிரிவு 01ஆரம்பமாகி 20 மாணவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

மேலதிகவிபரங்களுக்கு :- 0777 110 862
Https://www.facebook.com/selvajaffnamobile.repairthas

**மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

செல்வந்த வீடுகளில் உயர் சம்பளத்துடன் பணியாற்ற (2 வருட Work Permit) பயணம் முற்றிலும் இலவசம் மற்றும் அலுமினிய தொழிற்சாலையில் helper ஆக பணியாற்ற ஆண்கள் வயது 21-35 வரை, உயர்ந்த சம்பளம், 3 வருட Work Permit உடன் பயணமாக தொடர்பு கொள்ளுங்கள்.

LANKA VOICE
075 065 0084 (49597) (18,14)

**மேல்மாடி வீடு வாடகைக்கு**

நல்லூர் கோயிலில் இருந்து 300M தொலைவில் [illegible] அமைந்துள்ள சகல வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குவிடப்படும்.
குறிப்பு:- நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு:– 021 222 3394, 077 6969511

**CAMBRIDGE ENGLISH PET**

PRELIMINARY ENGLISH TEST- B1
வகுப்புகள் ஆரம்பம் 16-12-2013

* இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன
* நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, jaffna
(பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel 0755435089 0778803887

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| BATCH - I | BATCH - II | BATCH - III |
|---|---|---|
| 14.12.2013 | 16.12.2013 | 21.12.2013 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 ½ Months
(Quick Learning Course)

**Diploma In English** 2 ½ Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

**எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்**

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**IELTS** (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2 ½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office | Jaffna Branch | Vavuniya Branch |
|---|---|---|
| Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550 | Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287 |

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த பாரதி விழாவும் இணையத்தள ஆரம்ப நிகழ்வும் பாரதி பிறந்ததினமான கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்ச் சங்க உப தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. விழாவில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இணையத்தளத்தை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆரம்பித்து வைத்தார்.



# கூட்டுறவு நடவடிக்கைகளை கட்டியெழுப்ப அரசு தயாராம்

*வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் பேச்சு நடத்த வரவேண்டும் என்றும் அழைப்பு*



வடமாகாண கூட்டுறவு நடவடிக்கைளைக் கட்டியெழுப்ப நாம் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவித்த கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அதற்கு வடமாகாணக் கூட்டுறவுத்துறை அமைச்சர் அடுத்த ஜனவரி மாதம் எம்முடன் பேச்சு நடத்த வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்ட வாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் கூட்டுறவு நடவடிக்கைகளைக் கட்டியெழுப்ப நாம் தயாராகவே இருக்கிறோம். இதற்கு வடமாகாண கூட்டுறவுத்துறை வந்து எம்முடன் பேச்சு நடத்தவேண்டும். ஆனால், பேச வருவதில்லை. இந்தக் கூட்டுறவு நடவடிக்கைகளைக் கட்டியெழுப்ப அடுத்த ஜனவரி மாதம் வடமாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் எம்முடன் வந்து பேச்சு நடத்தவேண்டும். அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவே இருக்கிறோம்.

**மலையகத்துக்கும் சேவை**

மலையகத் தோட்டப் பகுதிகளில் சதொச விற்பனை நிலையங்களை நிறுவுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் அரசின் ஏற்பாட்டில் சிறிய ரக லொறிகளினூடாக தோட்டப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள் விநியோகத்தை மேற்கொள்ளவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை அடுத்த ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளோம்.

**மருந்துக்குக் கட்டுப்பாட்டு விலை**

மருந்துகளை இறக்குமதி செய்யும் முகவர்கள் தாம் நினைத்தாற்போல அந்த மருந்துகளை விற்பனை செய்கின்றனர். எனவே, அடுத்த ஆண்டு முதல் நாட்டில் விற்பனைசெய்யப்படுகின்ற அனைத்து மருந்து வகைகளுக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கவுள்ளோம் - என்றார்.

# இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள மன்னார் கூட்டுறவுக் கட்டடத்தை மீட்டுத் தருக

*நாடாளுமன்றில் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை*



மன்னார் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு விற்பனை நிலையக் கட்டடத்தை இராணுவத்தினர் கைப்பற்றி வைத்துள்ளனர் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இராணுவத்தினரிடமிருந்து இந்தக் கட்டடத்தை மீட்டுத்தர கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு நிலையக் கட்டடம், வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை. இதனால் முல்லைத்தீவு மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே, இவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்தால் சிறந்த தாய் அமையும்.

மேலும் முல்லைத்தீவிலுள்ள விவசாயிகளிடம் மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் முதலாளிமார் அந்த விவசாயிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து 10 கிலோவுக்கு 3 கிலோவை இலவசமாகப் பெறுகின்றனர். 10 கிலோவுக்கு 3 கிலோவைப் பெறுகின்றனஎனில், 100 கிலோவுக்கு எத்தனை கிலோவை இலவசமாகப் பெறுவர்? இது விடயம் தொடர்பிலும் அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# பிறக்கும் குழந்தையும் கடனாளியா?

*நாடாளுமன்றில் ஐ.தே.க கேள்வி*

பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்குக் கடனாளியாக இருக்கிறது என்ற விவரம் அந்தக் குழந்தையின் சுயவிவரக் கோவையுடன் பதியப்படுமா என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு கொள்கைத் திட்டத்தின்மூலம் இலங்கையில் பிறக்கின்ற அனைத்துப் பிள்ளைகளினதும் சுயவிவரக் கோவையொன்று இப்பிள்ளைகளின் நிரந்தர வதிவிடத்துக்குரிய 'ஜனசபா' செயலகத்தில் பேணிவரப்படவேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளதா என பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த விசேட செயற்றிட்டங்கள் அமைச்சர் சந்திரசேன, "ஆம், அவ்வாறு முன்மொழியப்பட்டுள்ளது" என்றார்.

இதன்போது மேலதிக கேள்வியை எழுப்பிய சஜித் எம்.பி., "சேர், அப்படியாயின், பிறக்கும் அந்தப் பிள்ளையின் சுயவிவரக் கோவையில் இந்தக் குழந்தை 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்குக் கடனாளியாக உள்ளது என்ற விவரமும் பதியப்படுமா?" எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சந்திரசேன, "பிறக்கும் எந்தக் குழந்தையும் கடனாளியல்ல. கடனுக்கு பொறுப்புக் கூறவேண்டிய எந்தத் தேவையும் அந்தக் குழந்தைக்குக் கிடையாது" - என்றார்.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயம்

அம்பலாந்தொட்ட - மாமடுவ - கமராலகம பிரதேசத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த நபர் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விண்வெளித் தொழில்நுட்பம் விருத்தியில் இலங்கை முன்னோடி

கொழும்பு,டிசெ.14

விண்வெளித் தொழில் நுட்பத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைபடுத்தும் முன்னோடி நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தொழில் நுட்பங்கள் மற்றும் ஆய்வுகள் தொடர்பான அமைச்சர் டாட்லீ சம்பக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் ஆசிய வலயப் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் மூலம் வலய நாடுகளின் அபிவிருத்திக்கு விண்வெளித் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கானகட்டமைப்புஒன்றுஉருவாக்கப்பட்டது. இதில் முதலாவது முன்னோடி நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் விவசாயம், நீர்ப்பாசனம் இயற்கை வளங்களின் முகாமைத்துவம், கடல் கண்காணிப்பு செயற்பாடுகள் இடர் முகாமைத்துவம் போக்குவரத்து ஆகியவற்றின் செயற்திறன் மற்றும் பயன்களை மேம்படுத்துவதற்காக பூமியை அவதானிக்கும் செயற்கைக் கோள்களில் தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் அது சார்ந்த தொகுதிகளின் தொழில் நுட்பம் போன்றவற்றைப் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதனால் அபிவிருத்திக்கான இலக்கை அடைய முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இத்தகைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது கடினமாகக் காணப்படுவதால் அந்த தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்குமான இந்தச் செயற்றிட்டம் 'யுனெஸ்கப்' நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

விண்வெளி தொழில் நுட்பங்களை பயன்படுத்திக் காத்திரமான அபிவிருத்திக்கு மேலதிகமாக அதன் உப பிரிவுகளில் ஒன்றாகச்செயற்படும் விவசாயத் தொழில் சார்ந்த வறட்சிகள் பற்றிய முன்னோக்கு தொடர்பாக அந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வதன் வலயப் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படும் முன்னோடி நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-22-400)



பனை அபிவிருத்திச் சபையினால் மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வருடத்துக்கான பத்தாயிரம் பனை விதை நடுகைச் செயற்பாட்டில் வவுனியா கோமரசங்குளம் மகா வித்தியாலய வளாகத்தில் மாணவர்களால் பனை விதை வைபவ ரீதியாக நடப்பட்டது. (வ-423)

# தோட்டத் தொழிலாளர்கள் லயன்களில் வாழ்வதும் மனித உரிமை மீறல்தான்

*மலையக நிலைமை தொடர்பில் கமரூன் ஏன் வாய்திறப்பதில்லை? - இராதா எம்.பி. கேள்வி*



200 வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷாரால் அழைத்து வரப்பட்ட மலையக தோட்டத் தொழிலாளர்கள் இன்னும் லயன்களில்தான் வாழ்கின்றனர். இதுவும் மனித உரிமை மீறல்தான். இதைப் பற்றி கமரூன் ஏன் கதைப்பதில்லை என்று நேற்று முன்தினம் சபையில் கேள்வி எழுப்பினார் மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன்.

வெளிநாடுகள் தேள்போல் எம்மைக் கொட்டினாலும் ஜனாதிபதிதான் எம்மை பாதுகாத்துவருகின்றார் என்று கூறிய அவர், அதற்கு கதையொன்றையும் உதாரணம் காட்டிப் பேசினார்.

நாடாளுமன்றில்' நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டுறவு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய இராதா கிருஷ்ணன் எம்.பி., மலையக தோட்டப் புறங்களில் நவீன வசதிகளுடன் கூடிய சதொச நிலையங்களை அமைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மலையகத்துக்குப் பயணம் மேற்கொள்ளாமைக்கு இதன்போது அவர் கவலையும் வெளியிட்டார்.

"பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மலையகத்துக்கு வந்திருந்தார். இதன்போது தோட்டத் தொழிலாளர்கள் கண்காட்சியாகக் காட்டப்பட்டனர். இது மனித உரிமை மீறல் இல்லையா? என்றும் அவர் குறிப்பிட்டார்.

## விளக்கம்றியல் கைதிகளிடமிருந்து 15 கைத்தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, விளக்கமறியல் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் கைதிகளிடம் இருந்த 15 கையடக்கத் தொலைபேசிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

சிறைச்சாலையின் புலனாய்வுப்பிரிவு இந்தத் தேடுதல் நடவடிக்கையைமுன்னெடுத்துள்ளது. கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளின் சிம் அட்டைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக் களத்தின் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

இதனைத்தவிர, கைதிகளிடம் இருந்த 7 ஆயிரத்து 200 ரூபா பணத்தையும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைப்பற்றியுள்ளனர்.

## ரயிலில் மோதி குடும்பஸ்தர் பலி

மாத்தறை - வல்கம ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், பொல்ஹேன பகுதியைச் சேர்ந்த 35 வயதான குடும்பஸ்தரே பலியாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறையில் இருந்து காலி நோக்கிப் பயணித்த ரயிலிலேயே இவர் மோதியுள்ளார்.